December 2025

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு



# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™

# ஐ தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

**December 2025** சுவடி — 15 ஓலை — 10

## வணக்கம் பல

உலகின் கவனத்தையே ஈர்த்த போர், கடந்த சில ஆண்டுகளாக தொடர்கதையாய் இருந்து வரும் நிலையில், எந்தவிதமான அமைதிக்கும் உடன்படாமல் ஏற்படும் கசப்பான நிகழ்வுகளே தொடர்ந்து வருகிறது. பல்லாயிரக்கணக்கானவர்களின் குடும்பங்களும், தங்கள் வீடு நிலங்களை இழந்து அவதிப்படுபவர்களும், இந்தத் துன்பத்துக்கு ஒரு முடிவு வர வேண்டும் என்று விரும்புகிறார்கள். உலக நாடுகள், அமைதி திரும்பவும், எதேச்சாதிகாரப் போக்குக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றன.

அமைதிப் பேச்சு வார்த்தை, முழுத் தீர்வை வழங்காவிட்டாலும், முதல் படியாக இருதரப்பிலும் ஆயிரம் போர்க் கைதிகள் பரிமாற்றம் என்ற அடிப்படையில் சுமார் 2000 உயிர்களின் வினாக்குறி வியப்புக்குறியாகி மகிழ்ச்சி உண்டாக்கியுள்ளது. பேச்சுவார்த்தையின் முதல் கட்ட வெற்றியாக இதனைப் பார்க்கலாம். இதைப் போலவே காசா பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு முன் வந்தால், இந்த உலகம் தற்காலிகமாவது அமைதி பெறும்! வரக்கூடிய புத்தாண்டு அதற்கானத் தொடக்கப் புள்ளியாக இருக்கட்டும்!

பனி விழுவதும், நிலம் குளிர்வதுமான இந்த மார்கழி மாதத்தைத் தொடர்ந்து புத்தாண்டு பிறக்கவிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் வழமைபோல் வந்து போவதுதான் என்றாலும், ஒவ்வொரு ஆண்டு பிறப்பின்போதும், நல்ல பல உறுதிமொழிகளை மேற்கொண்டு அதில் வெற்றி கிடைக்க உழைப்பவர்கள் உண்டு! போர் மேகம் சூழ்ந்த நாடுகள் பலவற்றில் அமைதி நிலவ வேண்டும் என்ற பெரும் எதிர்பார்ப்புகள் இவ்வேளையில் எழத்தான் செய்கிறது. அந்த எதிர்பார்ப்புகளுக்கான முயற்சிகளும் பலன்களும் கிடைக்கும்போது அந்த ஆண்டு வாழ்வில் சிறப்பானதாகக் குறிக்கப்படுகிறது.

நிகழக்கூடியவை, நல்ல திருப்பங்களாக அமைந்தால், அதுவே சிறந்த ஆண்டாகக் குறிக்கப்படுகிறது. அதுபோல் அமையும் என்ற நம்பிக்கையுடன் வருகிற புத்தாண்டை வரவேற்போம்! தனி வழிகாட்ட வந்துதித்த உத்தமர் அவதரித்த மாதம் என்ற வகையில், உலக மக்கள் அனைவருக்கும், நத்தார் தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு, வழமை போலவே அரசியல், கலை, இலக்கியம், மருத்துவம் போன்ற நல்ல பல ஆக்கங்களைச் சுமந்து கொண்டு மலர்கிறது ‘அய் தமிழ்’ இதழ்!

வரவேற்று வாசியுங்கள்! நேசியுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...




அப்பக் கதை!

நண்பேன்டா!

தமிழே தமிழே

நத்தார் மகிமை

சேரமான் கனவு

தல வலம்

அறிவோம் தமிழர் பெருமை

சிவகாமியின் சபதம்

ரத்தத்தின் ரத்தமே

மருத்துவ தமிழ்

அஞ்சாமை பேதைமை!



**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*


(பொறுப்பு துறப்பு: இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது. படைப்புக்கள் யாவும் படைப்பாளிகளின் கருத்துக்களே. அதற்கு எவ்வகையிலும் அய் தமிழ் பொறுப்பேற்காது.)



# அப்பக்

## ரஷ்யா – யுக்ரேன் போர் முடிவு?

ரஷ்யா — யுக்ரேன் போரை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியின் ஒரு பகுதியாக, அமெரிக்க அதிகாரிகள் அபுதாபியில் ரஷ்ய பிரதிநிதிகளை சந்திக்க உள்ளதாக அமெரிக்கா உறுதிப்படுத்திய நிலையில், இருநாடுகளும் ஒருவர் மீது ஒருவர் ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளன.

கியவ் மீதான ரஷ்யாவின் தாக்குதல்களில் குறைந்தது 6 பேர் கொல்லப்பட்டதாக யுக்ரேன் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், ரஷ்யாவின் ரோஸ்டோவ் பிராந்தியத்தில் யுக்ரேன் நடத்திய தாக்குதலில் 3 பேர் உயிரிழந்ததாக ரஷ்ய அதிகாரிகள் கூறுகின்றனர்.

அமெரிக்காவின் சர்ச்சைக்குரிய 28 அம்ச சமாதான திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட மாற்றங்களை யுக்ரேன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி வரவேற்ற நிலையில், இந்த தாக்குதல்கள் அரங்கேறியுள்ளன.

1945—ம் ஆண்டுக்கு பிறகான ஐரோப்பாவின் மிக மோசமான போரில் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு வெள்ளிக்கிழமை ஒரு சிறிய ராஜதந்திர முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

யுக்ரேன் மற்றும் ரஷ்யாவின் பிரதிநிதிகள் மார்ச் 2022 க்குப் பிறகு முதல் முறையாக பேச்சுவார்த்தைக்கு நேருக்கு நேர் வந்தனர். இந்த சந்திப்பு, துருக்கியின் இஸ்தான்புல் நகரில் உள்ள பாஸ்ஃபரஸ்ஸின் கடற்கரையில் அமைந்துள்ள ஓட்டமான் காலத்து அரண்மனையில் நடைபெற்றது. துருக்கி மற்றும் அமெரிக்காவின் அழுத்தமும் ஊக்கமும் இரு தரப்பினரையும் அங்கு கொண்டு வர உதவியது.

இந்த சந்திப்பின் போது கைகுலுக்கல்கள் எதுவும் இல்லை. யுக்ரேனிய பிரதிநிதிகளில் பாதி பேர், தங்கள் நாடு தாக்குதலுக்கு உட்பட்டுள்ளது






# கதை!



என்பதை நினைவூட்டும் வகையில் ராணுவ சீருடைகளை அணிந்திருந்தனர். அந்த அறையில் யுக்ரேன், துருக்கி மற்றும் ரஷ்யாவின் கொடிகளும், ஒரு பெரிய மலர் அலங்காரமும் இருந்தது. யுக்ரேனில் நிரம்பி வழியும் கல்லறைகள் மற்றும் தகர்க்கப்பட்ட நகரங்களிலிருந்து வெகு தூரத்தில் அமைந்திருந்தது இந்த உலகம்.


*1000 போர்க் கைதிகளை விடுவிக்க இருதரப்பும் ஒப்புதல்*

துருக்கியின் வெளியுறவு அமைச்சர் ஹக்கன் ஃபிடான், இருதரப்பின் முன்னால் இரண்டு பாதைகள் உள்ளன என்று பிரதிநிதிகளிடம் கூறினார். அவரது கூறுப்படி, ஒன்று அமைதிக்கு வழிவகுக்கும், மற்றொன்று அதிக இறப்பு மற்றும் அழிவுக்கு வழிவகுக்கும்.

பேச்சுவார்த்தை இரண்டு மணி நேரத்திற்கும் குறைவாகவே நீடித்தது. அதற்குள்ளாகவே வலுவான கருத்து வேறுபாடுகள் வெளிப்பட ஆரம்பித்தன. ரஷ்யா "புதிய மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத கோரிக்கைகளை" முன்வைத்ததாக யுக்ரேனிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். போர் நிறுத்தத்திற்கு ஈடாக யுக்ரேன் அதன் சொந்த பிராந்தியத்தின் பெரும் பகுதிகளில் இருந்து அதன் துருப்புகளை திரும்பப் பெற வலியுறுத்துவதும் இதில் அடங்கும் என்று அவர் கூறினார்.




போர் நிறுத்தம் என்ற முக்கியமான விஷயத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றாலும் — எதிர்பார்த்தது போலவே — ஒரு உறுதியான






முடிவு பற்றிய செய்தி உள்ளது. இரு தரப்புகளுமே 1,000 போர்க் கைதிகளை விடுவிக்க ஒப்புக் கொண்டன. "இது மிகவும் கடினமான நாளின் நல்ல முடிவு" என்று யுக்ரேனின் வெளியுறவு துணை அமைச்சர் செர்ஹி கிஸ்லிட்ஸ்யா கூறினார். "1,000 யுக்ரேனிய குடும்பங்களுக்கு இது ஒரு நல்ல செய்தி" என்றார்.

இந்த பரிமாற்றம் விரைவில் நடைபெறும் என்று தனது நாட்டின் தூதுக்குழுவுக்கு தலைமை தாங்கிய யுக்ரேன் பாதுகாப்பு அமைச்சர் ருஸ்டம் உமெரோவ் தெரிவித்தார். "எங்களுக்கு தேதி தெரியும்," என்று கூறிய அவர், "நாங்கள் அதை இன்னும் அறிவிக்கவில்லை" என்றார்.




"அடுத்த கட்டம்" ஜெலன்ஸ்கி மற்றும் புதினுக்கு இடையிலான சந்திப்பாக இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். அந்த கோரிக்கையை "குறித்து வைத்துக்கொண்டுள்ளதாக" ரஷ்ய தூதுக்குழுவின் தலைவரான விளாடிமிர் மெடின்ஸ்கி தெரிவித்தார்.

அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை ஜெலன்ஸ்கி மற்றும் புதினுக்கு இடையிலான சந்திப்பாக இருக்க வேண்டும் என யுக்ரேனிய பாதுகாப்பு அமைச்சர் ருஸ்டம் உமெரோவ் தெரிவித்தார்.

நானும் புதினும் பேசினால் தான் ஏதாவது நடக்கும் : டிரம்ப்

ரஷ்ய தூதுக்குழு பேச்சுவார்த்தையில் திருப்தி அடைந்துள்ளதாகவும், தொடர்புகளைத் தொடர தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் யுக்ரேன் அதிபர் ஜெலன்ஸ்கியை "ஒரு கோமாளி மற்றும் தோல்வியுற்றவர்" என்று அழைத்ததில் இருந்து இது ஒரு மாற்றமாகும்.

ஆனால் யுக்ரேன் மற்றும் அதன் சில நட்பு நாடுகளிடையே வெறுமனே காலம் கடத்தவும், போர் நிறுத்தத்திற்கான சர்வதேச அழுத்தங்களிலிருந்து திசை திருப்புவதற்கும், 18வது சுற்று ஐரோப்பிய பொருளாதாரத் தடைகளைத் தடுப்பதற்குமான ராஜ தந்திரத்தில் ரஷ்யா ஈடுபடுகிறது என்பது போன்ற அச்சங்கள் உள்ளன.

இரு தரப்பினரும் இப்போது பேச்சுவார்த்தைக்கு வந்திருந்தாலும் அமெரிக்க அதிபர் டிரம்ப் தனக்கும் ரஷ்ய அதிபர் புதினுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளே முக்கியம் என்று கூறியுள்ளார். வியாழனன்று அவர் பேசும் போது, "புதினும் நானும் சந்தித்து பேசும் வரை எதுவும் நடக்கப் போவதில்லை." என்றார். அந்த சந்திப்பு எப்போது நடக்கும் என்று தெரியவில்லை. உயர்மட்ட பேச்சுவார்த்தைகள் "நிச்சயமாக தேவை" என்று கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறுகிறார்,

ஆனால் அதுபோன்ற சந்திப்புக்கு தயார் செய்ய நேரம் எடுக்கும். அந்த பேச்சுவார்த்தைகள் எப்போது நடந்தாலும், யுக்ரேன் அதிபர்

ஜெலன்ஸ்கிக்கு அதில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட வாய்ப்பில்லை.

உக்ரைன் நேட்டோவில் சேர முடியாது என்று ஒப்புக்கொள்வதுடன் கிரிமியா, லுஹான்ஸ்க் மற்றும் டொனெட்ஸ்க் ஆகியவை ரஷ்ய பிரதேசங்களாக அங்கீகரிக்கப்படுகிறது. இந்த 28 அம்ச அமைதித் திட்டத்தால் யாருக்கு அதிக லாபம் — இழப்பு ஏற்படும் என்பதை இலகுவாக கணிக்க முடியும்.

உக்ரைன் போர் முடிவுறுமா?

ரஷ்யா—உக்ரைன் அமைதித் திட்டம் தொடர்பான 28 அம்ச ஒப்பந்தத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஒப்புதல் அளித்துள்ளார். மேலும் உக்ரைன் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் தகுதியைப் பெறுவதுடன், உக்ரைன் 100 நாட்களில் தேர்தலை நடத்தும்




என ட்ரம்ப் இந்த அமைதித் திட்டம் மூலம் அறிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் மூலம் உக்ரைனில் ரஷ்ய மொழிக்கு அதிகாரப்பூர்வ மொழி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். மற்றும் ரஷ்ய ஆர்த்தடாக்ஸ் மத தேவாலய உள்ளூர் கிளையை அங்கீகரிக்க வேண்டும் என்ற நிபந்தனைகளையும் உள்ளடக்கியதாக இருக்கிறது.

அமைதி திட்டத்திற்கு ட்ரம்ப் ஒப்புதல்:

ஆனாலும் ரஷ்யாவின் பெரும்பாலான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதே இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனை என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டால் இரு நாடுகளுக்கும் இடையிலான போருக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்று இராஜதந்திர நிபுணர்கள் நம்புகின்றனர். அமெரிக்க மற்றும் ரஷ்ய அதிகாரிகளால் கூட்டாக உருவாக்கப்பட்ட ஒப்பந்த முன்மொழிவுகள், ட்ரம்பின் சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காஃப் மூலம் உக்ரைனுக்கு தெரிவிக்கப்பட்டன.

டான்பாஸ் பகுதியை ரஷ்யாவிற்கு முழுமையாக வழங்குவது உள்ளிட்ட விடயங்கள் இந்த ஒப்பந்தத்தில் உள்ளன. இந்த அமைதி திட்டத்தில் உக்ரைன் இராணுவத்தின் ஆயுதத் திறன்களைக் குறைப்பது மற்றும் அமெரிக்க இராணுவ




ஒத்துழைப்பை முடிவுக்குக் கொண்டு வருவது ஆகியவை அடங்கும் என்ற தகவல்களும் உள்ளன.

அத்துடன் ரஷ்யாவின் மூலோபாய இலக்குகளை குறிவைக்க நீண்ட தூர ஏவுகணைகளுக்கான உக்ரைனின் நீண்டகால கோரிக்கையை நிராகரிக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேட்டோ மேலும் விரிவடையாது:

ட்ரம்ப் அமைதித் திட்டம் மூலம் உக்ரைனின் இறையாண்மை உறுதிப்படுத்தப்படும். ரஷ்யா அண்டை நாடுகளை ஆக்கிரமிக்காது என்றும்,

நேட்டோ மேலும் விரிவடையாது என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து பாதுகாப்புப் பிரச்சினைகளையும் தீர்க்கவும், பதற்றத்தைக் குறைப்பதற்கான நிலைமைகளை உருவாக்கவும், அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் ரஷ்யாவிற்கும் நேட்டோவிற்கும் இடையே ஒரு வலுவான உறவு ஏற்படுத்தப்படும்.

மேலும் உக்ரைன் நம்பகமான பாதுகாப்பு உத்தரவாதங்களை பெறும். உக்ரைனின் ஆயுதப் படைகளின் அளவு 600,000 ஆக அமையும். மேலும் உக்ரைன் நேட்டோவில் சேராது என்பதை அதன் அரசியலமைப்பில் சேர்க்க ஒப்புக்கொள்கிறது. மேலும் எதிர்காலத்தில் உக்ரைனை ஏற்றுக்கொள்ளாது என்ற ஒரு விதியை அதன் சட்டங்களில் சேர்க்க நேட்டோவும் ஒப்புக்கொள்கிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைன் :

ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமித்தால், ஒரு தீர்க்கமான ஒருங்கிணைந்த இராணுவ பதிலுக்கு கூடுதலாக, அனைத்து உலகளாவிய தடைகளும் மீண்டும் நிலைநிறுத்தப்படும். உக்ரைன் இராணுவம் மாஸ்கோ அல்லது செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் காரணமின்றி ஏவுகணையை ஏவினால், இந்த பாதுகாப்பு உத்தரவாதம் செல்லாததாகக் கருதப்படும்.

மேலும் உக்ரைன் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் உரிமையைத் தக்க வைத்துக் கொள்வதுடன், ரஷ்யா உலகப் பொருளாதாரத்தில் மீண்டும் ஒருங்கிணைக்கப்படும். ரஷ்யா மீதான தடைகளை நீக்குவது படிப்படியாகவும் தனிப்பட்ட நாடுகளின் அடிப்படையிலும் விவாதிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்படும்.




G8 க்கு ரஷ்யா திரும்பும்:

மீண்டும் G8 க்கு திரும்ப ரஷ்யா அழைக்கப்படும். முடக்கப்பட்ட சொத்துக்கள் உக்ரைனில் அமெரிக்கா தலைமையிலான மறுசீரமைப்புக்கு பயன்படுத்தப்படும். அத்துடன் மேலதிக முதலீட்டு முயற்சிகளாக, முடக்கப்பட்ட ரஷ்ய சொத்துக்களில் 100 பில்லியன் அமெரிக்க டாலர்கள் முதலீடு செய்யப்படும். இந்த முயற்சியிலிருந்து அமெரிக்கா 50% லாபத்தைப் பெறும். உக்ரைனின் மறுசீரமைப்புக்குக் கிடைக்கும் மொத்த முதலீட்டை அதிகரிக்க ஐரோப்பா மேலும் 100 பில்லியன் அமெரிக்க டாலர்களை முதலீடு செய்யும்.

மீதமுள்ள முடக்கப்பட்ட ரஷ்ய சொத்துக்கள், தீர்மானிக்கப்படும் பகுதிகளில் கூட்டு அமெரிக்க—ரஷ்ய திட்டங்களை செயல்படுத்தும் ஒரு தனி அமெரிக்க—ரஷ்ய முதலீடாக செய்யப்படும். இந்த நிதி இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதையும்,

இதனால் நேட்டோ உக்ரைனில் துருப்புக்களை நிறுத்தாது என்றும் ஒப்புக்கொள்கிறது. ஐரோப்பிய போர் விமானங்கள் போலந்தில் மட்டுமே நிறுத்தப்படும்.






ஜபோரிஜியா அணு மின் நிலையம் ஐநாவின் மிகிணிகி மேற்பார்வையின் கீழ் மீண்டும் திறக்கப்படும். மேலும் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையில் சமமாகப் பிரிக்கப்படும் (50:50) இரு நாடுகளும் பள்ளிகளிலும் சமூகத்திலும் வெவ்வேறு கலாச்சாரங்களின் புரிதல் மற்றும் சகிப்புத்தன்மையை ஊக்குவிக்கும் மற்றும் இனவெறி மற்றும் தப்பெண்ணத்தை நீக்கும் கல்வித் திட்டங்களை அறிமுகப்படுத்தும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மீண்டும் மோதலுக்கு வராமல் இருக்க வலுவான உந்துதலை உருவாக்குவதற்காக பகிரப்பட்ட நலன்களை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டிருக்கும். அணு ஆயுதப் பரவல் தடை மற்றும் ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பான ஒப்பந்தங்களின் செல்லுபடியை நீட்டிக்க அமெரிக்காவும் ரஷ்யாவும் ஒப்புக் கொள்ளும். இதில் **START-1** என்ற திட்டமும் அடங்கும். அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தின்படி உக்ரைன்

அணு ஆயுதப் பரவல் அல்லாத நாடாக இருக்க ஒப்புக்கொள்கிறது.

மத சகிப்புத்தன்மை மற்றும் மொழியியல் சிறுபான்மையினரின் பாதுகாப்பு குறித்த ஐரோப்பிய ஒன்றிய விதிகளை உக்ரைன் ஏற்றுக்கொள்ளும் என்று அமெரிக்க அதிபர் தெரிவித்துள்ளார். அனைத்து பாகுபாடான நடவடிக்கைகளையும் நீக்கவும், உக்ரேனிய மற்றும் ரஷ்ய ஊடகங்கள் மற்றும் கல்வியின் உரிமைகளை உத்தரவாதம் செய்யவும் இரு நாடுகளும் ஒப்புக்கொள்கின்றன.







உக்ரைனில் நாஜி சித்தாந்த தடை:

உக்ரைனில் அனைத்து நாஜி சித்தாந்தமும் செயல்பாடும் நிராகரிக்கப்பட்டு தடை செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வரும் நிலையில் இந்த தீர்மானம் உள்ளது.

கிரிமியா, லுஹான்ஸ்க் மற்றும் டொனெட்ஸ்க் ஆகியவை ரஷ்ய பிராந்தியங்களாக அங்கீகரிக்கப்படும். கொர்சன் மற்றும் சபோரிஷியா ஆகியவை எதிர்கால நடைமுறையில் அங்கீகாரத்தை உறுதி செய்யும். ஆனாலும் ரஷ்யா தற்போது கட்டுப்படுத்தும் ஐந்து பிற இணைக்கப்பட்ட பிரதேசங்களான கார்கிவ், சுமி மற்றும் டினிப்ரோபெட்ரோவ்ஸ்க்கை கைவிட வேண்டிய நிலையும் உள்ளது.

உக்ரேனியப் படைகள் தற்போது

அவர்கள் கட்டுப்பாட்டில் உள்ள டொனெட்ஸ்க் பகுதியிலிருந்து முழுமையாக விலகும். எதிர்கால பிராந்திய ஏற்பாடுகள் ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு, ரஷ்ய கூட்டமைப்பு மற்றும் உக்ரைன் இரண்டும் இந்த ஏற்பாடுகளை வலுக்கட்டாயமாக மாற்ற வேண்டாம் என்று உறுதியளிக்கின்றன. இந்த உறுதிப்பாட்டை மீறும் பட்சத்தில் எந்தவொரு




பாதுகாப்பு உத்தரவாதங்களும் பொருந்தாது என்றும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டினிப்ரோ நதியை உக்ரைன் வணிக ரீதியாகப் பயன்படுத்துவதை ரஷ்யா தடுக்காது, மேலும் கருங்கடல் முழுவதும் தானியங்களை இலவசமாக கொண்டு செல்வது குறித்து ஒப்பந்தங்கள் எட்டப்படும்.




மீதமுள்ள அனைத்து போர்க் கைதிகளும் குழந்தைகள் உட்பட அனைத்து பொதுமக்கள் கைதிகளும் பணயக் கைதிகளும் திருப்பி அனுப்பப்படுவார்கள்.

100 நாட்களில்

உக்ரைன் தேர்தல்:

மேலும் இந்த ஒப்பந்தம் கையெழுத்தான 100 நாட்களுக்குப் பிறகு உக்ரைன் தேர்தலை நடத்த வேண்டும். மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரும் போரின் போது செய்யப்பட்ட நடவடிக்கைகளுக்கு முழு மன்னிப்பு பெறுவர். மேலும் எதிர்காலத்தில் உரிமைகோரல்களைப் பதிவு செய்யவோ அல்லது புகார்களைத் தொடரவோ கூடாது. இந்த ஒப்பந்தம் சட்டப்பூர்வமாக பிணைக்கப்படும்.

இதன் செயல்படுத்தல் ஜனாதிபதி டிரம்ப் தலைமையிலான அமைதி கவுன்சிலால் கண்காணிக்கப்பட்டு உத்தரவாதம் அளிக்கப்படும். மீறல்கள் ஏற்பட்டால் முன்னரே தீர்மானிக்கப்பட்ட தடைகள் மீண்டும் பொருந்தும். இந்த ஒப்பந்தத்தில் அனைத்து தரப்பினரும் ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டவுடன், இரு தரப்பினரும் ஒப்புக் கொள்ளப்பட்ட நிலைப்பாடுகளுக்கு பின்வாங்கியவுடன் உடனடியாக போர்நிறுத்தம் அமலுக்கு வரும். இதன் மூலம் ஒப்பந்தத்தை செயல்படுத்தத் தொடங்கலாம்.

மேலும் மியாமியில் உக்ரைனின் தேசிய பாதுகாப்புத் தலைவர் ருஸ்தம் உமெரோவைச் சந்தித்த விட்காஃப், உக்ரைன் நீண்டகாலமாக நிராகரித்து வந்த விதிகள் உட்பட ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்று பரிந்துரைத்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்ய தூதரும் புடினின் நம்பிக்கைக்குரியவருமான கிரில் டிமிட்ரியேவ் மற்றும் உக்ரைன் அதிகாரிகள் இந்த ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தைகளை தொடங்கியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அதே நேரத்தில், ரஷ்யாவுடனான இராஜதந்திர உறவுகளில் முன்னேற்றத்தைக் காட்ட டிரம்ப் நிர்வாகம் உக்ரைன் மீது ஒப்பந்தத்தைத் திணிப்பதாக சில விமர்சனங்கள் உள்ளன.

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്




CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा




ஒப்பந்தத்தின் விதிமுறைகள் சமநிலையற்றவை என்றும், உக்ரைனின் இறையாண்மையைக் கூட கேள்விக்குள்ளாக்குகின்றன என்றும் சில சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யாவுடனான போரை முடிவுக்குக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்ட அமைதி ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்காவுடன் பொதுவான இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. இந்நிலையில், ரஷ்ய ஜனாதிபதியை மொஸ்கோவில் சந்திக்க தனது சிறப்பு தூதுவருக்கு உத்தரவிட்டுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.




முன்னதாக புதிய வரைவு ஒப்பந்தம் குறித்து ரஷ்யாவிடம் இன்னும் ஆலோசனை நடத்தப்படவில்லை ரஷ்ய தரப்பு தெரிவித்திருந்தது.

மேலும், திட்டத்தில் முன்வைக்கப்படும் திருத்தங்களை ஏற்காமல் போகலாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அமெரிக்காவின் ஆரம்ப கட்டமைப்பிற்கு ஆதரவாக இருந்தபோதிலும், அமைதி ஒப்பந்தம் தொடர்பான ஒப்பந்தம் கணிசமான மாற்றங்களுக்கு உட்பட்டிருந்தால் நிலைமை அடிப்படையில் வேறுபட்டிருக்கும் என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் கூறியுள்ளார்.


இந்நிலையில், காலை நிலவரப்படி புதிய திட்டத்தின் நகல் கிடைக்கவில்லை என்று லாவ்ரோவ் தெரிவித்துள்ளார். மேலும், ஐரோப்பா, அமெரிக்கவின் அமைதி முயற்சிகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார். எவ்வாறாயினும், ரஷ்யாவின் நிலைப்பாடு குறித்து அமெரிக்க அதிகாரிகள் பகிரங்க கருத்துகளை வெளியிடவில்லை.

எனினும்,அமெரிக்கஇராணுவச்செயலாளர்டான் டிரிஸ்கோலும் ரஷ்ய பிரதிநிதிகளும் அபுதாபியில் சந்தித்து பேசியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆழமாக முரண்படும் சில பிரச்சினைகள் இதுவரை தீர்க்கப்படாமல் இருப்பதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்




## சொல்றாங்க... சொல்றாங்க...



"சினிமா, உலக வேறுபாடுகளை மதிக்கவும், நமக்கெல்லாம் ஒரே மனிதத் தன்மை இருப்பதையும் நினைவூட்டுகிறது. சினிமா என் தொழில் மட்டும் அல்ல; அது நான் யார் என்பதையும் காட்டுகிறது."

**டாம் குருஸ்**

(அடேங்கப்பா! படப்பிடிப்புத் தளத்தில் மட்டும்தான் பிரமாதப் படுத்துவீங்கன்னு பார்த்தா, தத்துவமும் பிரமாதமா இருக்கே! )



"நாங்க தற்குறி இல்ல. ஆச்சரியக் குறி!"

**விஜய்**


(அதை நீங்க நிருபிச்சா வினாக் குறி எல்லாம் கூட ஆச்சரியக் குறியா மாறிடும்!)



ஆன்மீக ரீதியாக பணக்காரர்களாக இருக்க வேண்டும்!"

**ஏ.ஆர்.ரஹ்மான்**

(இதுவே ஒரு பணக்காரர் சொல்லும்போது எடுபடும். ஏழை சொல் அம்பலம் ஏறுமா?)



"இந்தியாவில் பெண்களுக்கான பாதுகாப்பு குறைவு"

**கீர்த்தி சுரேஷ்**

(என்னங்க இப்படி பளிச்சுன்னு உண்மையை சொல்லிட்டீங்க! பட வாய்ப்பு குறைஞ்சிடப் போகுது! பக்குவமா கொஞ்சம் சுத்தி வளைச்சி பேசுங்க!)

# நண்பேண்டா!

### இந்தியா வரும் ரஷ்ய அதிபர்– ரஷ்ய எண்ணெய் இறக்குமதியில் வீழ்ச்சி

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின், வரும் டிசம்பர் 4 மற்றும் 5—ஆம் தேதிகளில் நடைபெறும் 23—வது இந்தியா—ரஷ்யா வருடாந்தர உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியாவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். . இந்தப் பயணத்திற்கு முன்னதாக, இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ரஷ்யாவுக்குச் சென்றுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பின் பேரில் இந்தப் பயணம் உறுதி செய்யப்பட்டுள்ளது. ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதன் காரணமாக அமெரிக்க அரசு இந்தியா மீது வரி விதித்தது முதல் இந்தியா — ரஷ்யா உறவுகள் வலுவடைந்து வருகின்றன. இந்த சூழலில் இந்த பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது. இந்தப் பயணத்தின்போது, அதிபர் புதின் பிரதமர் மோடியுடன் இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்துவார். அத்துடன், ரஷ்ய அதிபரை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, குடியரசுத் தலைவர் மாளிகையில் வரவேற்று விருந்தளிக்கிறார்.

புதினின் இந்த இந்தியப் பயணம், இருதரப்பு உறவுகளின் முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கும், 'சிறப்பு மூலோபாயக் கூட்டாண்மையை' வலுப்படுத்துவதற்கான தொலைநோக்கு திட்டத்தை அமைப்பதற்கும், பரஸ்பர ஆர்வமுள்ள பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்னைகள் குறித்துக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்கும் இந்திய மற்றும் ரஷ்யத் தலைவர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.




பிப்ரவரி 2022 இல் யுக்ரேன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியதில் இருந்து, ரஷ்யா மற்றும் இந்தியா இடையேயான உறவுகள் மீது மேற்கு நாடுகளின் அழுத்தம் அதிகரித்துள்ளது. குறிப்பாக, இந்தியா ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. மேற்கு நாடுகளின் அழுத்தம் இப்போது தாக்கத்தை ஏற்படுத்துவது போல் தெரிகிறது. இந்திய ஏற்றுமதிப் பொருட்களுக்கு அமெரிக்கா 50% வரி **(tariff)** விதித்த பிறகு, ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வது எளிதாக இருக்காது என்று கூறப்பட்டது.

இரு நாடுகளின் வர்த்தக உறவுகளில் எரிசக்திப் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும் நிலையிலும் புதினின் இந்திய வருகைக்கு முன்பு ரஷ்யாவிலிருந்து இந்தியாவுக்கு எண்ணெய் இறக்குமதி குறைந்துள்ளது. ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் கொள்முதல் தொடர்ந்து குறைந்து வருவதாக, டெல்லியை தளமாகக் கொண்ட சிந்தனைக் குழுவான குளோபல் டிரேட் ரிசர்ச் இனிஷியேட்டிவின் தலைவர் அஜய் ஸ்ரீவஸ்தவா கூறுகிறார்.

"இந்திய நிறுவனங்கள் ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் கொள்முதல்களை ஏற்கெனவே குறைத்துவிட்டன. அதிகாரப்பூர்வ வர்த்தகத் தரவுகள், அக்டோபர் 2025 இல் ரஷ்யாவிடமிருந்து மொத்த இறக்குமதி ஆண்டுக்கு ஆண்டு 27.7 சதவிகிதம் குறைந்துள்ளதைக் காட்டுகிறது. அக்டோபர் 2024 இல் 6.7 பில்லியன் டாலர்களாக இருந்தது, இந்த ஆண்டு 4.8 பில்லியன் டாலர்களாகக் குறைந்துள்ளது. இந்த இறக்குமதிகளில் பெரும்பாலானவை கச்சா எண்ணெய் என்பதால், இது ரஷ்ய எண்ணெய் கொள்முதலில் 30 சதவிகிதத்திற்கும் அதிகமான வீழ்ச்சியைக் காட்டுகிறது," என அஜய் ஸ்ரீவஸ்தவா கூறுகிறார்.

"ரோஸ்நெஃப்ட் மற்றும் லுகோயில் போன்ற நிறுவனங்களை இலக்காகக் கொண்ட அமெரிக்கத் தடைகளுக்கு இந்திய சுத்திகரிப்பு நிறுவனங்கள் இணங்குகின்றன. இந்த நிறுவனங்கள் ரஷ்யாவின்

# நண்பேன்டா!


## பெர்ன்ட் டெபஸ்மேன்

57 சதவிகித எண்ணெயை உற்பத்தி செய்கின்றன. இந்த நிறுவனங்களிடம் இருந்து கொள்முதல் மிக வேகமாக குறைந்துள்ளது. இப்போது, தடைப் பட்டியலில் இல்லாத ரஷ்ய நிறுவனங்களிடமிருந்து மட்டுமே இறக்குமதி தொடர்கிறது, இது அமெரிக்காவின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இந்தியா நடவடிக்கை எடுத்து வருவதைக் காட்டுகிறது,” என ஸ்ரீவஸ்தவா கூறுகிறார். முன்னதாக, ரஷ்யா விஷயத்தில் மேற்கு நாடுகளின் அழுத்தத்திற்கு இந்தியா அடிபணியாது என்று கூறப்பட்டது.

அமெரிக்காவின் அழுத்தம் இருந்தபோதிலும், இந்தியா மற்றும் ரஷ்யாவின் உறவுகளில் பெரிய மாற்றம் இருக்காது என்று டெல்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வுகள் துறைப் பேராசிரியர் ராஜன் குமார் கருதுகிறார்.

“இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான உறவுகளில் வர்த்தகம் ஒரு முக்கிய அம்சம் அல்ல. யுக்ரேன் போருக்குப் பிறகு இந்தியா ரஷ்யாவிடம் இருந்து அதிக எண்ணெய் வாங்கத் தொடங்கியிருந்தாலும், இரு



நாடுகளின் உறவுகள் பரஸ்பர வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டவை அல்ல. எண்ணெய் கொள்முதல் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் 67 பில்லியன் டாலர்களை எட்டியிருக்கலாம், ஆனால் அதற்கு முன்பு அது 10 பில்லியன் டாலர்களுக்கும் குறைவாகவே இருந்தது,” என பேராசிரியர் ராஜன் குமார் கூறுகிறார்.

“பாதுகாப்பு ஒப்பந்தங்கள் இந்தியா




மற்றும் ரஷ்யா இடையேயான நட்புறவில் மிக முக்கிய பங்காற்றியுள்ளது. இந்தியா இப்போது மற்ற நாடுகளிடமிருந்து ஆயுதங்களை வாங்கத் தொடங்கியிருந்தாலும், தற்போதைய புவிசார் அரசியல் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, ரஷ்யா இந்தியாவுக்கு வழங்கும் ஆயுதங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை வேறு எந்த நாடும் வழங்காது," என்கிறார் ராஜன்குமார்.

டிசம்பரில் நடக்கவிருக்கும் எண்ணெய் விநியோக புள்ளிவிவரங்களைப் பார்த்தால், இந்திய எண்ணெய் நிறுவனங்கள் ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதைக் கணிசமாகக் குறைத்துள்ளன என்பது தெரியும். ப்ளூம்பெர்க் தகவலின்படி, இந்தியாவின் ஐந்து பெரிய சுத்திகரிப்பு நிறுவனங்கள் டிசம்பர் மாதத்திற்கான எண்ணெய் கொள்முதலுக்கு எந்த ஆர்டரையும் கொடுக்கவில்லை.

இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் இந்திய ஏற்றுமதிக்கு 50 சதவிகித வரியை விதித்தார். அதன் பிறகும் ரஷ்யாவிடமிருந்து இந்தியாவின் எண்ணெய் கொள்முதல் உடனடியாகக் குறையவில்லை. ஆனால், நவம்பரில் ரஷ்ய எண்ணெய் நிறுவனங்களான ரோஸ்நெஃப்ட் மற்றும் லுகோயில் மீது அமெரிக்கத் தடை விதிக்கப்பட்ட பிறகு, இந்தியாவின் பெரும்பாலான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை கிட்டத்தட்ட நிறுத்திவிட்டன.




எண்ணெய் கொள்முதல் குறித்த நிகழ்நேரத் தரவை வழங்கும் கெப்லர் நிறுவனத்தின்படி, நவம்பர் 1 முதல் 17 வரை இந்தியா ரஷ்யாவிடம் இருந்து தினமும் 6,72,000 பேரல் எண்ணெயைக் கொள்முதல் செய்தது. இது அக்டோபர் மாதத்தில் வாங்கப்பட்ட அளவான ஒரு நாளைக்கு 18 லட்சம் பேரல்களை விட மிகக் குறைவு. இருப்பினும், இரண்டு ரஷ்ய எண்ணெய் நிறுவனங்கள் மீதான தடையைத் தொடர்ந்து, ரஷ்யாவின் மற்ற இடங்களுக்கான எண்ணெய் ஏற்றுமதி 28 சதவிகிதம் வரை குறைந்துள்ளது.

இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கு இடையே நடந்து வரும் வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் இதில் முக்கியப் பங்காற்றியதாகக் கூறப்படுகிறது. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இந்தியா மற்றும் அமெரிக்கா ஒரு ஒப்பந்தத்தை எட்டுவதற்கு மிக அருகில் இருப்பதாகக் கூறியிருந்தார். இந்த வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்காவிடமிருந்தும் கச்சா எண்ணெய் வாங்க இந்தியா உறுதியளித்துள்ளதாக ப்ளூம்பெர்க் தெரிவித்துள்ளது. சமீபத்தில், இந்திய எண்ணெய் நிறுவனங்கள் அமெரிக்க எல்பிஜி சப்ளையர்களிடம் இருந்து எல்பிஜி வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இப்போது இந்தியாவின் எல்பிஜி தேவைகளில் 10 சதவிகிதம் அமெரிக்காவிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும்.

ரோஸ்நெஃப்ட் நிறுவனத்தைத் தவிர லுகோயில் மீதும் அமெரிக்கா தடை விதித்துள்ளது. அக்டோபர் மாதம், ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்த இந்தியா ஒப்புக்கொண்டதாக டிரம்ப் கூறியிருந்தார். இந்த ஆண்டு இந்தியாவுக்குத் தேவைப்படும் கச்சா எண்ணெயில் 36 சதவிகிதத்தை ரஷ்யாவிடம் இருந்து இந்தியா வாங்கியுள்ளது.

அமெரிக்காவால் இரண்டு ரஷ்ய எண்ணெய் நிறுவனங்கள் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அஜய் ஸ்ரீவஸ்தவா பேசுகையில், "டிரம்ப் இரண்டு நிறுவனங்களைத் தடை செய்திருந்தாலும், மறைமுகமாக இது அனைத்து ரஷ்ய எண்ணெய் நிறுவனங்களுக்கும் தடை விதிப்பது போன்றது.

அமெரிக்கா இந்தியாவின் ஏற்றுமதிக்கு கூடுதலாக 25 சதவிகித வரி விதித்துள்ளது. இந்தியா ரஷ்ய எண்ணெயைப் பயன்படுத்தி 'போரைத் தூண்டுகிறது' என்று குற்றம் சாட்டியுள்ளது. இந்த அபராதம் ரோஸ்நெஃப்ட் அல்லது லுகோயில் போன்ற தடை செய்யப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து எண்ணெய் வாங்கினால் மட்டுமல்ல, சட்டப்பூர்வமான முறையில் வாங்கப்பட்டாலும் கூட, எந்தவொரு ரஷ்ய கச்சா எண்ணெய் மீதும் இது பொருந்தும். இந்தியாவுக்கு இரண்டு தெளிவான தேர்வுகள் உள்ளன — மலிவான




ரஷ்ய எண்ணெயை வாங்கி அமெரிக்காவின் அதிருப்தியை எதிர்கொள்வது, அல்லது மத்திய கிழக்கு மற்றும் அமெரிக்காவிடம் இருந்து அதிக விலைக்கு எண்ணெய் வாங்குவதைத் தேர்ந்தெடுத்து உள்நாட்டில் விலைகள் உயரும் அபாயத்தை எதிர்கொள்வது," என்று கூறினார். ஆயுதங்கள் மற்றும் நவீன ராணுவத் தொழில்நுட்பங்களைப் பொறுத்தவரை, இந்தியாவின் தேவைகளில் 60 முதல் 70 சதவிகிதம் இன்னும் ரஷ்யாவைச் சார்ந்து தான் உள்ளது, என பேராசிரியர் ராஜன் குமார் கூறினார்.

"உலகில் இந்த நேரத்தில் உண்மையான மற்றும் வர்த்தகப் போர்கள் இரண்டும் நடந்து கொண்டிருக்கின்றன. மறுபுறம், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் நிலைப்பாடு மிகவும் நிச்சயமற்றதாக இருக்கிறது. எனவே, அமெரிக்காவுடனான தனது உறவைச் சீராக்க இந்தியா முயற்சி செய்கிறது என்றாலும், அது டிரம்பை முழுமையாக நம்ப முடியாது. கடந்த ஏழு தசாப்தங்களாக இந்தியா மற்றும் ரஷ்யாவின் உறவுகள் வலுவாகவும் நிலையானதாகவும் இருந்து வருகின்றன. இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரும், கடந்த 50 ஆண்டுகளாக உலக அரசியலில் இரு நாடுகளின் உறவுகள் நிலையானது." எனக் கூறியிருந்தார்.

பனிப்போர் காலத்தில் இந்தியா தன்னை 'அணி சேரா நாடு' என்று கருதியது, ஆனால் 1971 உள்நாட்டுப் போரில் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ஆதரவளித்தபோது, சோவியத் யூனியனுடனான இந்தியாவின் நெருக்கம் அதிகரித்தது. கடந்த மூன்று தசாப்தங்களில் விண்வெளி, அணுசக்தி மற்றும் பாதுகாப்புத் துறைகளில் ரஷ்யாவுடன் இந்தியாவின் ஒத்துழைப்பு அதிகரித்துள்ளது. ஆனால், சமீபத்திய தசாப்தங்களில் அமெரிக்காவுடனான இந்தியாவின் உறவும் மேம்பட்டுள்ளது. இதன் காரணமாக பாதுகாப்பு விஷயங்களில் இந்தியா ரஷ்யாவைச் சார்ந்திருப்பது குறைந்துள்ளது.




மார்ச் 31 உடன் முடிவடைந்த கடந்த நிதியாண்டில் இந்தியா மற்றும் ரஷ்யாவுக்கு இடையேயான வர்த்தகம் சாதனை அளவாக 68.7 பில்லியன் டாலரை எட்டியது. இதில் இந்தியா அதிக அளவில் இறக்குமதி செய்துள்ளது என்பது தெளிவாகிறது. 68.7 பில்லியன் டாலரில் இந்தியாவின் ஏற்றுமதி வெறும் 4.9 பில்லியன் டாலர் மட்டுமே.

எண்ணெய், எரிவாயு மற்றும் மருந்துத் துறையில் இந்தியாவும் ரஷ்யாவில் முதலீடு செய்துள்ளது. ரஷ்யாவிடமிருந்து இந்தியாவுக்கு சர்வதேசச் சந்தையை விட மலிவாக எண்ணெய் கிடைக்கிறது. ஆனால் விலை வித்தியாசம் தொடர்ந்து குறைந்து வருகிறது. ப்ளூம்பெர்க் செய்தியின்படி, அக்டோபர் 15 வரை, ரஷ்யாவிடம் இருந்து இந்தியாவுக்கு ஒரு பேரல் எண்ணெய் நிலையான விலையைவிட 2 முதல் 2.5 டாலர் வரை குறைவாகக் கிடைத்தது. ஆனால் 2023 இல் இந்த வேறுபாடு ஒரு பேரலுக்கு 23 டாலருக்கும் அதிகமாக இருந்தது.

இந்தியாவில் ரஷ்யாவின் முதலீடு எண்ணெய் மற்றும் எரிவாயுவைத் தவிர மருந்துகள், வங்கி, ரயில்வே மற்றும் எஃகுத் துறைகளில் உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.




## மாரியம்மன்— தமிழ் மண்ணின் தெய்வ அணங்கு

மாரியம்மன் வழிபாடு என்பது தமிழர் பண்பாட்டின் அடிநாதத்தில் வேரூன்றிய தாய்த் தெய்வக் கோட்பாட்டின் வெளிப்பாடாகும். இவ்வாய்வு, மாரியம்மன் ஒரு தூய தமிழ்த் தெய்வம் என்பதை வலியுறுத்துகிறது. அவள் மழை, வளம், நோய்த் தடுப்பு, பாதுகாப்பு ஆகிய இயற்கை நிமித்தங்களை ஒருங்கே குறிக்கும் உயிர்மெய் தெய்வம்.

பிற்காலங்களில் வடமொழிப் புராணங்களின் தாக்கத்தால், குறிப்பாக ரேணுகா தேவி கதையுடன் இணைக்கப்பட்டு, மாரியம்மனின் அடையாளம் திரிக்கப்பட்டது. இந்த ஆரியமயமாக்கல் முயற்சிகளை இக்கட்டுரை விமர்சன ரீதியாகப் பகுப்பாய்வு செய்கிறது.

‘மாரி’ எனும் சொல்லின் தமிழ்ச் சொற்பிறப்பியல், வழிபாட்டு முறை, சமூகச் சார்பு ஆகியவற்றின் மூலம், மாரியம்மன் வழிபாடு ஆரியக் கலப்பின்றி தமிழ்மண்ணின் தன்னிகரற்ற ஆன்மீக மரபாக இருப்பது இவ்வாய்வின் முக்கியக் கண்டுபிடிப்பாகும்.

மாரியம்மன் வழிபாடு என்பது ஒரு தனியுருப் பாகமான கிராமத்தெய்வ வழிபாடு மட்டுமல்ல; அது தமிழர் வாழ்வியலின் மையக் கோட்பாட்டான தாய்மைக் தத்துவத்தின் நேரடி தொடர்ச்சி. “மாரி” என்பது மழை, செழிப்பு, உயிர்க்காத்தல் என்ற தமிழ்ச் சொற்களுடன் தொடர்புடையது. மழை என்பது உயிர் நிலைத்தலின் அடிப்படை; அதை அருள்பவள் மாரியம்மன். அவள், நிலத்தையும் மக்களையும் ஒன்றாகக் காக்கும் நிலமகளின் வடிவம்.




தமிழ்ச் சமூகத்தின் அடிப்படையாக விளங்கிய வேளாண்மைச் சிந்தனை, மாரியம்மன் வழிபாட்டில் இயற்கை மற்றும் ஆன்மீகத்தின் இணைப்பாக வெளிப்படுகிறது. மண், நீர், மழை ஆகிய இயற்கை மூலங்களை தெய்வமாகக் கருதும் தொன்மையான தமிழ்ச் சிந்தனையின் உயிர்த்தடம் இதுவே.

பிற்காலங்களில், வடமொழிப் புராணங்களின் தாக்கத்தால், இந்த அம்மையின் அடிப்படைத் தமிழ்ச் சாரம் மங்கச் செய்யப்பட்டு, அவளை வெளி புராணங்களின் பெண் தெய்வங்களுடன் இணைக்க முயன்றனர். பண்பாட்டு வரலாற்றில், வலிமையான சமய அமைப்புகள் தமக்குப் புறம்பான வழிபாட்டை இணைத்துக் கொள்ளும் முயற்சிகளை மேற்கொள்வது வழக்கமாகும். இதுவே இணைப்புக் கோட்பாடு எனப்படுகிறது.






# பொற்கொடி நங்கையாள்

இந்த நிகழ்வின் ஒரு வெளிப்பாடாக, தமிழரின் தாய்த் தெய்வமான மாரியம்மனை வடஇந்தியப் புராணப் பெண் தெய்வங்களுடன், குறிப்பாக ரேணுகா தேவி கதையுடன் ஒப்பிட முயற்சிக்கப்பட்டது. இத்தகைய முயற்சிகள், மாரியம்மனை பிராமணியப் புராணக் கட்டமைப்பில் அடக்கி விடும் ஆரிய மயமாக்கல் முயற்சிகள் எனச் சில ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதன் விளைவாக, மாரியம்மனின் பழமையான அடையாளம் ஒரு மழைத் தெய்வம், ஒரு நோய்த்தடுப்பு அம்மை, ஒரு காவல் அணங்கு இவற்றை விட்டுவிட்டு, ரேணுகா புராணக் கதையுடன் பொருத்தப்படத் தொடங்கியது.



வடமொழிப் புராணங்களில் பரவிய ரேணுகா தேவி — பரசுராமர் கதையானது, மாரியம்மன் வழிபாட்டின் அடையாளத்துடன் எந்தவிதத் தொடர்பும் அற்றது.

அந்தக் கதையில், கணவனுக்குக் கீழ்ப்படியாததற்காக ஒரு பெண் தன் மகனால் கொல்லப்படுகிறாள். பின்னர் அவளது தலையை வேறு உடலில் பொருத்தியதால் “மாரியம்மன்” என அழைக்கப்பட்டாள் என்ற கூற்று உருவானது. இந்தக் கதை, பெண்ணை அடக்குமுறைச் சிந்தனையில் வடிவமைத்தது. ஆனால் மாரியம்மன் வழிபாடு, இதற்கு நேர்மாறாக, பெண்ணின் ஆற்றல், தாய்மை, காப்பாற்றும் தன்மை, பரிவு, ஆகியவற்றை வணங்கும் தமிழ்த் தெய்வக் கொள்கை.




மாரி = மழை, மாறி அல்ல என்பது மொழியியல் ரீதியாக உறுதியான விளக்கம். “தலை மாற்றம்” என்ற கதையுடன் இதற்கு எந்தத் தொடர்பும் இல்லை. கழக (சங்க) இலக்கியங்களிலும் பல்லவர் கால ஆவணங்களிலும் ரேணுகா தேவி குறித்த எந்தத் தடயமும் இல்லை. இது பிற்கால ஆரிய மயமாக்கல் சித்தாந்தத்தின் விளைவு என்பதே ஆய்வுக் கண்டுபிடிப்பு.

1. மொழித் தொன்மை:

“மாரி” எனும் சொல் “மழை” எனும் தமிழ்ச் சொல்லின் உயிரோடு பிணைந்த வடிவம். “அம்மை” என்ற தாய் தெய்வக் குறியீட்டுடன் சேர்ந்தபோது, “மாரியம்மன்” எனும் பெயர் உருவாகிறது. இது வடமொழித் தெய்வங்களின் பெயரிடும் முறைமையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது.



கோவில்களையும், வடமொழி மந்திரங்களையும், ஆரியர்களின் சடங்குகளையும் சாராமல், சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ள மக்களே நேரடியாக நடத்தும் வழிபாடுகளை அடிப்படையாகக் கொண்டது. இவ் வழிபாடுகள் ஒவ்வொன்றும் தமிழ் மண்ணின் வேளாண்மைச் சிந்தனையோடும், தொன்மையான மருத்துவ அறிவோடும், இயற்கை வழிபாட்டு முறைகளோடும் பின்னிப் பிணைந்தவை.

இவை, தூய தமிழ்ப் பண்பாட்டின் உள்ளார்ந்த தெய்வத்தின் மீதான நம்பிக்கையின் வெளிப்பாட்டினைப் பறைசாற்றுகின்றன. மாரியம்மன் வழிபாட்டில் காணப்படும் தீ, (வெப்பம்) மற்றும் நீர் (குளிர்ச்சி) ஆகிய இரு பெரும் ஆற்றல்களின் பயன்பாடு, இத்தெய்வத்தின் தனிச்சிறப்பான நோய்த் தடுப்புத் தன்மையைக் குறிக்கிறது.

கரகம் எடுத்தல் என்பது மழை, வளம், குளிர்ச்சி, கருணை ‘மாரி’ (மழை) எனும் தமிழ்ச் சொல்லின் நேரடிச் செயல்பாடு. நிலமும் உயிரும் குளிர்ச்சி அடைய, செழிக்க வேண்டும் என்ற வேளாண்மைக் கோட்பாடு.

தீமிதிப்பு/தீச்சட்டி ஏந்துதல் போன்றவை வெப்ப நோய் நீக்கம், மாரியம்மன், நோயாகிய வெப்பத்தை (தீ) நீக்கி, உயிர்காக்கும் மழையை (நீர்/கரகம்) அருளும் சக்தியாகக் கருதப்படுகிறாள். இந்த முரண்பட்ட இரு நிலைகளை ஒரே தெய்வத்தின் ஆளுகைக்குள் வைப்பது, தமிழர் வாழ்வில் இயற்கையோடு ஒன்றிய, இன்றியமையாத தேவையை உணர்த்துகிறது.

2. மக்கள் மைய வழிபாடு:

பெரிய ஆலயங்கள், பிராமணச் சடங்குகள், யாகங்கள் இன்றி, வீதி வழிபாடு, பூத்தாண்டல், தீர்த்தம், தீமிதிப்பு போன்ற மக்கள் நேரடியாகச் செய்யும் வழிபாட்டு முறைகள் இவை அனைத்தும் தமிழர்களின் சமத்துவச் சிந்தனையின் வெளிப்பாடுகள்.

3. தாய்த் தெய்வக் கோட்பாடு:

மாரியம்மன் அதிகாரமும் கருணையும் இணைந்த தாய் வடிவம். அவள் கோபம் காட்டினாலும் அது காக்கும் கோபம்; நோயை நீக்கும் தீ, அருளை வழங்கும் நீர் — இவ்விரண்டும் இணைந்த சக்தி வடிவமே மாரியம்மன்.

மாரியம்மன் வழிபாடு என்பது பெரிய




வேப்பிலை, மாரியம்மனின் அடையாளங்களில் ஒன்றாகும். வடமொழிப் புராணங்களில் தெய்வீகத் தலங்கள் மற்றும் புனித மரங்கள் பற்றிய குறிப்புகள் இருந்தாலும், அவற்றிற்கெல்லாம் அடிப்படையாக விளங்குவது

மாரியம்மனும் வேப்ப மரமும்தான்!

வேப்பிலையின் பயன்பாடு முற்றிலும் தமிழ்ச் சமூகத்தின் இயற்கையோடு இயைந்த அறிவின் வெளிப்பாடு ஆகும். வேம்பு, கிருமிநாசினியாகவும்,

உடற் தொற்றுகளைப் போக்குவதாகவும், உடற் சூட்டைக் தணிக்கும் தன்மையதாகவும் தமிழர்களால் தொன்றுதொட்டு அறியப்பட்டது.அம்மை நோய் கண்டவர்களுக்கு



வேப்பிலையாலேயே விசிறி, மருத்துவ சிகிச்சையும், அதோடு அம்மனின் அருளோடும் ஒன்றிணைக்கப்பட்டது.

வேப்பிலை மூலிகையை நோய்த் தடுப்பு ஆற்றலின் குறியீடாக உயர்த்தி, தெய்வத்துடன் இணைத்த இந்த நடைமுறை, தமிழரின் இயற்கை அறிவியல் சிந்தனையின் உச்சமாகும். இவ்வழிபாடுகள் அனைத்தும் பூசாரியாலோ, இடைத்தரகரால் அல்லாமல், நேரடியாக மக்களால் முன்னெடுக்கப்படுவது, மாரியம்மன் வழிபாட்டைத் தூய மக்கள் மைய வழிபாடாக நிலைநிறுத்துகிறது.

மாரியம்மன் வழிபாட்டின் மூலத்தைத் தேடும்போது, சங்க இலக்கியங்களில் காணப்படும் வலிமை மிகுந்த தாய்த் தெய்வ வழிபாடுகளே அதன் பழமையான உருவம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். வடமொழித் தாக்கம் வருவதற்கு முன்பே, தமிழர் நிலவியலில் (திணைப் பிரிவுகளில்) நிலைத்திருந்த பெண் தெய்வங்களின் பரிணாமமே மாரியம்மன் என்பதை இலக்கியத் தடயங்கள் உறுதிப்படுத்துகின்றன.

சங்க இலக்கியங்களில் தாய்த் தெய்வமாகக் காணப்படும் கொற்றவை, நிலவியல் கோட்பாட்டில் ஐந்திணைகளில் ஒன்றான பாலைத் திணைக்குரிய தெய்வமாக வணங்கப்பட்டாள். இங்கு ஒரு நுட்பமான தமிழ்ச் சிந்தனையை நாம் புரிந்துகொள்ள வேண்டும்:

தொல்காப்பியம் காட்டும் தமிழர் நிலப்பிரிவில், பாலை என்பது தனி நிலமல்ல. மாறாக, குறிஞ்சி (மலையும் மலை சார்ந்த இடம்), முல்லை (காடும் காடு சார்ந்த இடம்) ஆகிய நிலங்கள் வறட்சியால், நீர்மையற்று, மக்கள் வாழ்வாதாரம் குன்றி, அதன் இயல்பு திரிந்து போவதாலேயே ‘பாலை’ என்ற நிலை உருவாகிறது.

இவ்வாறு வளம் குன்றி, நிலையற்ற வறட்சியால் சூழப்பட்ட நிலையில் அதற்குரிய தெய்வமாக கொற்றவை கருதப்பட்டாள். அவள், நிலத்தின் இந்தத் திரிபு நிலையைத் தடுத்து, மீண்டும் செழிப்பை (மாரி) அருளும் ஆற்றல் கொண்டவளாக வணங்கப்பட்டாள்.




காவல் தெய்வமாகிய கொற்றவை, வறட்சியைக் கட்டுப்படுத்துபவளாக இருந்து, காலப்போக்கில் வேளாண் சமூகத்தின் முக்கியத் தேவையாகிய மழையை (மாரி) அருளும் தெய்வமாகப் பரிணமித்திருக்க வேண்டும்.

நிலை திரிந்த நிலத்தை மீண்டும் செழிப்படையச் செய்யும் சமநிலைப் படுத்தும் ஆற்றல் மாரியம்மன் வழிபாட்டின் மூலக்கருவாக இன்றும் நீடிக்கிறது. பிற்கால இலக்கியமான சிலப்பதிகாரத்தில், தன் கற்பின் வலிமையால் மதுரை நகரத்தை எரித்த கற்புக்கரசி கண்ணகி, சேர நாட்டில் தெய்வமாக வணங்கப்பட்டாள். இந்தக் கற்புக்கரசி வழிபாடு, ஒரு மானுடப் பெண்ணின் பேராற்றலையும், நீதியின் வடிவத்தையும் தெய்வமாக ஏற்றுக் கொண்ட தமிழர் மரபின் தொடர்ச்சியாகும். மாரியம்மன் போன்ற தாய்த் தெய்வ வழிபாடுகள்,

ஆற்றல் மிகுந்த பெண் உருவங்களை (அணங்கு) சமூகத் தலைவியாக, பின்னர் தெய்வமாகக் கருதிய தாய்த் தெய்வக் கோட்பாட்டின் நீட்சியாகவே பார்க்கப்படுகின்றன.

மாரியம்மனின் திரிபு கதையைப்போல், தலை துண்டிக்கப்பட்டோ, கட்டுண்டோ அல்லாமல்; தன்னுடைய தனிப்பெரும் ஆற்றலால் மட்டுமே தெய்வ நிலையை அடைந்த தமிழரின் கற்புத் தெய்வக் கோட்பாடே மாரியம்மனின் தொல்வடிவத்திற்கான அடிப்படை.இந்த இரண்டு தொன்மையான தமிழ் மரபுகளும் — காவல் தரும் கொற்றவையும், நீதியைப் நிலைநாட்டும் கற்புக்கரசியும் — ஒருங்கிணைந்து, காலப்போக்கில் மழை, நோய்நீக்கம் என்ற வாழ்வியல் சார்ந்த வேளாண் சமூகத்தின் மாரி அம்மையாக நிலைபெற்றன.



வடமொழிப் புராணங்களின் கற்பனைக் கதைகளுக்குப் புறம்பாக, தமிழ் மண்ணின் சமூக — வரலாற்று உண்மைகளிலிருந்து மாரியம்மன் தோன்றியவள் என்பதை இந்த இலக்கியத் தடயங்கள் உறுதி செய்கின்றன. மாரியம்மன், தமிழ்மண்ணின் உயிரோடு வாழும் தாய்த் தெய்வம். அவள் வழிபாடு, ஆரிய கலப்பில்லாத தொன்மைச் சக்தி மரபின் அடையாளம்.

‘தீங்கின்றி மழை பொழிவிப்பவள் மாரி’ என்ற கருத்து, அவளது தத்துவத்தின் உச்சரீதியாகும். அதாவது, மிகுந்த மழையால் விளையும் தீங்கு வெள்ளம், அழிவு, பஞ்சம்,

மழையின்மைத் தீங்கு — வறட்சி, பசியால் வாடுதல், இவற்றைத் தாண்டி சமநிலையான வாழ்வை வழங்கும் தாய்த் தெய்வம்தான் மாரியம்மன். அவளது வழிபாட்டு முறைகள், தமிழ் மக்களின் நிலமையோடு, நீர்மையோடு, உயிர்மையோடு பின்னிப் பிணைந்த பண்பாட்டின் உயிர்ச்சான்றாகத் திகழ்கின்றன.

மாரியம்மன் வழிபாட்டை ஆராய்வது என்பது, தமிழ் மக்கள் தங்கள் தாய்மையின் குரலைக் கேட்பது எனலாம்.



# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு





# நத்தார்

## அன்பின் வழியே நின்று...

'இந்த விழா ஆண்டுக்கு ஒருமுறை தானே வருகிறது. இரண்டு, மூன்று முறை வரக் கூடாதா?' என்ற ஏக்கம் எதிரொலிக்கும் பிரபலமான ஆங்கில வாசகம் ஒன்று இருக்கிறது. 'கிறிஸ்மஸ் கம்ஸ், பட் ஒன்ஸ் எ இயர்'. ஆமாம், கிறிஸ்துமஸ் பண்டிகை ஓர் ஆண்டில் ஒருமுறைதான் வருகிறது.

உலகெங்கும் உள்ள 240 கோடிக் கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, மற்ற சமயங்களைச் சார்ந்த மக்களும் இணைந்து மகிழ்ந்து கொண்டாடும் பெருவிழா கிறிஸ்துமஸ் என்றழைக்கப்படும் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா. இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறிக்கும் வகையில் உலகெங்கிலும் கிறிஸ்துமஸ் பண்டிகை டிசம்பர் 25 அன்று கொண்டாடப்படுகிறது.

வரலாறு :

கிறித்தவத்துக்கு முந்திய காலப்பகுதியில், ஆரம்பகால ஐரோப்பியர்கள் ஒளி, பிறப்பு ஆகிய இரண்டையும் குளிர்காலக் கொண்டாட்டமாக கொண்டாடினர். இக்கொண்டாட்டத்தின் மதம் சாராப் பகுதிகளாக குடும்ப உறுப்பினர்கள் ஒன்று கூடல், நல்லெண்ணங்களை வளர்த்தல் என்பன பின்பற்றப்பட்டன. மாரிச் சூரிய கணநிலை நேரம் **(Winter Solistice)** போது கூடுதலான பகல் நேரம், நீண்ட நேரம் சூரிய ஒளி ஆகியவை மக்களுக்கு மகிழ்ச்சியை தந்தன. எனவே, குளிர்காலக் கொண்டாட்டங்களின் சில பகுதிகளையும் கிறிஸ்துமஸ் திருவிழா தன்னகத்தே கொண்டுள்ளது.

தொடக்கத்தில், இயேசு கிறிஸ்து கி.பி. சுமார் 33ம் ஆண்டில் சிலுவையில் அறையப்பட்டு அடக்கம் செய்யப்பட்டு மூன்றாம் நாள் சாவில் இருந்து உயிர்த்ததைக் குறிக்கும் உயிர்ப்பு ஞாயிறுதான் கிறிஸ்தவம் கொண்டாடியது. ஆரம்பகால கிறிஸ்துவ சமூகங்களில் பிறந்த நாள் கொண்டாட்டங்கள் விரும்பப்படவில்லை என்பதால் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முன்னுரிமை கொடுக்கப்படவில்லை. இருப்பினும், நான்காம் நூற்றாண்டில், திருச்சபைகள் இயேசுவின் பிறப்பை விடுமுறையாக நிறுவ முடிவு செய்தனர். குளிர்காலக் கொண்டாட்டங்களின் தாக்கங்களும் இதற்கு முக்கிய காரணமாக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இயேசு யூதேயாவிலுள்ள பெத்லகேமில் மரியாவுக்கும் ஜோசப்புக்கும் பிறந்தார். எவ்வாறாயினும், நவீன கிரிகோரியன் நாட்காட்டி அப்போது இல்லை என்பதால் டிசம்பர் 25ல் இயேசு பிறந்தார் என்பத்கற்கு எந்த பதிவும் இல்லை.








மேலும், இயேசு பிறந்ததற்கான சரியான தேதியை புனித நூளான பைபிளிலும் குறிப்பிடவில்லை. முதல் கிறிஸ்தவ ரோமப் பேரரசர் என்று அழைக்கப்படும் முதலாம் கான்ஸ்டன்டைன் — டிசம்பர் 25 ஐ 'கிறிஸ்துமஸ்' என்றும், இயேசுவைகக் கொண்டாடும் நாள் என்றும் அறிவித்தார். சில ஆண்டுகளுக்குப் பிறகு, முதலாம் போப் ஜூலியஸ், இந்த திருநாள் விழா (டிச. 25) இயேசு பிறப்பைக் குறிக்கும் என்று அறிவித்தார்.

முக்கியத்துவம் :

மனித குலம் ஞானவொளி பெற இயேசு கிறிஸ்துவால் போதிக்கப்பட்ட கருணை, மன்னிப்பு ஆகிய மாண்புகள் மீது நமது நம்பிக்கையை கிறிஸ்துமஸ் விழா மீண்டும் உறுதிப்படுத்துகிறது. ஏசுவின் பிறந்த நாள் விருந்தான கிறிஸ்துமஸ் பெரும் மகிழ்ச்சி, கொண்டாட்டங்களின் காலம். கிறிஸ்துமஸ் சமயங்களில் கிறிஸ்துவர்கள் கடவுளுக்கு நன்றி செலுத்துவதுடன் ஒருவரை ஒருவர் மிகுந்த மகிழ்ச்சி, அமைதி, பரஸ்பர பரிசு வழங்குதல் ஆகியவற்றுடன் வாழ்த்திக் கொள்ளுகின்றனர்.



## அஜீத் அந்தோனி

இந்த ஆண்டு கிறிஸ்துமஸ் திருநாள் விழா, நோய்த் தொற்று பரவல் காரணமாக பல கட்டுப்பாடுகளுடன் கொண்டாடப்படுகின்றன.

உலகின் எல்லா மதங்களும் ஒளியை முன்நிறுத்துகின்றன. சிறந்த முன்மாதிரியாக இருப்பவர்களை, வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒளியாகப் பார்க்கிறோம். கிறிஸ்துவப் பெருமதத்தில் ஒளியின் வடிவமாகப் பார்க்கப்படுகிறவர் இறைமகன் இயேசு. அவர் காட்டிய வழியில் அவரை நோக்கிய பயணமே சிறந்த ஆன்மிக வாழ்க்கை என்பதில் உலகின் பல பிரிவு கிறிஸ்துவர்கள் ஆழமான நம்பிக்கை வைத்துள்ளனர்.




ஏனென்றால், "நான் இந்த உலகத்துக்கு ஒளியாக இருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிற யாரும் ஒருபோதும் இருளில் நடக்க மாட்டார்கள், ஆனால் வாழ்வு தரும் ஒளியைப் பெற்றிருப்பார்கள்" (யோவான் 8:12) என்று தன்னைத் தேடிப் பின்தொடர்ந்த மக்களிடம் சொன்னார். அதேபோல், தன்னை விமர்சித்த யூதப் பழமைவாதிகளிடம்: "கடவுள்தான் உங்கள் தகப்பன் என்றால், நீங்கள்

என்மேல் அன்பு காட்டுவீர்கள். ஏனென்றால், நான் கடவுளிடமிருந்து இங்கே வந்திருக்கிறேன். நான் சுயமாக வரவில்லை, அவர்தான் என்னை இங்கே அனுப்பினார். நான் சொல்வதை ஏன் புரிந்துகொள்ளாமல் இருக்கிறீர்கள்?” (யோவான் 8:42) என்று கேட்டார்.

அப்போது நடந்த நிகழ்வுகளை வரிசையான முறையில் நமக்குத் தந்திருக்கிறது புனித விவிலியம்.

யூதர்கள் எல்லாரும் தங்களுடைய சொந்த ஊருக்குப் போய் தங்களது பெயரையும் குடும்ப விவரங்களையும் மக்கள் தொகையைக்



இறந்த லாசரை இயேசு உயிர்பெறச் செய்தபோது உண்மையாகவே அவர்கள் பயந்துதான் போனார்கள். அப்போதுதான் இயேசுவின் பிறப்பு குறித்து அவர்கள் தேடத் தொடங்கினார்கள். உண்மையில் இந்த இயேசு பிறந்ததும் வளர்ந்ததும் எங்கே எனத் தேடியபோது, அவர் குழந்தையாகப் பிறந்தபோது சாட்சியாக இருந்த மேய்ப்பர்கள் இப்போது நடுத்தர வயதுக்காரர்களாக இருந்தார்கள். அவர்கள் யூதத் தலைமை குருவுக்கு அளித்த சாட்சியம் வரலாற்றில் மிக முக்கியமானதாக இருக்கிறது.

எளிய மக்களுக்கு முதல் அறிவிப்பு: இயேசுவின் பிறப்பைக் குறித்து கடவுள் முதலில் கன்னி மரியாளுக்கு அறிவித்தார். அவர் கருவைத் தாங்கி இயேசுவை பிரசவித்தபோது, அவர் மீட்பராக இந்த உலகத்துக்கு அருளப்பெற்ற இறை இரக்கச் செய்தியை எளிய மக்களுக்கே கடவுள் முதலில் அறிவித்தார்.




கணக்கெடுக்கும் அரசு அதிகாரிகளிடம் பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்று அன்றைக்கு ரோமப் பேரரசின் அரசனாக இருந்த அகஸ்டஸ் (கி.மு.63 முதல் கி.பி.14 வரை) கட்டளையிட்டார்.

இயேசுவின் பெற்றோரான யோசேப்பும் மரியாளும் பெத்லகேமுக்குக் கிளம்பினார்கள். காரணம், யோசேப்பின் சொந்த ஊர் பெத்லகேம். ஆனால், அங்கே அவருக்கென்று வீடு இல்லை. அப்போது மரியாள் நிறைமாதப் பேறு காலத்தில் இருந்தார்.

மரியாளை ஒரு கோவேறுக் கழுதையில் அமர்த்திக் கொண்டு யோசேப்பு கால்நடையாக பெத்லகேமுக்கு சென்றபோது, அந்த சிறு நகரம் அதன் பூர்விகக் குடிகளால் நிரம்பி வழிந்தது. இதனால் யோசேப்பும் மரியாளும் தங்குவதற்கு எங்கும் இடமில்லை. ஒரு கருணை மிகுந்த மனிதர், ‘நீங்கள் விரும்பினால் எனது மாட்டுத் தொழுவத்தில் தங்கிக்கொள்ளுங்கள்’ என்றார். அதை அன்புடன் ஏற்றுக்கொண்டு அங்கேயே தங்கினார்கள்.

வானில் புதியதொரு விண்மீன் தோன்ற, மார்கழிக் குளிருக்கு நடுவே மரியாள் இறைமகன்



இயேசுவைப் பெற்றெடுத்தார். அவர் அந்தக் குழந்தையை மெல்லிய துணிகளில் சுற்றி, அந்தத் தொழுவத்தில் வசிக்கும் மாடுகள், கழுதைகள், ஆடுகளுக்கு உணவு வைக்கிற தீவனத் தொட்டியில் மெதுவாகப் படுக்க வைத்தபின் தம் தாய்மைக்கு பெருமை சேர்த்த தேவ மைந்தனை வணங்கினார். அதைக் கண்ட யோசேப்பும் அந்த அரிய நிகழ்வில் உன்னதம் உணர்ந்து குழந்தையை வணங்கினார்.

மார்கழிக் குளிருக்கு மத்தியில்.. இயேசு பிறந்திருந்த இடத்திலிருந்து சில கல் தொலைவில் இருந்த புல்வெளிகளில் சில மேய்ப்பர்கள் இரவு நேரத்தில் தங்கள் மந்தையைக் காவல் காத்துக்கொண்டு அங்கேயே கூடாரம் அமைத்துத் தங்கியிருந்தார்கள். திடீரென்று, ஒரு தேவதூதர் அவர்கள் முன்னால் வந்து நின்றார். அப்போது அந்த மேய்ப்பர்களைச் சுற்றி கடவுளாகிய தந்தையின் ஒளி பிரகாசித்தது. மேய்ப்பர்கள் மிகவும் பயந்து நடுங்கினார்கள்.

தங்களது சக்திக்கு மீறிய ஒன்று அங்கே நிகழ்ந்து கொண்டிருப்பதை உணர்ந்து கத்தினார்கள். தேவதூதர், அவர்களை அமைதிப்படுத்தினார். அவர்கள் தெளிவு பெற்றார்கள். அவர்களிடம் "பயப்படாதீர்கள், உங்களுக்கு ஒரு நல்ல செய்தி சொல்ல வந்திருக்கிறேன். மெசியா (உலகின் மீட்பர்) இன்று பெத்லகேமில் பிறந்திருக்கிறார். உடனே போய் அவரைப் பாருங்கள்" என்று சொன்னார். உடனே, அவரைப் போன்ற தோற்றம் கொண்ட பல தேவதூதர்கள் வானத்தில் தோன்றி, "வானுலகில் இருக்கிற கடவுளுக்குப் புகழ் சேரட்டும், பூமியில் சமாதானம் உண்டாகட்டும்" என்று சொன்னார்கள். பிறகு, அவர்கள் மறைந்துவிட்டார்கள்.




தங்கள் வாழ்நாளில் இப்படியொரு காட்சியை காண்போம்; தேவ செய்தியைப் பெறுவோம் என்று எண்ணியிராத அந்த மேய்ப்பர்கள் மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்து.. "வாருங்கள், உடனே பெத்லகேமுக்குப் போகலாம்" என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு.. மந்தைகளை அப்படியே விட்டுவிட்டு வேகமாக அங்கிருந்து புறப்பட்டுப் போய் தெய்வக் குழந்தையைத் தேடினார்கள்.

ஒரு தொழுவத்தில் யோசேப்பையும் மரியாளையும் குழந்தையையும் அவர்கள் பார்த்தபோது, தேவதூதர் சொன்ன விஷயங்களைப் பற்றி மரியாளிடமும் யோசேப்பிடமும் பகிர்ந்து கொண்டதுடன், அந்தப் புலர் காலையில் கண்ணில்பட்ட பெத்லகேம் வாசிகளிடம் சாட்சியமாகச் சொன்னார்கள். அதைக் கேள்விப்பட்ட மக்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

மேய்ப்பர்கள் தங்கள் மந்தைகளைக் கவனித்துக் கொள்வதற்காகத் திரும்பிப் போனார்கள். தாங்கள் கேட்டதையும் பார்த்ததையும் நினைத்து கடவுளாகிய தந்தைக்கு நன்றி சொன்னார்கள். கன்னி மரியாளோ தேவதூதர் தனக்குச் சொன்ன வார்த்தைகள் குறித்து நன்றாக யோசித்துப் பார்த்தார். கடவுள் வாக்களித்தபடியே



மண்ணுலகத்துக்கு தன் மகனை அனுப்பி வைத்தார். அவரது பிறப்பு வரலாற்றின் முக்கிய நிகழ்வாக மாறியது.

எசாயாவின் தீர்க்கதரிசனத்தின் படி புனிதையான மரியாளுக்கும் அவரோடு மண ஒப்பந்தமான ஜோசப்புக்கும் இறைமகன் இயேசு 2020 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தார். அப்போது வானதூதர்கள் உலகின் மீட்பரின் வருகையை எளியோர்களுக்கு அறிவித்தார்கள்.

'அவரே ஆண்டவராகிய மெசியா!' என்று அறிந்துகொண்ட மேய்ப்பர்களும் அவரை ஆராதித்தார்கள். பெத்லஹேமின் ஒரு தொழுவத்தில் எளிமையாகப் பிறந்த இறைமகன், எளியோர்களிடமே முதலில் அறிமுகமானார். அவரது பிறப்பே இந்த உலகுக்கு மாபெரும் செய்திகளை உணர்த்தியது. எளிமை, அன்பு, பணிவு, மன்னித்தல், இறை வணக்கம், உண்மை, உறுதி என்ற இந்த ஏழு முக்கிய நற்குணங்களை ஏசுபிரானின் வாழ்க்கை நமக்கு உணர்த்தியது. பாவங்களால் கனத்திருந்த மனிதர்களின் இதயம் புனிதம் அடையவும், இழி செயல்களால் அழியவிருந்த உலகத்தை அன்பால் காக்கவும் அவதரித்தார் ஏசுபிரான். ஆனால் உண்மையில் அவர் வாழ்க்கை தத்துவம் நமக்கு வெறும் அடையாளங்கள் மட்டுமில்லை. ஏசுவைக் கொண்டாடுவதைப் போலவே அவருடைய போதனைகளை, நல்லொழுக்கங்களைக் கொண்டாட வேண்டும் என்பதே நன்மை விளைவிக்கும் மானுட தர்மம்.




எங்கே அன்பு தழைத்து சக உயிர் மதிக்கப்படுகிறதோ அங்கே ஏசுபிரான் தோன்றுகிறார். எங்கே வேற்றுமைகள் மறக்கப்பட்டு சகிப்புத் தன்மை மேலோங்குகிறதோ அங்கே ஏசுபிரான் பிறக்கிறார். மறக்கவே முடியாத துன்பங்களையும் மன்னித்து ஒருவனை எவன் ஏற்றுக்கொள்கிறானோ அவன் நெஞ்சில் இறைமகன் ஒளிர்கிறான். எங்கே துணிவோடு, உறுதியோடு சத்தியம் காக்கப்படுகிறதோ அங்கே தேவமைந்தன் வந்துவிடுகிறான். எங்கே கருணை சுரந்து ஒரு உயிர் காக்கப்படுகிறதோ அங்கே அழைக்காமலேயே ஆண்டவர் ஏசு தோன்றிவிடுகிறார். இதுவே உண்மை.

காலகாலமாய் மரித்தவர் எல்லாம் மண்ணாகிப் போய்விடும்போது, மரித்தவர் உயிர்த்தெழுந்த உன்னத விஷயத்தை உலகுக்குக் காண்பித்தவர் ஏசுபிரான் மட்டுமே. அவருடைய தியாகங்களே உலகுக்கு முன்மாதிரியாக இருக்கும் பெரும் பாடங்கள். காய்க்காத அத்தி மரத்துக்கும் கருணை செய்த வள்ளல் ஏசுபிரான். மரணத்தின் வாயிலிலும் சத்தியத்தை கடைப்பிடித்த தேவசுதன் ஏசு. இறுதி நிமிடத்திலும் தன்னை இன்னலுக்கு




ஆளாக்கியவர்களை மன்னிக்கச் சொல்லி தம் தந்தையிடம் பிரார்த்தித்த இணையில்லா அன்பு வடிவம் ஏசுபிரான். எனவே நாம் ஒருவருக்கு ஒருவர் அன்பு காட்டுவதே ஏசுபிரானுக்கு நாம் செய்யும் ஆராதனை. இறைமகன் ஏசுபிரான் தோன்றிய இந்த நன்னாளில் ஒழுக்கம், கருணை, உண்மை, அன்பு, பிரார்த்தனை போன்ற நல்ல விஷயங்களை நம் நெஞ்சில் ஏந்திக் கொள்வோம்.

"சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன்" என்கிறார் ஏசுபிரான். அவர் வாழ்வே உலகை உய்விக்கும் ஒரு ஜீவஒளி எனலாம். "தம்மைப் போலவே பிறரை அன்பு செய்ய வேண்டும். அமைதிக்காக உழைப்பவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், எளிமை கொண்ட எல்லோரும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், பணிவுடைய எல்லோரும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், பிறரை எப்போதும் தாழ்வாகத் தீர்ப்பிட வேண்டாம், பகைவரையும் அன்பு செய்வதே ஆண்டவனுக்குப் பிரியமான செயல், உடல் இச்சையை விலக்குங்கள், திருமண உறவை முறிக்காதீர்கள், கடவுளை நம்பியோர் உலகப் பொருள்கள் மீது பற்று வைக்காதீர்கள்" என்று பலவாறு போதித்தார். எண்ணிப் பாருங்கள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அவர் போதித்த அனைத்தும் உலக மக்களின் நல்வாழ்க்கைக்காக இன்றும் பொருந்துவதை. அதனால்தானே உலகின் மணிமுடிகள் எல்லாம் இன்றும் ஏசுவின் முள்முடியின் கீழே பணிந்து நிற்கின்றன.

"என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" என்பதன் அர்த்தமே ஒருவனது அன்பும் தியாக வாழ்வும் அவனை என்றென்றும் மக்கள் மறந்து போகாமல் செய்துவிடும் என்பதுதானே. ஏசுவின் வார்த்தைகள் பொய்ப்பதில்லை, அது இறைவனின் வாக்கு. "மற்றவரை நீங்கள் மன்னிக்காவிடில், உங்கள் தேவ தந்தையும் உங்களை மன்னிக்க மாட்டார்!" என்பதை எல்லோரும் கடைப்பிடித்தாலே போதும். உலகில் பல பூசல்கள் தீர்ந்துவிடுமே. இறைமகன் பிறந்த இந்நாளில் உலகத்துக்கு ஒரு செய்தியாய் அன்பை வலியுறுத்துவோம். அதுவே கிறிஸ்துவுக்கு நாம் செய்யும் பெரும் காணிக்கை.




எங்கே ஓரிருவர் கூடி என்னை ஆராதித்தாலும் அங்கே தோன்றி அருள் செய்வேன் என்று கூறிய இறைவன் ஏசு, அன்பு மயமானவன். அவனை இந்நாளில் அன்பாலேயேக கொண்டாடுவோம். வேற்றுமைகள் கொண்ட இந்த உலகில் ஒற்றுமையோடு சகிப்புத் தன்மையோடு உள்ளார்ந்த அன்போடு தேவன் ஏசுவைக் கொண்டாடுவோம்!







சரித்திரத் தொடர்

# சேரமான் கனவு

## பாகம் - 2 அத்தியாயம் 11

### 11 கரை சேர்ந்த கடலரசி!

**கொற்றவன்**

வாழ்க்கை எல்லோருக்கும் மலர்ப்படுக்கையாக இருந்து விடுவதில்லை! ஆனால் சில நினைவுகள் அவ்விதம் காலம் முழுவதும் அமைந்து விடுவதுண்டு!

ஆனால் சிலருக்கோ, அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ அமைந்து விடும் நிகழ்ச்சிகளால், அந்த நினைவுகளே முள்படுக்கையாகக் காலம் முழுக்கத் தொடர்வதுண்டு!

அப்படியான இருவித நினைவுகளிலும் அலைக்கழிக்கப்பட்ட வண்ணம் இருந்தான் வளவத்திரையன்.

தாலியாவைச் சமாதானப்படுத்தி விட்டு, முதுகண்ணனாரின் அறையில் இருந்து வெளிப்பட்டு கடலரசி முகப்பின் மேல்தளத்தில் இருக்கும் தனது அறையை நோக்கி விடுவிடுவென நடந்தான்.

அப்படி விரைந்து நடந்தாலும், அவன் பார்வை அக்கப்பலின் மேல்தளத்தை சீராக ஆராய்ந்ததில், முகப்பில் தன்னைத் தவிர யாருமில்லை என்பது புரிந்தது.




அதே நேரம், அமைதியாகப் பயணிக்கும் அக்கப்பலின் அத்தனை நகர்வுகளையும் முதுகண்ணனாரின் கண்கள் கவனித்துக் கொண்டிருக்கும் என்ற தெளிவும் அவனுக்கு இருந்தது.

படியேறி தனது அறைக்குள் வந்தவன், பஞ் சணையில் சாய்ந்து, மார்புக்குக் குறுக்காகக் கைகளைக் கட்டியபடி அமர்ந்தான்.

அவன் சிந்தனை எங்கெங்கோ சென்றது.

குறுக்கே கட்டிய கைகளுடன் குனிந்தவன் பார்வை, தன் இரு கரங்களில் இருவிரல்களுக்கும் ஒரே நாளில் வந்து சேர்ந்த அவ்விரு கணையாழிகளின் மேல் மாறிமாறிப் பதிந்தது.

வலக்கை விரலில், மாமன்னர் செங்குட்டுவர் அணிவித்த சேர இலச்சினை பொறித்த கணையாழி...

இடக்கை விரலில் கயல்விழி அணிவித்த சோழ இலச்சினை பொறித்த கணையாழி...

அவ்விரு கணையாழிகளும் தனக்கு மாபெரும் கடமைகளை இருப்பதை நினைவூட்டுவதையும் உணர்ந்தான்.

வளவத்திரையன் தானாக எதையும் கேட்டுப் பெறவில்லை! ஆனால் தாமாகவே அவனிடத்தில்




வந்து சேர்ந்த கடமைகளுக்கு அவனே பொறுப்பு என்ற நிலையில், ஒரு கடமை வீரனின் கடப்பாடுகளில் எப்போதும் உறுதியாகவே இருந்தான்.

இந்த ஓராண்டுக்குள் ஏற்பட்டு விட்ட பெரும் மாற்றங்களையும், அதனால் தன் வாழ்வின் திசையே மாறிப் போகும் காலகட்டத்தில், தான் வந்து நிற்பதையும் உணர்ந்தவாறே, கடந்தகால சம்பவங்களை மனதுக்குள் ஓடவிட்டான்.

வில்லவனின் அழைப்பின் பேரில், சோழ நாட்டின் பூம்புகார் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுச் சேர நாட்டுக்கு வந்ததும், பின் வில்லவனின் சார்பாக கிரேக்கம் செல்ல வேண்டி மாமன்னரைப் பார்க்கச் சென்றதும், வழியில் காட்டின் நடுவே கயல்விழியைச் சந்தித்துக் காதல் கொண்டதும், பெரியவர் தன் மீது அன்பு மழை பொழிந்ததுமான அந்த நிகழ்வுகள், முதல்நாள் நடந்தாற்போல பசுமையாக அவன் மனதில் ஓடியது.

நினைவுகள் பலப்பல அவனுக்குள் ஓட ஓட, நேரமும் அங்கே ஓடிக்கொண்டிருந்தது.

கிரேக்கம் செல்ல கடலரசியில் பயணப்படும் வேளையில், பிரிய நேரிட்ட அந்தச் சூழலில் கயல்விழி, தன் அரச குலத்துக்கான முத்திரை மோதிரத்தை தனக்கு அணிவித்ததும்...




அதே வேளையில், கடலரசி எனும் பிரம்மாண்டப் போர்க்கப்பலுக்கு தலைவனாகத் தன் வாழ்வில் மாபெரும் பொறுப்பைக் கொடுத்து அழகு பார்த்த சேர மன்னர், தன் நம்பிக்கைக்கும் அன்புக்கும் சான்றாக அணிவித்த சேர இலச்சினை பொறித்த மோதிரத்தை அணிவித்ததும்...

இவ்வாறாகத் தன் வாழ்வின் மாபெரும் நிகழ்வுகளுக்குச் சான்றாக விளங்கும் அவ்விரு கணையாழிகளையும் வெறித்தபடி இருந்தான்.

அதெல்லாம் எவ்வித அனுமதியும் கேட்காமல் அவனுடைய மறக்கவியலா நினைவுகளாய் தொடர்கிறதோ, அதற்கு இணையாகத் திடுமெனப் புதிதாக முளைத்திருக்கும் தாலியா என்ற பேசும் பொற்சிலையின் பேரன்பும் தன்னை அதன் கட்டுக்குள் கொண்டு செல்வதை உணர்ந்தான்.

சிந்தனையில் மின்னலடித்தாற்போல், தாலியாவின் முகமும் கயல்விழியின் முகமும் மாறிமாறி மின்னல் வெட்டாய் பளிச்சிட்டு

மறைந்தன.

அந்த மின்னல் வெட்டின் தாக்கத்தைத் தாள முடியாதவனாக, தன் பார்வையைக் கணையாழிகளின் மீதிருந்து விலக்கி, அந்த அறையின் சாளரத்தின் வழியே வானில் மின்னிய விண்மீன்களின் பக்கம் திருப்பினான்.

ஓராண்டுக்குள் இவ்விரு அழகிய தேவதைகளும் தன்னைக் கந்தர்வ மணம் புரிந்தாற்போல், தனதாக்கிக் கொண்டது எவ்விதம்? என்ன நடக்கிறது தன்னைச் சுற்றி?

சற்று முன்பு பெரியவர் முதுகண்ணனார் குறிப்பிட்டது இதைத்தானோ?

அது மாறவேண்டும் என நீ நினைத்தால், அதற்கான 'காலம் கனியட்டும்' என்று காத்திருத்தலுடன், வாழ்வில் அந்த மாற்றத்தை நோக்கிய பொறுமையுடன் பயணிக்கக் கற்றுக் கொள். அதில்தான் வாழ்வின் உன்னதம் ஒளிந்திருக்கிறது."

முதுகண்ணனாரின் அனுபவப் பாடமாக வெளிப்பட்ட அந்த வார்த்தைகள் நிச்சயம் சத்தியமானவை தான்!

ஆனால் அதனைச் செயல்படுத்தும்போது அதன் விளைவுகள் தன்னைச் சுற்றி எவ்விதம் பிரதிபலிக்கும்? அந்தச் சிந்தனை அவனுக்குள் அப்போது எழுந்து அலைக்கழித்தது.

சோழநாட்டிலும், சேரநாட்டிலும், பல



அவனுக்குள் சுழன்ற கேள்விகளுக்கு முதுகண்ணனாரின் வார்த்தைகளே பதிலாக இருந்தது.

"உண்மையான அன்பு எத்தகையத் தியாகத்துக்கும் சித்தமாய் இருக்கும் என்பதை மட்டும் ஒருக்காலும் மறவாதே! நான் உனக்குச் சொல்ல வருவது ஒன்றுதான்! நம்மால் மாற்ற முடிந்த எதையும் மாற்ற முனையலாம். ஆனால் நமக்கும் மேலே இருக்கும் சக்தி நிர்ணயம் செய்வதை நம்மால் மாற்ற முடியாது என்பதை நீ உணர வேண்டும். ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். ஒருவேளை






வீரர்களும், கடலோடிகளும், ஒற்றர்களும் கூட, தங்களைவிடவும் மேம்பட்டவன் வளவத்திரையன் என ஒப்புக் கொள்ளும்படியான பலவித நிகழ்வுகள் அரங்கேறி இருக்கின்றன.

அப்போதெல்லாம் கூட, சிறிதும் தலைக்கனமோ இறுமாப்போ கொண்டதில்லை! தான் ஒரு பெரும் வீரன் என்ற நினைப்பைக் கூட எள்ளளவும் கொண்டதில்லை! எந்தப் பதவியும் தன்னை வந்து அண்டிடாமல் தானொரு எளிய வாழ்வை விரும்பும் மனத்தினனாகவே இருந்தவன்தான் வளவத்திரையன்.

ஆனாலும் எப்படியோ அவனைக் கொண்டாடும் அன்பிலும் பண்பிலும் உயர்ந்த ஒரு ஆன்றோர் கூட்டம் அவனைச் சுற்றிச் சேர்ந்து விட்டது. இப்போது அந்தக் கூட்டம் எல்லாம் என்ன

சொல்லும்?

வளவத்திரையனின் வீரமும் ஆற்றலும் அவ்வளவுதானா? இரண்டு பெண்களைக் கண்டதும், இருவரிடமும் மனதைக் கொடுத்து விடும் இளகிய மனத்தவனா? அல்லது இருவரும் அவனை ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கும் சித்தம் கலங்கியவனா? இருவரும் இவனது கைப்பாவைகள் என நினைக்கும் பித்தம் தலைக்கேறியவனா? இன்னும் என்னவெல்லாம் பேசுமோ?

அதை நினைக்க அவனுக்குக் கலக்கமாகவே இருந்தாலும், 'உன்னை ஊரார் அறிவதை விடவும், தன்னைத் தானறிதலே தலை சிறந்தது' எனும் அவனது பாட்டனாரின் வாக்கும் அவனுக்குள் அப்போது ஊடாடியது.

ஊர்ப் பேசுவது கிடக்கட்டும்! வாழ்ந்தாலும் ஏசும்! தாழ்ந்தாலும் ஏசும்! அதையெல்லாம் பொருட்டாக நினைத்தால், வாழ்வின் அடுத்த படியில் தெளிவாய் கால் வைக்க இயலாது. ஊரார் பேச்சுக்குப் பயந்து பொறுப்புக்களை உதறித் தள்ளிவிட முடியுமா?

தன்னை விரும்பும் அவ்விரு ஆரணங்குகளும் என்ன சாமானியப் பட்டவர்களா? இருவருமே அரச குலத்தவர்கள்! இருப்பினும் தான் யார் என்ற ஆராய்ச்சியை அவர்கள் மேற்கொள்ளவில்லை! உண்மை அன்பு உள்ளத்தில் தோன்றி விட்டால், ஆள் யாரென்ற ஆராய்ச்சியா செய்து கொண்டிருக்கும்? அதனால்தானே 'காதலுக்குக் கண் இல்லை!' என்ற சொலவடையும் வந்து சேர்ந்தது.

ஆனால் அப்படிக் கண்ணில்லாமலோ கருத்தில்லாமலோ அவர்கள் இருவரும் தன்மேல் மையல் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கவியலுமா?

காட்டில் சந்தித்த கயல்விழி, தன்னைப் பற்றிய எதிர்காலக் காட்சியையே மனக்கண்ணில் கண்டு அதன் உண்மைத் தன்மையை உணர்ந்து, பட்சி சொல்லும் உண்மையெனக் கூறியது எவ்விதம்? நாளைப் பொழுதே நிச்சயமில்லாதது என்ற கூற்றுக்கு மத்தியில், அவள் பல ஆண்டுகளுக்குப் பின் நடக்கப்போகும் வரலாற்றை அல்லவா தெளிவாய் கண்முன் காட்டி விட்டாள்!

தாலியாவுமே, தன்னிடம் வேடிக்கையாகப் பேசிப் பழகினாலும், வேறெந்த ஆடவனின் பார்வையும் தன்மேல் பதிந்திடா வண்ணம் பிழம்பென வலம் வருபவள், பவழத் தீவில் தன் மனதைத் திறந்து எல்லாவற்றையும் ஒப்புவித்தாளே! அங்கு நடந்த எல்லாவற்றுக்கும் அவளா பொறுப்பு? அவள் கூறியது போலவே இறைவனோ இயற்கையோ அல்லவா அங்கு அப்படியெல்லாம் விந்தை புரிந்திருக்க வேண்டும்?




கயல்விழியும் தாலியாவும், அழகிலும் அறிவிலும் ஆற்றலிலும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை! இருவருமே ஆழ்கடலின் நன்முத்து போன்றவர்கள். பனித்துளி போன்ற பவித்ரமானவர்கள் என்பதை அவன் நன்றாகப் புரிந்து வைத்திருந்தான்.



கயல்விழியின் வாள் பிடிக்கும் நேர்த்தியும், வலிய தோள்களின் பலமும், பறவைகளின் மொழி அறியும் நுட்பமான மனமும் அசாத்தியமானது.

தாலியாவின் அறிவும், வாதிடும் திறமையும், கிரேக்க மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவளானாலும், அவளது தமிழ்ப் புலமையும் எவரையும் அசரடிக்கக் கூடியதுதான்!

இரண்டு கண்களில் எது உயர்வானது என்று ஒப்புநோக்கு செய்வது எப்படி

நியயமில்லையோ அதுபோல், தன்மீதான அவர்களது அப்பழுக்கற்ற அன்பை ஆராய்வதும் நியாயமில்லை என்பதையும் ஐயமற உணர்ந்தான்.

இனி, பெரியவர் சொன்ன அந்த சத்திய வார்த்தைகளின்படி நடப்பதுதான் இப்போதைக்கு சரியாக இருக்கும்.

குழம்பிக் கிடந்த தன் மனத் தடாகத்தில் தெளிவு கிடைக்க பெரியவர் வடிவில் இறைவனே வந்து சொன்ன வார்த்தைகள்தான் அவை என நம்பினான்.

அந்த நம்பிக்கை, தளர்ந்து கிடந்தவனுக்குள் புதுத் தெம்பு பாய்ச்சியதால் பஞ்சணையில் இருந்து எழுந்து நின்றான்.

அந்த நடுச்சாம நேரத்திலும் அவன் பார்வைக்கு கடற்பரப்பின் நாற்புறமும் தெளிவாய்த் தெரிந்தது.

கடலரசியின் உச்சாணிக் கொம்பாக பாய்மரங்களுக் கிடையே மறைவாக அமைந்திருக்கும் அந்த சிற்றறை, மிக நுட்பமாக வடிவமைக்கப் பட்டிருந்தது. நாற்புறமும் தெரியும்படி மட்டுமல்லாமல், அங்கிருந்து தொலைதூரக் காட்சிகளைத் துல்லியமாய் பார்க்கும் விதமான ஆடிக்கருவிகளும், உடனடியாகத் தாக்கும் வண்ணம் எந்திரப் பொறிகளையும் உள்ளடக்கியபடி இருந்தது.

முதுகண்ணனாரின் அறிவும் அனுபவமும் தெற்றென விளங்கும்படி வடிவமைக்கப்பட்டிருக்கும் கடலரசி, எல்லோருக்குமே ஒரு விந்தையரசி தான்!

இப்போது முசிறியின் எழில்மிகு இரவுக் காட்சி தெளிவாய் தெரிந்தது.

இன்னும் ஒரு நாழிகையில் கடலரசி கரை சேர்ந்து விடும் என்பதை உணர்ந்தவன், முதுகண்ணனாரைச் சந்திக்க அந்த அறையிலிருந்து வெளியேறினான்.

**த**ங்க நிலா தலைக்கு மேலாக தகதகவென ஒளிவீசினாலும், அதை ரசிக்கும் மனநிலை இல்லாமல், முசிறித் துறைமுகத்தில் இருந்த அனைவரும் தத்தமது காரியத்திலேயே கண்ணாயிருந்தனர்.

பகலை விடவும் பளபளப்பு மிகுந்ததாயும், பன்மடங்கு அழகு மிகுந்ததாயும், பரபரப்பாகக் காணப்பட்ட முசிறியின் அழகு, அங்கு வந்து குழுமும் அயலகத்தார்க்கு எல்லாம் ஒரு வியப்புதான்!




துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் நாவாய்கள் காற்றில் அசையும் மலைகளைப் போல் இருந்தன.

வரிசை கட்டி நிற்கும் கலங்களில் இருந்து பெரும் மரப்பெட்டிகளையும், துகில் மூட்டைகளையும் கரைக்கு இறக்கி வைக்கும் கப்பல் ஊழியர்களும், இறங்கிய பொதிகளை அங்கிருந்து கொண்டு செல்ல வந்து காத்திருக்கும் குதிரை வண்டிகளும், மாட்டு வண்டிகளுமாய் இயங்கிக் கொண்டிருந்தது துறைமுகம்.

அல்லங்காடிகளோ மிகச் சுறுசுறுப்பாகவே இயங்கின.

நடுச்சாமம் என்பதற்கான அறிகுறி அங்கே எவர் முகத்திலும் இல்லாமல் அங்குமிங்குமாய் கூட்டம் அலைபாய்ந்தது.

கரையில் தென்பட்ட அந்த பரபரப்பு சற்றைக்கெல்லாம் கடற்பக்கம் நோக்கித் திரும்பியது.

அனைவர் கவனத்தையும் ஒருங்கே ஈர்த்த வண்ணம் கடலரசி அங்கே கம்பீரமாகக் கரையை நெருங்கியது.

குட்டியானைக் கூட்டத்துக்கு நடுவே புகுந்த மாபெரும் ஒற்றை யானையாக அந்தக் காலங்களுக்கு நடுவே வந்து நின்ற கடலரசியைக் கண்டு வியக்காதவர்களே அங்கில்லை!

வந்திருப்பது கடலரசி என்பது சேரநாட்டினர்க்குப் புரிந்துவிட்டாலும், ஓராண்டு முழுதாய் ஓடிவிட்ட நிலையில், புதிதாக அங்கு வந்து நிற்கும் யவன, அராபிய, சீனக் கப்பல் போன்றவற்றில் இருந்தவர்களுக்கு கடலரசியின் கம்பீரப் புலி முகத் தோற்றமும், பிரம்மாண்டமும், எந்நேரமும் தாக்குதலுக்குத் தயாராகக் குத்திக் கிழிக்கும் ஈட்டிகள் கொண்ட அமைப்பும் கலக்கத்தைத் தரவே, என்ன நடக்குமோ என்ற ஐயத்தை உண்டாக்கியது.

பிற நாட்டைச் சார்ந்தவர்களுக்கு சற்றே கலக்கம் ஏற்பட்டாலும், சேரமான் செங்குட்டுவர் எல்லைக்குள் தங்களுக்கு எவ்வித ஆபத்தும் நேர்ந்து விடாது என்ற நம்பிக்கை தந்த ஆறுதலில் அனைவரும் கடலரசியின் மீதே கண் வைத்திருந்தனர்.

அந்த நள்ளிரவு நேரத்தில்...

பாய்மரங்கள் இறக்கப்பட்டு, நங்கூரங்கள் பாய்ச்சப்பட்டு, தன் வெற்றிகரமான ஓராண்டைக் கடந்த கிரேக்கப் பயணத்தை முடித்துக் கொண்டு, தாய்மடி வந்து சேர்ந்த பெண்புலியாய் வந்து நின்றாள் கடலரசி.

(கனவு தொடரும்...)

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!




*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!

தொடர்புகளுக்கு

editor@ithamil.com

# கல்வியின் ஒளி

மனக்குகையின் இருளை
அகற்றும் என்றுதான்
நம்பியிருந்தேன் நானும்...

அந்தக் கல்வியின் ஒளி
சமூகத்தின் பார்வையைக்
கூசச் செய்கிறது.

மனிதாபிமானமில்லாத
காவல்துறை
மனசாட்சியில்லாத
மருத்துவத் துறை
பணத்திற்காக
சட்டத்தின் ஓட்டைகளைக்
காட்டிக் கொடுக்கும் வல்லுனர்கள்
குடலைப் பிடுங்கும்
குணத்தோடும் மணத்தோடும்
அரசியல் சாக்கடை!

அநேகமாய்
எல்லோரும் படித்தவர்கள்தான்!
படித்தவன்
சூதும் வாதும் செய்தால்;
'போவான் போவான்
ஐயோன்னு போவான்' என்கிற
மகாகவியின் வார்த்தைகளை
இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறேன்!

**புவனகிரி கல்யாண்**

# விவசாயி

உலகில் பிறந்த — பிறக்கும்
உயிரினங்கள் யாவுக்கும்
உதவிடுவான் கடவுளெனும்
உன்னத விவசாயி!

விவசாயிகளின் விளைநிலத்தில்
விஞ்ஞானத்தின் விஷத்தை
விதவிதமாய் புகுத்தி நாளும்
விருந்தாக்குபவன் வியாபாரி!

விவசாயிகளின் விளைநிலங்களை
விலைக்கு வாங்கி கூறுபோட்டு
வியாபாரமாக்கிக் காசுபார்க்கும்
விதிமீறும் நிலத்தரகர்கள்!

விளைநிலங்கள் யாவும்
விலை நிலங்கள் ஆயினும்
விதைக்கும் விவசாயி— நம்பிக்கையில்
விஸ்வரூபம் காட்டுகிறான்!

கடவுளுக்கே தினமும் நிவேத்தியமென
காலம் முழுக்க படியளந்து
காத்திடுவான் விவசாயி! —அவனைக்
காப்பதும் நம் கடமை என்றறிவோமே!

நகரில் குடிபெயர்ந்து வாழ்வதை விட
நலமுடன் நம் குக்கிராமங்களிலேயே
நாமும் இயற்கை விவசாயத்துடனே
நாளும் இன்பமாய் வாழ்ந்திடுவோமே!

**புவனகிரி செயபாலன்**



# களை கட்டுது மாடி !

பந்தியிலை வைத்ததுபோல் —பாப்பா
மாடியில் வைத்தோம் சோறு!
முந்தி வந்து அமர்ந்ததுவோ
பறவைக் கூட்டம் பாரு!

காகம்கிளி அணில் புறாவுடனே
புள்ளினங்கள் பாடி
காலைப்பொழுது இன்னிசையால்
களை கட்டுது மாடி!

கருங்குயிலும் மணிக்குயிலும்
கதைகள் பேசுதிங்கே! —அட
மரங்கொத்தியும் மீன்கொத்தியும்
கலந்ததெப்படி இங்கே?

சோறு வைக்க நேரமானால்
சோக கீதம் பாடுது!
சோறு உண்டு முடித்திட்டாலோ
சோடி சேர்ந்து ஆடுது!

கூடி வாழ்ந்தால் கோடிநன்மை
பழமொழியை விளக்குது!
கூடிவாழும் வாழ்வின் பெருமை
பறவை கற்றுக் கொடுக்குது!

ஒருவர் உண்ணும் தட்டுச் சோறு
பல உயிர்கள் உண்ணுமே!
தினமும் பாப்பா இட்டுப் பாரு!
பறவை வாழ்த்தும் உன்னையே!



கொற்றவன்

# இரவின் அழகு

நிலவின் குளிர் முகம்
நெஞ்சில் தவழ்ந்திடும்!
நிலத்தில் நிலவென
நீந்திக் களித்திடும்!

உலவும் காற்றினில்
உள்ளம் குளிர்ந்திடும்!
நிலவும் அமைதியில்
நிம்மதி தோன்றிடும்!

ஓவியம் போல
உலகினை மாற்றும்!
ஓய்வாய் அமைதியில்
ஊரே உறங்கும்!

காற்றில் தவழ்ந்திடும்
பூக்களின் வாசம்
மாற்றும் மனங்களை
கற்பனை ஊற்றாய்

வெறிச்சென சாலைகள்
வெளிச்சமாய் கோடுகள்
குறுக்கில் இருட்டுடன்
கலக்கும் நூதனம்

பார்க்கப் பார்க்கப்
பரவசமூட்டும்
பகலை விடவும்
இரவின் அழகு!

இராதை பிரபாகரன்



## கூடுதலான திரையரங்குகளில் ‘ஆண்பாவம் பொல்லாதது!’



### கூடுதலான வசூலிலும் கலக்கட்டும்!

ட்ரம்ஸ்டிக்ஸ் புரொடக்சன்ஸ் தயாரிப்பில், கலையரசன் தங்கவேல் இயக்கத்தில், நாயகனாக ரியோ ராஜும் நாயகியாக மாளவிகா மனோஜும் நடிக்க, சித்து குமார் இசையமைத்துள்ள ‘ஆண்பாவம் பொல்லாதது’ படம் திரையரங்குகளில் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்ற நிலையில், கூடுதலாக 100—க்கும் மேற்பட்ட திரைகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

## கல்யாணியின் புதிய தமிழ்ப்படம்!



### கல்யாணிக்கு தமிழ் வரவு நல்வரவாகுக!

நடிகை கல்யாணி பிரியதர்ஷன் நாயகியாக நடிக்கும் புதிய படத்தின் பூஜை நடைபெற்றுள்ளது. நடிகர் ரவி மோகனின் ‘ஜீனி’ படத்தில் நடித்து முடித்த நிலையில், நேரடித் தமிழ்ப் படமொன்றில் கல்யாணி பிரியதர்ஷன் இணையும் இப்படத்தை அறிமுக இயக்குநர் திரவியம் இயக்க, பொட்டன்சியல் ஸ்டூடியோஸ் நிறுவனம் தயாரிக்கிறது. முன்னணி கதை நாயகியாக கல்யாணி நடிக்க உள்ளதால் படத்தின் மீது எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.




# ஜன நாயகன் இசை வெளியீட்டுத் தேதி!

## 12 மணி நேரமும் தயார்தான்!



## ஆனாலும், 8 மணி நேரமே சரி!

“

தீபிகா படுகோன், ராஷ்மிகாவை தொடர்ந்து கீர்த்தி சுரேஷும் 8 மணி நேர வேலையை வலியுறுத்தியுள்ளார். பேஷன் ஸ்டுடியோஸ், தி ரூட் தயாரிக்கும் ‘ரிவால்வர் ரீட்டா’ பட வெளியீட்டுக்காக கீர்த்தி சுரேஷ் பேசுகையில், ‘தற்போது நடிகைகளிடம் 8 மணி நேர வேலை ஆதரவு பெருகி வருகிறது. 8 மணி நேரம் நாங்கள் வேலை செய்த பிறகு, ஜிம் ஒர்க் அவுட், உணவு, திட்டமிடல், என முடித்து நள்ளிரவு 12 மணிக்கு மேல் தூங்கி, மீண்டும் அதிகாலையில் எழ வேண்டும். 12 மணி நேரம் வேலை செய்ய நான் தயார்தான். ஆனால் உடல் நலனுக்கு 8 மணி நேர வேலைதான் வசதி!’ எனக் கூறியுள்ளார்.



## கோலாலம்பூரில் இசை கோலாகலம்!




நடிகர் விஜய்யின் ஜன நாயகன் படத்தின் இசை வெளியீட்டுத் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படத்தின் முதல் பாடலான ‘தளபதி கச்சேரி’ அண்மையில் வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்ற நிலையில், இப்படத்தின் இசை வெளியீட்டு விழா மலேசியாவின் கோலாலம்பூரில் டிச. 27 ஆம் தேதி நடைபெறும் எனத் தயாரிப்பு நிறுவனமான கேவிஎன் புரொடக்ஷன் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இயக்குநர் எச். வினோத் இயக்க, அனிருத் இசையமைக்க, பொங்கல் வெளியீடான இதில், நாயகியாக பூஜாஹெக்டேவும் முக்கியப் பாத்திரத்தில் மமிதா பைஜூவும் நடித்துள்ளனர்.



# தலவலம்

## எருக்கத்தம் புலியூர்

(இராஜேந்திரப்பட்டினம்)

புவனகிரி செயபாலன்

மறையான் நெடுமால்காண் பரியான் மழுவேந்தி
நிறைய மதிசூடி நிகழ்முத் தின்றொத்தே
இறையா னெருக்கத்தம் புலியூரி ரிடங்கொண்ட
கறையார் மிடற்றானைக் கருதக் கெடும் வினையே.' —திருஞானசம்பந்தர்




தேவாரப் பாடல் பெற்ற 276 சிவாலயங்களில் இது 215 வது தலம். நடுநாட்டில் 36—வது தலம்.

மூலவர் — சுபவேதாரண்யேஸ்வரர், நீலகண்டேஸ்வரர், திருக்குமாரசாமி

அம்பாள் — வீறாமுலையம்மன், அபிதகுசநாயகி, நீலோற்பலாம்பாள்.

தலவிருட்சம் — வெள்ளெருக்கு.

தீர்த்தம் — நீலோற்பல தீர்த்தம், கந்த தீர்த்தம், செங்கழுநீர் தீர்த்தம்.

தொன்மம் — 1000 முதல் 2000 ஆண்டுகள் பழமையானது.





வழிப்பட்டோர் — வியாக்ரபாதர், உருத்திர சன்மர், சம்பந்தர், சேக்கிழார்.

பதிகம் பாடியவர் — திருஞானசம்பந்தர் பத்து பாடல்கள்.

வியாக்கரபாதர்

புலிக் கால் முனிவரான வியாக்கரபாதர், தன் தந்தை மாத்தியந்தனரிடம் தில்லை நடராஜனின் பெருமையைக் கேட்டறிந்து, தில்லை வந்து ஒரு மூலநாதரை வழிபட்டு வந்தார்.

அன்று மலர்ந்த பூக்களைப் பறித்து வந்து இறைவனுக்கு அர்ச்சிப்பது வழக்கம். பொழுது புலர்ந்ததால் வண்டுகள் மலர்களில் உள்ள மகரந்தத்தை உண்பதால், பூக்களின் தூய்மை போய்விடுகிறது என்று நினைத்த அவர், முன்னிரவிலேயே மரங்களில் ஏறிப் பூப்பறிக்க, புலிக் கால்களையும் அப்பூக்களை ஆராய்ந்து பார்த்து பறிக்க புலியின் கண்களையும், ஈசனிடம் வேண்டிப் பெற்றார்.

அதனால் இவர் வியாக்கரபாதர் (வடமொழியில் வியாக்கிரம் என்றால் புலி என்று பொருள்) ஆனார். தமிழில் புலிக்கால் முனிவர் என்று அழைக்கப்பட்டார்.

வியாக்கரபாதர் பூசித்த தலங்கள் புலியூர் என்று ஐந்து தலங்கள். அவை பெரும்பற்றப்புலியூர் (சிதம்பரம்), திருப்பாதிரிப் பலியூர், ஓமாம்புலியூர் திருப்பெரும்புலியூர் (திருவையாறு நெய்தானம் அருகில் இருப்பது) மற்றும் ராஜேந்திர பட்டினம் என்று அழைக்கப்படும் எருக்கத்தம்புலியூர்.

தலப் பெயர்கள்

எருக்கத்தம்புலியூர் என்ற பெயர், தலவிருட்சமான வெள்ளெருக்கையும், முனிவர் வியாக்கரபாதரின் வழிபாட்டையும் குறிக்கிறது. குமரேசப்பட்டினம் என்ற பெயர் முருகப் பெருமானின் வழிபாட்டுடன் தொடர்புடையது. பிற்காலத்தில் ராஜேந்திர சோழனின் அரசு ஆதரவு மற்றும் திருப்பணிகள் செய்ததன் விளைவாக இராஜேந்திரப் பட்டினம் என்ற பெயர் பெற்றது.




புராண வரலாறு

கைலாயத்தில் சிவன் வேதங்களின் உட்பொருளை பார்வதிக்கு உபதேசித்துக் கொண்டிருந்த போது, பார்வதியின் கவனம் சிதறியது. அதனால் அவளை பரதவர் குலத்தில் மீனவப் பெண்ணாகப் பிறக்குமாறு சாபமிட்டார். இதனால் கோபமடைந்த முருகன், தன் தாயை சிவன் சாபம் இடக் காரணமாக இருந்த வேத நூல்களை கடலில் வீசி எறிந்தார். முருகனின் செயலுக்காக ஈசன் அவரை மதுரை தனபதி — குணசாலினி தம்பதியருக்கு மகனாக உருத்தரசன்மர் என்ற பெயரில் ஊமைப் பிள்ளையாகப் பிறக்கும்படி சாபமிட்டார்.

உரிய வயது வந்தபோது, பல சிவ தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்தார். கடைசியாக எருக்கத்தம்புலியூர் வந்து சிவலிங்கம் அமைத்து வழிபட்டுப் பேசும் திறன் பெற்றார். குமரன் வழிபட்டதால் இத்தலத்தில் இருக்கும் சிவனுக்கு திருக்குமாரசாமி என்று பெயர். உருத்தரசன்மர் உருவம் இக்கோயிலில் உள்ளது.

வெள்ளருக்கு

இத்தலத்தின் பெருமையைக் கேட்ட தேவர்களும் முனைவர்களும் இங்கு வந்து மரங்களாகவும்,





பறவைகளாகவும் மாறி, ஈசனை வழிபட்டு வந்தனர். அங்கே வந்து வேடர்கள் பறவைகளைக் கொல்லவும், மரங்களை வெட்டவும், முயன்றனர். தேவர்களும் முனிவர்களும் ஈசனிடம் முறையிட, அவர்களை யாருக்கும் பயன்படாத வெள்ளெருக்கு மரங்களாக மாறி வழிபடும்படி கூறி மறைந்தார். அவ்வாறே அவர்கள் யாருக்கும் பயன்படாத வெள்ளருக்கு மரங்களாக மாறி இத்தல இறைவனை வழிபட்டனர்.

திருநீலகண்ட யாழ்ப்பாணம்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான இவர், இத்தலத்தில் யாழின் மூலமாக இன்னிசை வளர்க்கும் பெரும்பாணர் குலத்தில் பிறந்தவர். இவர் சிவபெருமானின் திருப்புகழை யாழ் மூலம் இசைக்க, ஏ ழி ை ச யி லு ம் வல்லவரான தன் மனைவி மதங்க சூளாமணி மூலம் இ ை ச க ளு ம் நல்லவரான தன் மனைவியை மறந்து சூலாமணியாருடன், சோழ நாட்டில் உள்ள திருத்தலங்களை வணங்கி பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையை அடைந்தார்.

மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலின் முன் யாழினை இசைத்து, ஈசனின் புகழைப் பாடியபடி இருந்தார். இவரது இன்னிசையைக் கேட்ட ஈசன், தனது பக்தர்களின் கனவில் தோன்றி, ‘திருநீலகண்ட பெரும்பாணரைத் தம்முன் இசைக்க வேண்டும்’ என்று சொன்னதைக் கேட்டு, அவ்விதமே பாணரை ஈசன் முகம் கொண்டு சென்றனர். அவர் அமர பொற்பலகையை இட்டனர்.

பாணர் அதன்மீதமர்ந்து ‘உமையொரு பாகர்’ வர்ணங்களை உலகெலாம் அறிய இசைத்துப் பாடினார். இதன்பின், தன் மனைவியுடன் பல தலங்களுக்குச் சென்று வழிபட்டார். கடைசியில் திருநல்லூர் பெருமணத்தில் ஆளுடைய பிள்ளையாரின் திருமணத்தைக் கண்டு அவருடனே கூட, அடியார் திருக்கூட்டத்துடன் பெரும் ஜோதியுடன் புகுந்து, ஈடில்லா பேரின்ப வாழ்வு பெற்றார்.

சுவேதன்

சுவேதன் என்ற மன்னன் முன்வினைப் பயனால்





படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com



வெண்குஷ்டத்திற்கு ஆளானான். இந்த மன்னன் இத்தலத்திற்கு வந்து நீராடி சிவபூஜை செய்து நோய் நீங்கப் பெற்றான். எருக்கிற்கு வெண்குஷ்டத்தைப் போக்கும் சக்தி உண்டு.

கோயில்

ஐந்துநிலை கொண்ட ராஜகோபுரம். கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் பலிபீடம், கொடிமரம். கோபுரத்திற்கும் கொடிமரத்திற்கும் இடையில் நந்தி மற்றும் மண்டபம் உள்ளன. வலதுபுறம் சிறிய விநாயகர் சன்னதி. வெளிச் சுவற்றின் இடதுபுறம் நவக்கிரகங்களும் நால்வரும் உள்ளனர்.

மகாகணபதி, விசுவநாதர், விசாலாட்சி, முருகன், இலக்குமி சன்னதிகளை வணங்கிச் சென்றால், திருநீலகண்டேஸ்வரர் சன்னதி உள்ளது. கோஷ்ட மூர்த்தங்களாக விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர்.

தட்சிணாமூர்த்திக்கு மேலே சிறிய கோயில் அமைப்பில் சட்டைநாதர் தரிசனம் தருகிறார். அவரை தரிசிக்காமலே மேலே செல்ல படிகட்டுகள் உள்ளன. சண்டேஸ்வரர் சன்னதி உள்ளது.




கருவறையைச் சுற்றி வள்ளி தெய்வானை சமேத முருகர் சன்னதி. துவார பாலவர்களை வணங்கி உள்ளே சென்றால், மூலவர் அழகிய சுயம்புத் திருமேனியாக அருளுகிறார். வலப்பக்கம் அம்பாள் சன்னதி. இருவரும் கிழக்கு நோக்கி உள்ளனர்.

சூரிய ஒளி

ஒவ்வொரு வருடமும் மார்ச் 16 முதல் 20 வரை சூரிய ஒளி மூலவர் மீது படும்.

வள்ளலார்

வள்ளல் பெருமாள் தான் பாடி அருளிய விண்ணப்பக் கலிவெண்பாவில், 'நாடியவான் அம்புலியூர் சோலை அணிவயல்கள் ஓங்கி எருக்கத்தம் புலியூர் வேத சமரசமே...' என்று போற்றியுள்ளார்.

இராஜேந்திரப் பட்டினம்

பல்லவர் காலத்தில் கட்டப்பட்டு சோழர் காலத்தில் கல்லால் புனரமைக்கப்பட்டு இருக்கலாம். இராஜராஜ சோழ மன்னனுக்குப் புத்திர பாக்கியத்தையும், அவனுடைய மகனான இராஜேந்திர சோழனுக்கு திருமண வரத்தையும் தந்த தலம். இராஜேந்திர சோழ மன்னன் இவ்வாலயத்திற்கு ஏராளமான திருப்பணிகள் செய்துள்ளதால் இத்தலத்திற்கு இராஜேந்திரப் பட்டினம் என்ற பெயர் உண்டாயிற்று.

பரிகாரம்

முருகப் பெருமானின் ஊமைத்தன்மை நீங்கிப் பேசும் திறன் பெற்றதால், இத்தலத்தில் பேச்சுத் திறன் குறைபாடு உள்ளவர்களும், பக்தர்கள் குழந்தை வரம் பெறவும் அருள் செய்யும் ஒரு சக்தி வாய்ந்த தலம்.

பூஜை

தினமும் நான்கு கால பூஜை நடக்கிறது. இது தவிர, பிரதோஷம் மகா சிவராத்திரியில் சிறப்பு பூஜைகள் செய்யப்படுகின்றன.

கும்பாபிஷேகம்

அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இயங்கும் இக்கோயில் கும்பாபிஷேகம் 1996 இல் நடந்தது. அதனை தொடர்ந்து 11.2.2018—ல் கும்பாபிஷேகம் நடந்தது.

கோயில் திறக்கும் நேரம்

தினமும் காலை 6 மணி முதல் 12 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்திருக்கும்.

இருப்பிடம்

விருத்தாசலம் — ஜெயங்கொண்டம் செல்லும் சாலையில் 13 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. விருத்தாசலம் — பெண்ணாடம் சாலையில் 5 கி.மீ. தொலைவில் கருவேப்பிலங்குறிச்சி. அங்கிருந்து ஜெயங்கொண்டான் செல்லும் சாலையில் 3 கி.மீ. தூரத்தில் இராஜேந்திர பட்டினம் உள்ளது.

(தொடரும் வலம்.....)




# கேசம்

**நூலாசிரியர்: நரன்**

**சிறுகதைகள்**

**விலை : ரூ. 200**

**பக்கங்கள் : 127**

**வெளியீடு:**

சால்ட் பதிப்பகம்
தொடர்புக்கு: 93630 07457




இந்நூலின் கதை மாந்தர்கள் தொண்ணூறு சதவிகிதம் அதீத மனப்பிறழ்வுத் தன்மை கொண்டவர்களாக இருக்கிறார்கள். அதன் நீட்சியாகச் சாதாரண மனிதர்களிடம் இல்லாத வித்தியாசமான பழக்கவழக்கங்கள் கொண்டவர்களாக இருக்கிறார்கள். சாதாரண மக்களோடு புழங்கும் அசாதாரண மனநிலை கொண்டவர்களாக அவர்கள் தங்கள் பிறழ்வுகளை யாருமறியாது ஒரு ரகசியமாகவே அனைவரும் வைத்திருப்பது தான் கதையை சுவாரசியமாக்குகிறது.

இந்தக் கதைகளின் பெரும்பாலான கதாபாத்திரங்கள் தங்களின் பிறழ்வுகளை ஒரு பிரச்சினையாக யோசிக்கவில்லை என்பதுதான் வேடிக்கை. மொத்தம் பதினொரு கதைகள் கொண்ட இந்நூலில், ஆழ்ந்த மனநிலையில் வாசிக்கும் போது மட்டுமே புலப்படுமாறு, நுண்ணுணர்வு சார்ந்த, அதுவும் பாலுறவுகளின் பிறழ்வு சார்ந்த நுட்பமான விஷயங்களை அநாயசமாகக் கையாண்டிருக்கிறார் நூலாசிரியர்.

சிறுகதை

# மேன்மக்கள் மேன்மக்களே!

சாந்தி நாதன்

நடுப்பகல் 11 மணியிருக்கும். சாப்பிட்டு விட்டுச் சோபாவில் அரைத் தூக்கத்தில் இருந்த சரஸ்வதி, காலிங்பெல் ஒலியால் எரிச்சல் அடைந்து விழித்துக் கொண்டாள். வாசற்கதவைத் திறந்தவள் அருமை மகள் பூர்ணிமாவைக் கண்டதும் முகம் மலர்ந்தாள். “என்னம்மா தூக்கமா? தனியாவா இருக்கே? அண்ணா, அப்பா, உன் அருமை மருமகள் யாருமில்லையா?” படபடவெனப் பேசிக்கொண்டே சோபாவில் அமர்ந்தாள் பூர்ணிமா.


“அப்பா சாப்பிட்டு விட்டுப் படுத்துண்டு இருக்கார். உன் அண்ணா ஆபிஸ் டூரில் கல்கத்தா போயிருக்கான். வர இரண்டு நாளாகும். உன் அண்ணி வீடெல்லாம் கிளீன் செய்யறேன்னு வேலைக்காரி சொர்ணாவுடன் இத்தனை நேரம் மாடிக்கும் கீழுக்கும் போயிட்டு இப்பத்தான் குளிக்கப் போயிருக்கா. இனிமேல் தான் சாப்பிட வருவா’” என்றாள். “நீ இன்னும் சாப்பிடாமல் இருக்கியா? ஞாயிற்றுக் திழமைன்னாகூட வேளையோடு சாப்பாட்டுக் கடையை முடிக்க மாட்டீங்களா?”




“எனக்கு ஏதுடி ஞாயிற்றுக்கிழமை?” வழக்கம்போல் காலையில் எழுந்து சமையலை முடிச்சு நானும் அப்பாவும் சாப்பிட்டாச்சு. சனி, ஞாயிறு லீவுன்னா கூட உங்க அண்ணி சமைக்கறது கிடையாது உங்க அண்ணாவும் கலியாணத்துக்கு முந்தியே கண்டிஷனா சொல்லிட்டானே! நீதான் சமைக்கணும். அவ கூடமாட உதவி பண்ணுவா அவ்வளவுதான்னு. ஒரு வருஷமா அப்படித்தானே நடக்கறது. சரி சரி நீ சாப்பிட்டாயா? குழந்தைகள் ஏன் வரலை?” என்றாள் சரசு.

‘‘இன்னிக்கு எங்க மாமியாரின் தங்கை பிள்ளைக்குச் சாயங்காலம் நிச்சயதார்த்தம். காலையில் இட்லி பண்ணி எடுத்துண்டு இவர், மாமா, மாமி, குழந்தைகள் எல்லாம் பாண்டிச்சேரி போயாச்சு. எனக்கு போகப் பிடிக்கலை அதனால உனக்கு உடம்பு சரியில்லை அப்படின்னு டூப் விட்டுவிட்டு இங்கு வந்துட்டேன். என் மாமியாரும் எப்படியும் நாங்க வர லேட்டாகும் நீ வேணா உங்க அம்மாவோட இருந்துட்டு காலையில வாயேன் அப்படின்னா அதான்…”

“சரி நல்ல வேலை பண்ணியிருக்கே. உள்ளூரில் இருந்தாலும் உனக்கு இங்கு வர எங்க முடியறது? அதே உங்க அண்ணி சாருவை பாரு! ஆபிஸிலிருந்து அம்மா வீட்டுக்குப் போவா, அம்மா வீட்டுக்குப் போயிட்டு ஆபிஸ் போவா” என்றாள் வெறுப்பாக. “சரி நான் பேசிண்டே இருக்கேன்.



நீ சாப்பிட்டாச்சா?” என்றவள் படியிறங்கும் மருமகளைப் பார்த்து, “சாரு யாரு வந்திருக்கா பார்த்தியா? பூர்ணி. பசியோட வத்திருக்கியே சாப்பிட வாடின்னா அண்ணியும் வரட்டுமேன்னு உக்காந்திருக்கா’” என்றாள்.

“வா பூர்ணி, குழந்தைகளைக் கூட்டிண்டு வரலையா? சரி வா. சாப்பிட்டுக் கொண்டே பேசலாம்” என்றவளாய் சாப்பாட்டு மேசைக்கு நகர்ந்தாள் சாரு. “உங்க அம்மா வீட்டில் எல்லாரும் சௌக்கியமா அண்ணி? உங்க தம்பிக்கு காலேஜ் இண்டர்வியூவில் நல்ல கம்பெனியில் வேலை கிடைச்சிருக்காமே! இனிமே உங்களுக்கும் கொஞ்சம் சிரமம் குறையும் இல்லையா?” என்றாள் குழைவாக.

“அப்படியெல்லாம் ஒன்னுமில்லை! மாதாமாதம் பண உதவி தேவைப் படாவிட்டாலும் என் தங்கை மதுமிதாவின் திருமண சமயத்தில் சேர்த்து வைத்துப் பண உதவி செய்வதாக இருக்கிறோம். மது இப்போ பி.காம். 3வது வருடம் படிக்கிறா கூடவே சி.ஏ. இண்டரும் முடித்து விட்டா. எப்படியாவது அடுத்த வருடத்துக்குள் சி.ஏ. முடித்து வேலைக்குப் போக வேண்டும் என்று ஆசைப்படற பார்ப்போம்” என்றாள் சாரு. மகளுக்கு கண்ஜாடை காட்டிய சரசுவின் ஒப்புதலுடன், “அண்ணி, உங்க கிட்ட ஒரு உதவி கேட்பேன். ஒத்துப்பீங்கன்னு நினைக்கிறேன்” என்றாள் தயக்கமாக.

“என்ன விஷயம்? ஒத்துக்கக்கூடியதாக இருந்தா கண்டிப்பா ஒத்துப்பேன். சொல்லு”. சாருவின் பதிலில் சிறிது அவநம்பிக்கை அடைந்த பூர்ணிமா, “ஒண்ணுமில்லை என் நெருங்கிய தோழிக்கு ரொம்ப நாளா தெரிந்த ஒரு நகைக்கடைக்காரரிடம் சில நகைகள் விலைக்கு வந்திருக்கு. அதில் ஒரு நெக்லேஸ் எனக்கு ரொம்ப பிடித்திருக்கு. பில் இல்லாமல் வாங்குவதால் விலையும் குறைச்சலாகத்தான் இருக்கு. இவர் வீட்டிற்குக் கொடுக்கும் பணத்தில் நான் சேர்த்து வைத்துள்ளது போக ஒரு முப்பதாயிரம் வரை தேவைப்படும் நீங்கள் கொடுத்தால் நான் கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பிவிடுவேன் முடியுமா?” என்றாள்.

‘’பூர்ணிமா, இந்த மாதிரி நகை வாங்குவதெல்லாம் சரியில்லை. பில் இல்லாமல் வாங்கி அது தரமில்லாத நகை என்று தெரிந்தால் என்ன செய்வாய்? உன் வீட்டுப் பெரியவர்களுக்கோ கணவருக்கோ தெரியாமல் இந்த மாதிரி செய்யாதே என்றுதான் நான் சொல்லுவேன். அதுவுமில்லாமல் என்னிடம் அவ்வளவு பணமும் இப்போது இல்லை’’ என்றாள் உறுதியான குரலில்.




‘’பார்த்தியாம்மா, நீ தான் அண்ணிகிட்டே கேளுன்னு சொன்னே இப்பப் பாரு”

குரலில் ஆத்திரம் தொனிக்க நாற்காலியை நகர்த்திக் கொண்டு கை கழுவ எழுந்தாள் பூர்ணிமா. “ஆமாண்டி தப்புதான். நீ என்ன அவ தம்பியா தங்கையா? கேட்டதும் உதவி பண்ணுவதற்கு? என்னால் உனக்கு கிடைச்ச அவமானத்துக்கு என்னை மன்னிச்சிடு” என்றாள் சரசு.

“*ஏய் சரசு என்ன பேசற நீ? நானும் பூர்ணிமா வந்ததிலிருந்து உங்க பேச்சை

எல்லாம் கேட்டுண்டுதான் இருக்கேன். அம்மாவா லட்சணமா பெண்ணுக்கு இதெல்லாம் தப்புன்னு புரியவைக்கப் பாரு. அநாவசியமா சாருவை நோகடிக்காதே, அவ தகப்பனார் இல்லாத குடும்பத்தின் மூத்த பெண். கல்யாணத்தின் போதே தன் குடும்பத்துக்குத் தன் வருவாயைத் தருவதற்கு நம்மிடம் அனுமதி கேட்டாள். நாமும் அதற்கு ஒத்துக் கொண்டதால்தான் அவள் இந்தக் கல்யாணத்திற்கே சரியென்றாள். அதைப் பற்றி

பேச உனக்கோ உன் பெண்ணுக்கோ எனக்கோ எந்த உரிமையும் இல்லை நினைவிருக்கட்டும்'" என்றார் அதட்டலாக.

"வாங்கோ! எங்கடா ஆளைக் காணலியேன்னு நினைச்சேன். மாட்டுப்பெண்ணை ஏதாவது பேசினாலே உடனடியா வந்திடுவேளே! நீங்க காசு பணத்தோட இருந்திருந்தா நம்ம பொண்ணு இப்படிக் கண்டவா கிட்டே கேக்கறமாதிரி நிலைமை வந்திருக்குமா? எங்க அப்பா அம்மா வாங்கித் தந்தான்னு அவளும் பெருமையா வாங்கிப் போட்டிண்டிருப்பா. இல்லையா?" என்றாள் ஆங்காரக் குரலில்.

"அம்மா பூர்ணிமா, உங்க அம்மா ஏதோ புரியாம



பேசறா. நீ படிச்ச பெண் தானே.

இந்த மாதிரி வேண்டாத வேலையெல்லாம் செய்யாதே. நல்ல புருஷனுக்கு ஏத்த மனைவியாய் அவருடைய பிசினஸிற்கு ஒத்தாசையா இரு. குழந்தைகளைக் கவனித்து படிப்பிலும் எல்லாத்திலேயும் உயர உதவி பண்ணு..." சதாசிவம் பேச்சை முடிப்பதற்குள், "போதும் அப்பா உங்க அட்வைஸ்! எங்க மாமனாரைப் பாருங்க பென்ஷனையும் வட்டி பணத்தையும் இரண்டு பெண்களுக்கும் கேக்கறதையெல்லாம் வாங்கித் தரவே செலவழிக்கிறார். பேரன், பேத்திகளும் தாத்தாவிடம் இருந்து ஆசைப்பட்டதை வாங்கி சந்தோஷப்படறா. நீங்க அப்படியா? எல்லாத்துக்கும் அண்ணா கையையும் அண்ணி தயவையும் எதிர்பார்த்துண்டு அவாளுக்கு சலாம் போட்டுண்டு இருக்கேளே" என்றாள் இளக்காரமாக. "பூர்ணிமா அப்பாவை இப்படியெல்லாம் பேசாதே பிளீஸ்'" என்ற சாரு, ''அவதான் ஏதோ தெரியாம பேசறான்னா நீங்க ஏன் அவகூட வீணா விவாதம் பண்றீங்கப்பா விடுங்க" என்றாள் மாமனாரைப் பார்த்து.






"இல்லைம்மா, இன்னிக்கு இதுக்கு ஒரு முடிவு கட்டியாகணும்'' என்றவர் தொடர்ந்து, "பூர்ணிமா எனக்கென்று இருந்த ஒரு வீட்டையும் விற்று உன் கல்யாணத்தை உங்க அம்மா ஆசைப்பட்டபடி சிறப்பாகப் பண்ணலியா? உன் புகுந்த வீட்டில் மாமனார், மாமியார் கணவர் எல்லாரும் உன்னை நல்லபடியாக நடத்தலியா? காரு, பங்களான்னு உயர்ந்த வாழ்வுதானே வாழற? எண்ணம் மட்டும் ஏன் மட்டமா இருக்குன்னு எனக்குப் புரியலை. பேரன், பேத்தி பிறந்த போதும் உங்க அண்ணன் உனக்கும் உங்க அம்மாவுக்கும் மனசு குளிரக்குளிர சீர் பண்ணி அனுப்பலையா? ஆனா அப்பாவா நான் அவனுக்கு என்ன சொத்து வைச்சிருக்கேன் சொல்லு. உங்க மாமனார் பிள்ளைக்கு ஒரு வீடு எழுதி வைச்சிருக்கார். உங்க அண்ணா கோபி என்னை இந்த மாதிரி மட்டமா ஒரு தடவை கூட பேசியது இல்லை தெரிஞ்சுக்கோ'" என்றார் கோபமாக.

"போதும்பா இந்தப் பேச்சு. சரி நீங்களும் அம்மாவும் காலையிலேயே சாப்பிட்டாச்சே! காபி போட்டுண்டு வரட்டுமா!" என்று திரும்பிய சாருவிடம் "உன் மாமனாருக்கு வேணுமானா கலந்துக்கோ. எனக்கு வேண்டாம்" என்றாள் சரசு. "அம்மா நான் கிளம்பறேன்'" என்ற பூர்ணிமாவிடம் "ஏண்டி நானும் உன்னோடு வரட்டுமா" என்றாள் சரசு. "அவ உனக்கு உடம்பு சரியில்லைன்னு சொல்லிட்டு வந்திருக்கா. அப்ப நீ எப்படி அவகூட போகமுடியும் சொல்லு" என்றார் சதாசிவம் கிண்டலாக.

"அவ வீட்டுக்குப் போகாட்டா என்ன? இரண்டு பேருமா வனஜா வீட்டுக்குப் போய் புதிதாகப் பிறந்திருக்கற அவ பேரனைப் பார்த்துட்டு ஹோட்டல்ல டிபன் சாப்பிடுவோம். அப்புறம் அவளை ஆட்டோவில் ஏத்தி அனுப்பிவிட்டு நான் வரேன்'' என்றாள் சரசு. "சீக்கிரம் கிளம்பி வாம்மா?" என்ற மகளிடம் "இதோ ஒரு நிமிஷம் புடவை மாத்திண்டு வரேன்!" என்றவள் "இதோ பாரு எனக்காக யாரும் சாப்பிடாம காத்திருக்க வேண்டாம். உனக்கும் உன் மாமனாருக்கும் வேணுங்கறதை பண்ணிக்கோங்கோ" என்று



மருமகளுக்கு உத்தரவிட்டாள்.

“சரசு, நாளைக்கு காலையிலே நான் காஞ் சிபுரம் கிளம்பறேன்னு உங்கிட்ட ஏற்கனவே சொல்லியிருக்கேன். அங்கிருக்கிற என் பால்ய நண்பன் ரொம்ப நாளாகக் கூப்பிட்டிண்டு இருக்கான். இரண்டு நாள் தங்கி கோயிலெல்லாம் பாத்து விட்டு வருவேன்” என்றார் சதாசிவம்.

“ஏம்பா, இதுக்கெல்லாம் உங்ககிட்ட பைசா இருக்கா? இல்லை அண்ணா அண்ணியிடம் தான் கேட்டு வாங்கிப்பேளா” இளக்காரமாகக் கேட்கும் பெண்ணை முறைத்தவராய் “ஏதோ சொற்ப தொகையை பாங்கில் போட்டு வைச்சிருக்கேன். அதிலிருந்து வர வட்டி பணம் பாதி உங்க அம்மா கையில் கொடுத்துட்டு மீதியை என் செலவுக்கு வைச்சுப்பேன். தேவைப்பட்டால்

பிள்ளையிடமும் கேட்டு வாங்கிப்பேன். விவரம் போதுமா இன்னும் ஏதாவது தெரியணுமா?” என்றார்.

“போதும் போதும் வாம்மா போகலாம்” என்று வேக நடை போடும் இருவரையும் பார்த்துக் கொண்டு நிற்கும் மாமனார் கையில் காபியைக் கொடுத்த சாரு, “அப்பா நாளைக்கு நீங்களும் என்னோட கிளம்பி வந்துடுங்க. உங்களை இறக்கி விட்டுவிட்டு நான் ஆபீஸ் போறேன். இவர் ஊரில் இல்லாததால் ஆட்டோ சொல்லி வைச்சிருக்கேன். எட்டு மணிக்கெல்லாம் வந்துவிடுவான்” என்றவளாய் வேலைகளைப் பார்க்கச் சென்றாள்.

மறுநாள் காலை எட்டு மணிக்கு அரக்கப்பரக்க வேலைகளை முடித்துக் கொண்டு சாரு கிளம்பவும் வாசலில் ஆட்டோ வரவும் சரியாக இருந்தது. மாமனாரின் கைப்பையை எடுத்துக்கொண்டு “அம்மா வரேன்” என்ற அவளுக்கோ “சரசு, போயிட்டு வரேன்” என்ற கணவனுக்கோ பதில் சொல்லாமல் வழியனுப்பியவள் தன் வேலைகளை முடித்துக் கொண்டு டி.வி பார்க்கத் துவங்கினாள்.

“அம்மா இந்த கடுதாசி சின்னம்மா ரூமை பெருக்கும்போது கிடைச்சது. ஏதாவது முக்கியமான பேப்பரா பாருங்க” என்று வேலைக்காரி நீட்டிய பேப்பரை அலட்சியமாக வாங்கிய சரசுவின் கண்கள் அதைப் பிரித்துப் பார்த்தவுடன் விரிந்து சிவந்தன.

“இப்படிப் போறதா விஷயம்? நாளைக்கு கோபி வரட்டும் இவளை உண்டு இல்லைன்னு பண்ணிடலாம்“ மனதில் கறுவிக் கொண்டு தாளைப் பத்திரப்படுத்தினாள். வழக்கத்தைவிடத் தாமதமாகத் திரும்பிய சாருவை உக்கிரப்பார்வை பார்த்தவள் “நான் சாப்பிட்டாச்சு. நீ சாப்பிட்டுவிட்டு கிச்சனை சுத்தம் பண்ணு. கதவெல்லாம் பூட்டிவிட்டு மாடிக்குப் போ” என்றவளாய் தன் அறைக்குச் சென்றாள். மறுநாளும் எட்டு மணிக்கே தயாரான சாருவைப் பார்த்து “இன்னிக்கு சாயங்காலம் கோபி வந்துவிடுவான் நினைவிருக்கா? இன்னைக்கும் லேட்டாகத்தான் வருவியா” என்றாள். “இன்னைக்கு லேட்டாகாது. அப்பா கூட இன்னைக்கு வந்தாலும் வந்துவிடுவார். அவர் நண்பர் நேற்று எனக்கு போன் செய்து சொன்னார்” என்றவளாய் வாசலில் வந்த ஆட்டோவில் ஏறிச் சென்றாள்.




மாலை மகன் வருவதற்குள் இட்லியும் சட்னியும் செய்து பால் காய்ச்சி டிகாஷனையும் தயார் செய்தவள் வாசலுக்கும் உள்ளுக்கும் நடந்து அவனது வரவிற்காகப் பொறுமை இழந்து தவித்தவள், போன் அடிக்கவே ஓடிச்சென்று எடுத்தாள் சரசு. “அம்மா நான் பூர்ணிமா பேசறேன். அப்பா காஞ்சிபுரம் போகலையா?” என்றாள். “நேத்தே போயிட்டாரே! ஏன் என்ன விஷயம்“ என்றவுடன் “இதபாரு அப்பா காஞ் சிபுரம் போகலை. மத்தியானம் நான் அவரைப் பாத்தேன். உன் அருமை மருமகளின் தம்பி

ராஜீவோட ஸ்கூட்டரில் போயிண்டு இருந்தார். என்ன விஷயம்னு உனக்கு ஏதும் தெரியுமா” என்றாள்.

“இதென்னடி புதுக்கதை? இங்கே நானே ஒரேடியா குழம்பிப் போயிருக்கேன்” என்ற சரசு “சரி வாசலில் டாக்ஸி சத்தம் கேக்கறது. நாளைக்கு எல்லா கதையும் சொல்றேன்” என்றவளாய் மகனை வரவேற்க வாசலுக்கு விரைந்தாள்.

“என்னம்மா பவர் கட்டா? சீரியல் பாக்காம உக்காந்திருக்கியே” கிண்டலடிக்கும் மகனை முறைத்தவள் “சீரியலைவிட நிஜத்தில் நடக்கறதெல்லாம் பார்த்து பிரமிச்சுப் போயிருக்கேன். சரி சரி நீ எப்போ சாப்பிட்ட? சூடா இட்லி தயாரா இருக்கு சாப்பிடறயா” என்றாள். “இரு. கைகால் அலம்பிண்டு வரேன்” என்று அறைக்குள் சென்று உடைமாற்றிக் கொண்டு சாப்பிட வந்தமர்ந்தான் கோபி. மகன் சாப்பிட்டு முடிப்பதற்கு காத்திருந்து காபியோடு வந்தவள் “கோபி உங்கிட்ட ஒண்ணு சொல்லணுமே” என்றாள்.

“என்ன விஷயம் சொல்லு” என்றவனிடம் தயாராக வைத்திருந்த தாளை நீட்டி “உங்க ரூமை பெருக்கும்போது கிடைத்ததுன்னு வேலைக்காரி கொடுத்தா” என்றாள். ‘‘என்னது ஏதோ அடகுக்கடை ரசீது? கீழே சாருவின் கையெழுத்து என்னது இதெல்லாம்“ என்றான் படபடப்பாக.

“என்னைக் கேட்டா எனக்கு என்ன தெரியும்? ஊருக்குப் போன நாளிலிருந்து தினமும் ஆபிஸிற்கு சீக்கிரம் கிளம்பிப் போறா வருவதும் முன்னைவிட லேட்டாகத்தான் வரா. சனிக்கிழமை கூட வேலையிருக்குன்னு போயிட்டு வந்தா. திங்கட்கிழமை காலையிலே காஞ்சிபுரம் போறேன்னு உங்க அப்பா கிளம்பிப் போனார். ஆனா கொஞ்ச நேரம் முந்தி பூர்ணிமா போன் பண்ணி அப்பா சாருவின் தம்பி ராஜீவுடன் ஸ்கூட்டரில் போனதைப் பார்த்தேன் என்று சொன்னா. உனக்குத் தெரியாம அவ பிறந்த வீட்டுக்கு ஏதோ பண்றா போலிருக்கு. இதிலே உங்க அப்பாவும் உள்கையா இருக்கற மாதிரி தெரியறது” என்றாள்.

“இங்கு பணம் என்ன கொட்டியா கிடக்கு? வ ர ட் டு ம் இன்னைக்கு” காபியை ஒரு வாயாகக் குடித்து டம்பளரைக் கோபமாக வைக்கவும் கேட்டை திறந்து கொண்டு சதாசிவம் உள்ளே வரவும் சரியாக இருந்தது.




“வாடா எப்ப வந்தே” என்றவருக்குப் பதில் சொல்லாமல் முறைத்தான் கோபி. அடுத்த ஐந்து நிமிடத்தில் ஆட்டோவை விட்டு சாரு இறங்கி வேகமாக உள்ளே வந்தாள்.

“என்ன கோபி, உங்க டூர் எப்படி இருந்தது? வேலையெல்லாம் நன்றாக முடிந்ததா?” என்று அருகில் வந்த சாருவிடம் ரசீதை நீட்டியவன் “முதல்ல இது என்னன்னு சொல்லு. அப்புறம் மத்ததெல்லாம் பேசலாம்“ என்றான் கோபமாக.

‘‘உள்ளே போய் ஒரு டம்ளர் தண்ணீர் குடிச்சிட்டு வந்து பேசறேன்” என்று நகரப் போனவளை முரட்டுப் பிடியாய் இழுத்து “என்ன கதை சொல்லலாம்னு யோசிக்க நேரம் வேணுமா? உண்மையைச் சொல்லு” என்றான். கேலியாகச் சிரித்துக் கொண்டிருக்கும் மாமியாரையும் முகம் சிவக்க உறுத்து விழிக்கும் கணவனையும் ஒரு சேரப் பார்த்தவள். “ஒரு கடனைச் செலுத்த உடனடியாகப் பணம் தேவைப்பட்டது. அதுதான்” என்றாள். “யார் பட்ட கடன்? உங்க அப்பன் பட்ட கடனா? மாசாமாசம் கொடுப்பது போறாதுன்னு இது வேறே என்ன புதுசா சொல்லு” உறுமினான் கோபி.

“டேய் அது அவபட்ட கடன் இல்லை. உங்க அப்பன் பட்டது” குறுக்கிடும் அப்பாவை எரிப்பதுபோல் பார்த்த கோபி “அப்பா சாருவை சப்போர்ட் பண்ணவேண்டாம். அவளுக்கு இவ்வளவு திமிரும் தைரியமும் வருவதற்கு நீங்கதான் காரணம்னு அம்மா சொல்றது சரிதான் போலிருக்கு” என்றான்.

“நன்னா கேளுடா அவரை, பெத்த பெண்ணை அவ எதிரிலேயே அவ்வளவு மட்டமாகப் பேசி அழவிட்டு அனுப்பினார் தெரியுமா” என்ற சரசுவை “அம்மா கொஞ்சம் சும்மா இரு” என்றவன் “எனக்கு இப்போ முழு விவரமும் தெரிஞ்சாகணும்” என்றான். “முதல்ல நீங்க சோபாவில் உக்காருங்க. ஏன்னா, உங்க நினைவுகளை ஒரு அஞ்சாறு வருஷத்துக்கு முன்னாடி கொண்டு போகணுமே”. இகழ்ந்த குரலில் தொடர்ந்தாள் சாரு.

“உங்க அப்பாவின் தங்கை ராஜம்மாவையும் அவரது கணவர் அதுதான் உங்களை பி.ஈ, எம்.பி.எ. வரை படிக்கவைத்த ராகவனையும் நினைவிருக்கா? தொழிலில் அவர் கொடிகட்டிப் பறந்த நாள்களில் உங்கள் குடும்பமே அவரது தயவால் தான் கௌரவமாக வாழ்ந்தது என்பதும் மறந்திருக்காது என்று நினைக்கிறேன். அவரது ஒரே மகள் சுகுணாவை உங்களுக்குத் திருமணம் செய்துவைக்க அவர் விரும்பிய போது மகிழ்ச்சியாக ஒத்துக் கொண்ட நீங்களெல்லாம், எதிர்பாராத விதமாக அவர் பிஸினஸ் நொடித்து கடனாளி ஆனதும் உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொண்டு



விட்டீர்கள் இல்லையா? கடன் சுமையும் நோயும் ராகவன் மாமாவைப் பலிவாங்கிய நிலையில் நடுத்தெருவிற்கு வந்த அந்த குடும்பம் பிறகு என்ன ஆயிற்று என்றுகூட தெரிந்துகொள்ள விருப்பமின்றி ஊரைவிட்டே நீங்கள் வந்துவிட்டீர்கள் போலிருக்கு. உள்ளூர வேதனைப்பட்டாலும் உங்கள் அப்பாவால் உங்கள் இருவரையும் மீறி எதுவும் செய்ய முடியாமல் சும்மா இருந்துட்டார். மாமாவிடம் வேலைபார்த்த சுந்தரம் ஆதரவுக் கரம் நீட்டி அவர்கள் மகளையும் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்.

மாமா இறக்கும்போது பள்ளியில் படித்துக் கொண்டிருந்த அவரது மகன் ஹரியைத் தன் சொற்ப வருவாயில் நன்கு படிக்க வைத்திருக்கிறார். அவனும் நன்கு படித்து இப்போ சமீபத்தில் எங்க கம்பெனியில் வேலை செய்கிறான். திடீரென்று சுகுணாவிற்கு உடல்நலம் சரியில்லாமல் போயிருக்கு. இதில் அவள் கர்ப்பமாக வேறு இருந்திருக்கா. பரிசோதனையில் அவளுக்கு இதயத்தில் சிக்கல் குழந்தை வளரவளர மிகவும் கஷ்டப்பட்டு இருக்கிறாள். மிகவும் தேர்ந்த மருத்துவர்களால், பெரிய மருத்துவமனைகளில் ஒரு ஆபரேஷன் செய்தால் குழந்தையையும் தாயையும் காப்பாற்ற முடியும் என்ற நிலையில் ஹரி என்னிடம் உதவி கேட்டான்.

அவனது வேலை இன்னும் உறுதியாகாத நிலையில் ஆபிஸ் வழியாக லோன் எதுவும் கிடைக்காது. பேச்சு வாக்கில் தன் குடும்பத்தைப் பற்றி அவன் சொன்னதும் உங்க ஊர் என்று தெரிந்தது. மேலும் விசாரித்ததில் மற்ற விவரங்களும் புரிந்தது. உங்க அப்பாவிடம் வந்து இதெல்லாம் சொன்ன போது கதறிவிட்டார். இருவருமாகப் போய் உங்க அத்தையையும் சுகுணாவையும் பார்த்துப் பேசி என் ஆபிஸ் நண்பர்கள் வழியா எல்லா ஏற்பாடுகளும் செய்தோம். நேற்று இதய ஆபரேஷனும் சிசேரியனும் அடுத்தடுத்து செய்து தாயும் சேயும் நலம். குழந்தையின் தந்தையும் ஹரியும் நாங்க எப்படியாவது பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமா திருப்பிவிடுகிறோம் சரியான நேரத்தில் நீங்க உதவலேன்னா சுகுணா பிழைத்திருக்கவே மாட்டா" என்று சொன்னார்கள். அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை இந்த மாதிரி உதவி பண்ணவேண்டியது எங்க கடமை. அதனால் இது கடனாவே நீங்க நினைக்கக் கூடாது எங்க கடமையைத்தான் நாங்க செஞ்சிருக்கோம்னு பதில் சொன்னேன். அப்பா இல்லாத குடும்பத்தின் கஷ்டநஷ்டம் புரிஞ்சவ நான். அதெல்லாம் உணர்ந்து என்னைக் கல்யாணம் செய்துண்டு எங்க குடும்பத்துக்கும் பண உதவி செய்ய ஒத்துக்கிட்ட பெரிய மனசு உடையவர் என் கணவர்னு இவ்வளவு நாளா உங்களை ரொம்ப உயர்வா நினைச்சிக்கிட்டிருந்தேன். ஆனா உதவிய குடும்பத்தை உதறிய உங்கள் பழைய வாழ்க்கை என் மதிப்பில் உங்களைக் கொஞ்சம் இறக்கி விட்டுவிட்டது" என்றவள் தொடர்ந்து, "என் தம்பியும், அம்மா தங்கை எல்லாரும் இதில் அப்பாவுக்கும் எனக்கும் ரொம்ப உதவியா இருந்தாங்க.




"நேற்று உங்க அத்தையை வீட்டில் கொண்டுபோய் விட நான் போயிருந்தேன். 'முதல் முதலாக எங்க வீட்டுக்கு வந்திருக்கியே, உனக்கு என்ன கொடுப்பேன்னு சொல்லிண்டே தன் பெட்டியில் இருந்து இந்த சின்ன வெள்ளி கிருஷ்ணரை கொடுத்து 'சீக்கிரமே எங்க கோபிக்கு ஒரு குட்டி கிருஷ்ணன் பிறக்கணும்னு' ஆசீர்வாதம் செய்தாங்க. அதை கையிலே வாங்கும்போது எனக்கு மனசெல்லாம் கனத்து அழுகையா வந்தது. ஒரு வார்த்தை கூட பழைய கதையோ உங்களையெல்லாம் பற்றிய ஒரு தப்பான வார்த்தையையோ பேசாத அந்த நல்ல மனுஷியைப் பார்த்ததும் எனக்குக் கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே அப்படீங்கற வாக்கு எவ்வளவு உண்மையானதுன்னு புரிஞ்சுது" விடாமல் தொண்டை வரைப் பேசி முடித்தவள் அருகிலிருந்து செம்புத் தண்ணீரையும் குடித்துவிட்டு மாடியேறினாள்.

துண்டால் கண்களைத் துடைத்துக்கொண்டே சதாசிவம் அகல, கோபியும் சரசுவும் சிலையாக அமர்ந்திருந்தனர்.

ஆளுமை

# அறிவோம் தமிழர்

## 'சொல்லின் செல்வர்' இரா. பி. சே. (1896—1961)

தமிழ் அறிஞர், எழுத்தாளர், வழக்கறிஞர், மேடைப்பேச்சாளர் என பன்முகம் கொண்ட பாவலர். தமிழில் சொற்பொழிவு ஆற்றுவதிலும், உரைநடை

தமிழ் அறிஞர், எழுத்தாளர், வழக்கறிஞர், மேடைப்பேச்சாளர் என பன்முகம் கொண்ட பாவலர். தமிழில் சொற்பொழிவு ஆற்றுவதிலும், உரைநடை எழுதுவதிலும் மிகவும் பெயர் பெற்றவர். இனிய உரைச் செய்யுள் எனக் குறிப்பிடும் அளவுக்கு அவரது உரைநடை இனிமை வாய்ந்தது எனப் பலரும் பாராட்டியுள்ளனர். உரைநடையில் அடுக்குமொழியையும், செய்யுள்களுக்கே உரிய எதுகை, மோனை என்பவற்றையும் உரைநடைக்குள் கொண்டு வந்தவர் இவரே எனப்படுகின்றது.

பிறப்பு: சேதுப்பிள்ளை தமிழ்நாட்டில் உள்ள திருநெல்வேலிக்கு அருகில் தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்த இராசவல்லிபுரம் என்ற ஊரில் 1896 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 2 ஆம் நாள் பிறவிப்பெருமான்பிள்ளை — சொர்ணம்மாள் தம்பதியினருக்குப் பதினோராவது பிள்ளையாகப் பிறந்து வளர்ந்தார்.

கார்காத்த வேளாளர் குலத்தில் சேது பிறந்தார். சேதுக்கடலாடி இராமேசுவரத்திலுள்ள இறைவனைப் பூசித்ததனால் பிறந்த தம் மகனுக்கு சேது என்று பெயர் சூட்டினர். இரா. பி. சேதுப்பிள்ளையின் முன்னெழுத்துகளாக அமைந்த 'இரா' என்பது இராசவல்லிபுரத்தையும் 'பி' என்பது 'பிறவிப்பெருமான்பிள்ளை' அவர்களையும் குறிப்பன. கல்வி: ஐந்தாண்டு நிரம்பிய சேது உள்ளூர்த் திண்ணைப் பள்ளியில் சேர்ந்து, தமிழ் நீதி நூல்களைக் கற்றார். இராசவல்லிபுரம் செப்பறைத் திருமடத் தலைவர் அருணாசல தேசிகரிடம் இவர் மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம், தேவாரம், திருவாசகம் போன்ற நூல்களைக் கற்றார். பின்னர் தனது தொடக்கக் கல்வியைப் பாளையங் கோட்டையில் தூய சேவியர் உயர்நிலைப் பள்ளியிலும், இடைநிலை வகுப்பின் (இண்டர் மீடியட்) இரண்டாண்டுகளை திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும், இளங்கலை வகுப்பின் இரண்டாண்டுகளைச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்று தேர்ச்சி பெற்றார். உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக விளங்கிய சுப்பிரமணியம், இந்துக் கல்லூரித் தமிழாசிரியர் சிவராமன் ஆகியோர் சேதுவிற்கு தமிழார்வத்தை வளர்த்தவர்கள்.




தாம் படித்த பச்சையப்பன் கல்லூரியிலேயே ஆசிரியராகவும் பணியாற்றினார். பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து கொண்டே சட்டக் கல்லூரியில் மாணவராகச் சேர்ந்து படித்தார். சட்டப்படிப்பை முடித்து நெல்லை திரும்பிய சேது, நெல்லையப்ப பிள்ளையின் மகள் ஆழ்வார்ஜானகியை மணந்தார்.

பணிகள்: சேதுப்பிள்ளை 1923 ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டு பணியாற்றத் தொடங்கினார். நெல்லையில் வழக்குரைஞர் தொழிலை மேற்கொண்ட சேதுப்பிள்ளை ,நகர்மன்ற உறுப்பினராகவும், நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பணியின் போது இவர் நெல்லை நகரில் தெருக்களின் பெயர்கள் தவறாக வழங்கி வந்ததை மாற்றி அத்தெருக்களின் உண்மையான பெயர்கள் நிலை பெறுமாறு செய்தார்.


வழக்குரைஞராக இருப்பினும் தமிழ் மொழியின் மீது மிகுந்த பற்றுக் கொண்டிருந்தார். இவரின் செந்தமிழ்த் திறம் அறிந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இவரைத் தமிழ் அறிஞராக ஏற்றுக் கொண்டு தமிழ்த் துறையில் தமிழ்ப் பேரறிஞர் பதவியை அளித்தது. சேதுப்பிள்ளை தமிழ்த் துறையில் விரிவுரையாளராகச் சேர்ந்து விபுலானந்தர் சோமசுந்தர பாரதியார் ஆகிய இருபெரும் புலவர்களின் தலைமையில் தொடர்ந்து ஆறாண்டுகள் பணிபுரிந்தார். தம்

# பெருமை

ராஜலட்சுமி சிவலிங்கம்

மிடுக்கான செந்தமிழ்ப் பேச்சால் மாணவர்களைப் பெரிதும் கவர்ந்தார். மொழி நூலை இளங்கலை வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலத்திலேயே கற்பித்துத் தமிழுக்கு இணையான தம் ஆங்கிலப் புலமையையும் வெளிப்படுத்தினார்.

1936—இல் சென்னைப் பல்கலைக் கழகம் சேதுப்பிள்ளையைத் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தியத்தியதுது. 25 ஆண்டுக் காலம் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய சேதுப்பிள்ளை தம் எழுத்தாலும் பேச்சாலும் தமிழுக்குப் பெருமையும் தமிழ் உரைநடைக்குச் சிறப்பையும் சேர்த்தார். அந்நாளில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சித் துறைத் தலைவராகப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை பணியாற்றி வந்தார். வையாபுரிப்பிள்ளை தொகுத்து வந்த தமிழ்ப் பேரகராதிப்பணி இனிது நிறைவேற சேதுப்பிள்ளை துணை நின்றார். வையாபுரிப்பிள்ளையின் ஓய்வுக்குப்பின் இவர் தலைமைப் பதவியை ஏற்றார். அப்போது பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் மாணவர்களுக்குச் சிறப்பு வகுப்புகள் நடத்தினார். ஆராய்ச்சி மாணவர்களுக்கு வழிகாட்டியாகத் துணைநின்று உதவினார். இவரின் முயற்சியினால், திராவிடப் பொதுச்சொற்கள், திராவிடப் பொதுப்பழமொழிகள் ஆகிய இரு நூல்களைச் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டது.



சொற்பொழிவுகள்: பல்கலைக்கழகப் பணிகளை சிறப்பகச் செய்த சேதுப்பிள்ளை, தமதுசெந்தமிழ்ப் பேச்சால் சென்னை மக்களை ஈர்த்தார். இவரின் மேடைப் பேச்சு ஒவ்வொன்றும் மேன்மை மிகு உரைநடைப் படைப்பாக அமைந்தது. அவரின் அடுக்குமொழித் தமிழுக்கு உலகமெங்கும் அன்பான வரவேற்பும், ஆர்வம் மிகுந்த பாராட்டும் கிடைத்தன. சென்னை ஒய்.எம்.சி.ஏ. அரங்கத்தில் அவரது கம்பராமாயணச் சொற்பொழிவு மூன்றாண்டுகள் நடைபெற்றது. அச்சொற்பொழிவின் தாக்கத்தால் சென்னை மாநகரில் கம்பர் கழகம் நிறுவப்பட்டது.




சென்னையிலுள்ள கோகலே மன்றத்தில் சிலப்பதிகார வகுப்பைத் தொடர்ந்து மூன்றாண்டுகள் நடத்தினார். தங்கச்சாலை தமிழ்மன்றத்தில் ஐந்தாண்டுகள் (வாரம் ஒருநாள்) திருக்குறள் விளக்கம் செய்தார். கந்தகோட்டத்து மண்டபத்தில் ஐந்தாண்டுகள் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தினார்.

படைப்புகள்: இரா.பி. சேதுப்பிள்ளையின் உரைநடை நூல்கள் இருபதுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் அடங்குவன. பதினான்கு கட்டுரை நூல்கள் மூன்று வாழ்க்கை வரலாற்று நூல்கள் எழுதியுள்ளார். நான்கு நூல்களை பதிப்பித்தார். சேதுப்பிள்ளையின் நூல்களுள் பலவும் அவர் தமிழக வானொலி நிலையங்களில் ஆற்றிய இலக்கியப்

பொழிவுகளின் தொகுப்புக்களாகும். இன்னும் சில நூல்கள் அவர் தமிழகத்தின் பல்வேறு இலக்கிய அமைப்புகளில் ஆற்றிய இலக்கியச் சொற்பொழிவுகளின் தொகுப்புக்களாக அமைந்தவை. எனவே அவரது உரைநடை மேடைப் பேச்சின் இயல்பினில் அமைந்ததாக உள்ளது. ஆதலின் அவரது எழுத்தும்பேச்சும் வேறுபாடின்றி அமைந்துள்ளன. இலக்கிய அமைப்புகளில் அவர் ஆற்றிய எழுச்சி மிகுந்த பொழிவுகளே இனிய உரைநடையாக வடிவம் பெற்றன.



இவர் எழுதிய முதல் கட்டுரை நூல் “திருவள்ளுவர் நூல் நயம்“ என்பதாகும். படைத்த உரைநடை நூல்களுள் தலை சிறந்ததாகவும் வாழ்க்கைப் பெருநூலாகவும் விளங்குவது, “தமிழகம் ஊரும் பேரும்“ என்பதாகும். இந்நூல் அவரின் முதிர்ந்த ஆராய்ச்சிப் பெருநூலாகவும், ஒப்பற்ற ஆராய்ச்சிக் கருவூலமாகவும் திகழ்கிறது. மேலும்,

சிலப்பதிகார நூல்நயம்
தமிழின்பம்
தமிழ்நாட்டு நவமணிகள்
தமிழ்வீரம்
தமிழ்விருந்து
வேலும்வில்லும்
வேலின்வெற்றி
வழிவழி வள்ளுவர்
ஆற்றங்கரையினிலே
தமிழ்க்கவிதைக் களஞ்சியம்
செஞ்சொற் கவிக்கோவை
பாரதியார் இன்கவித்திரட்டு போன்ற நூல்கள் இவரின் படைப்புகளாகும்.

சிறப்புகள்: சேதுப்பிள்ளையின் ‘தமிழின்பம்’ என்னும் நூலுக்கு இந்திய அரசு அளிக்கும் சாகித்ய அக்காதமியின் பரிசு வழங்கப்பட்டது. இலக்கிய அமைப்புகளும் அறிஞர் பெருமக்களும் சேதுப்பிள்ளையின் தமிழுக்குத் தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்த வண்ணம் இருந்தனர். கவியோகி எனப் போற்றப்படும் சுத்தானந்த பாரதியார் இரா.பி. சேதுப்பிள்ளையைச் “செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை” என்று அழைத்துப் பாராட்டினார். மேலும் உரைநடையில் தமிழின்பம் நுகரவேண்டுமானால் சேதுப்பிள்ளை செந்தமிழைப் படிக்க வேண்டும் என்பார்.




அடுக்குமொழி, எதுகை, மோனை, இலக்கியத் தொடர் மூன்றையும் உரைநடைக்குள் கொண்டு வந்த சேதுப்பிள்ளையின் பேச்சாற்றலைப் பாராட்டித் தருமபுர ஆதீனம் 1950ம் ஆண்டு ‘சொல்லின் செல்வர்’ என்னும் விருது வழங்கியது. சேதுப்பிள்ளையின் நடை ஆங்கில அறிஞர் ஹட்சனின் நடையைப் போன்றது என்று சோமலே பாராட்டுவார். இவர் தமிழுக்கு ஆற்றிய பணிகளுக்காகச் சென்னைப் பல்கலைக் கழகம் ‘முனைவர்’ பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. மேலும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் கால் நூற்றாண்டு காலம் பணியாற்றியதைப் பாராட்டி “வெள்ளிவிழா” எடுத்தும், “இலக்கியப் பேரறிஞர்” என்ற பட்டம் அளித்தும் சிறப்பித்தது.

உரைநடை நயங்கள்: இரா.பி. சேதுப்பிள்ளையின் உரை நடைகளில் அடுக்குத் தொடர், எதுகை, மோனை, இயைபு, முரண் ஆகியன அமைந்திருக்கும். எடுத்துக்காட்டு — அருமையான தமிழ்ச் சொல் ஒன்று இருக்க ஆங்கிலத்தை எடுத்தாளுதல் அறிவீனம் அல்லவா? கரும்பிருக்க இரும்பைக் கடிப்பார் உண்டோ?

“தமிழறிஞர்களுள் மிகச் சிறந்த நாவீறு படைத்தவராக விளங்கியவர் ‘சொல்லின் செல்வர்’ என்று போற்றப்பட்ட பேராசிரியர் இரா.பி. சேதுப்பிள்ளை. அவரது சொன்மாரி செந்தமிழ்ச் சொற்கள் நடம்புரிய, எதுகையும் மோனையும் பண்ணிசைக்க, சுவைதரும் கவிதை மேற்கோளாக, எடுப்பான நடையில் நின்று நிதானித்துப் பொழியும்”அன்பழகன் குறிப்பிடுகின்றார்.

“வாழ்வும் தாழ்வும் நாடு நகரங்களுக்கும் உண்டு சீரும் சிறப்பும் உற்று விளங்கிய சில நகரங்கள் இக்காலத்தில் புகைபடிந்த ஓவியம்போல் பொலிவிழந்திருக்கின்றன.”

“அறம் மணக்கும் திருநகரே! சில காலத்திற்கு முன்னே பாண்டி நாட்டில் பருவமழை பெய்யாது ஒழிந்தது; பஞ்சம் வந்தது; பசிநோயும் மிகுந்தது; நாளுக்குநாள் உணவுப் பொருள்களின் விலை உயர்ந்தது; நெல்லுடையார் நெஞ்சில் கல்லுடையார் ஆயினர். அப்போது அன்னக் கொடி கட்டினார் சீதக்காதி. ‘கார்தட்டினால் என்ன? கருப்பு முற்றினால் என்ன? என் களஞ்சிய நெல்லை அல்லா தந்த நெல்லை — எல்லார்க்கும் தருவேன்’ என்று மார்தட்டினார் — இதுவன்றோ அறம்?”

“தென்னாட்டிலே தென்றல் என்றொரு பொருள் உண்டு; தனியே அதற்கொரு சுகம் உண்டு. வசந்த காலத்தில் தெற்கேயிருந்து அசைந்து வரும் தென்றலின் சுகத்தை நன்றாக அறிந்தவர் தமிழர்; வடக்கேயிருந்துவரும் குளிர்காற்றை “ வாடை” என்றார்கள் ; தெற்கேயிருந்து வரும் இளங்காற்றைத் “ தென்றல்” என்றார்கள் . வாடையென்ற சொல்லிலே வன்மையுண்டு; தென்றல் என்ற சொல்லிலே மென்மையுண்டு . தமிழகத்தார் வாடையை வெறுப்பர்; தென்றலின் மகிழ்ந்து திளைப்பர்.”

நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

- ஆற்றங்கரையினிலே (நூல்)
- கடற்கரையினிலே (நூல்)
- கிருஸ்தவத் தமிழ்த் தொண்டர் (நூல்)
- தமிழ் விருந்து (நூல்)
- தமிழக ஊரும் பேரும் (நூல்)
- தமிழர் வீரம் (நூல்)
- தமிழின்பம் (நூல்)
- மேடைப் பேச்சு (நூல்)
- வேலின் வெற்றி (நூல்)

தமிழலக்கியத்தின் மறுமலர்ச்சிக்குப் பாட்டால் வழிகண்டார் பாரதியார். பதிப்பால் வழிகண்டார் உ.வே.சா; பத்திரிகையால் வழிகண்டார் திரு.வி.க. எழுத்தாலும் பேச்சாலும் வழிகண்டவர் சேதுப் பிள்ளை என்று கூறலாம். “சேதுப்பிள்ளையின் நடை



ஆங்கில அறிஞர் ஹட்சனின் நடையைப் போன்றது” என்று சோமலெ கூறுவது மிகையன்று. பிள்ளையின் தமிழ்ப்பணியைப் பாராட்டி, 1950ல் தருமபுரம் ஆதீனகர்த்தர் ‘சொல்லின் செல்வர்’ என்ற பட்டம் வழங்கி சிறப்பித்தார். சென்னைப் பல்கலையில் இருபத்தைந்து ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றபோது எடுத்த விழாவில் சேதுப்பிள்ளைக்கு டி.லிட். பட்டம் வழங்கப்பட்டது.




அண்ணாமலை, சென்னை எனத் தாம் பணியாற்றிய இரண்டு பல்கலைக்கழகங்களிலும் ரூ 25000/— தொகையை அளித்து தமிழ் ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் நிகழக் காரணமாக அமைந்த முன்னோடி சேதுப்பிள்ளை அவர்கள்தாம். சென்னைப் பல்கலையின் முதல் தமிழ்ப் பேராசிரியரும் அவர்தான். மேலும் பல்வேறு தமிழ் ஆராய்ச்சிப் பணிகளைச் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டிருந்த வேளையில், திடீரென எதிர்பாராது ஏப்ரல் 25, 1961 அன்று 65ம் வயதில் காலமானார் சேதுப்பிள்ளை. பிள்ளையவர்களின் மறைவுக்குப் பிறகு தமிழக அரசு அவரது நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமை ஆக்கியது.

மறைவு: தமிழ் வளர்ச்சிக்காகத் தமது இறுதிக்காலம் வரை பாடுபட்ட சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை 1961 ஏப்ரல் 25ல் 65 —ஆம் வயதில் மறைந்தார்.



# சிவகாமியின்

## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

## கத்தி பாய்ந்தது! 55


மாமல்லர் முதலியோர் சென்ற பக்கத்தைச் சிவகாமி ஒரு கணம் வெறித்து நோக்கினாள். மறுகணம் படீரென்று பூமியில் குப்புற விழுந்தாள். அவளுடைய தேகத்தை யாரோ கட்புலனாகாத ஒரு மாய அரக்கன் முறுக்கிப் பிழிவது போலிருந்தது. உடம்பிலுள்ள எலும்புகள் எல்லாம் நறநறவென்று ஒடிவது போலத் தோன்றியது. அவளுடைய நெஞ்சின் மேல் ஒரு பெரிய மலையை வைத்து அமுக்குவது போலிருந்தது. அவளுடைய குரல்வளையை ஒரு விஷநாகம் சுற்றி இறுக்குவது போலத் தோன்றியது. ஒரு கணம் சுற்றிலும் ஒரே இருள் மயமாக இருந்தது. மறுகணம் தலைக்குள்ளே ஆயிரமாயிரம் மின்னல்கள் பாய்ந்தன. வீடும் விளக்கும் அவளைச் சுற்றிக் கரகரவென்று சுழன்றன. கீழே கீழே கீழே இன்னும் கீழே அதலபாதாளத்தை நோக்கிச் சிவகாமி விழுந்து கொண்டிருந்தாள். ஆகா! இப்படி விழுவதற்கு முடிவே கிடையாதா? என்றென்றைக்கும் கீழே கீழே போய்க் கொண்டிருக்க வேண்டியதுதானா?

"சிவகாமி! சிவகாமி!" என்று எங்கேயோயிருந்து யாரோ அழைத்தார்கள். அது மாமல்லரின் குரல் அல்ல, நிச்சயம். முகத்தின் அருகே நாகப்பாம்பு சீறுவது போல் சத்தம் கேட்டது. உஷ்ணமான மூச்சு முகத்தின் மீது விழுந்தது. சிவகாமி கண்களைத் திறந்தாள்.

ஐயோ! படமெடுத்தாடும் சர்ப்பத்தின் முகம்! தீப்பிழம்பாக ஜொலித்த பாம்பின் கண்கள்! இல்லை; இல்லை! நாகநந்தி பிக்ஷுவின் முகம். அவர் மூச்சுவிடும் விஷக் காற்றுத்தான் தன்னுடைய முகத்தின் மேல் படுகிறது.

சிவகாமி ஒரு பெரும் பிரயத்தனம் செய்து பளிச்சென்று எழுந்து உட்கார்ந்தாள். பிக்ஷுவை விட்டு விலகிச் சற்றுத் தூரத்துக்கு நகர்ந்து சென்றாள். அவள் தேகமெல்லாம் படபடத்து நடுங்கியது.

நாகநந்தி அவளைக் கருணையுடன் பார்த்து, "பெண்ணே! உனக்கு என்ன நேர்ந்தது? என்ன ஆபத்து விளைந்தது! ஏன் அவ்வாறு தரையிலே உணர்வற்றுக் கிடந்தாய்? பாவம்! தன்னந் தனியாக இந்தப் பெரிய வீட்டில் வசிப்பது சிரமமான காரியம்தான். உன்னுடைய தாதிப் பெண்ணைக் காணோமே? எங்கே போய் விட்டாள்!..." என்று கேட்டவண்ணம் சுற்று முற்றும் பார்த்தார்.




அப்போது அவர் பார்த்த திக்கில் மாமல்லர் போகும் அவசரத்திலே விட்டுவிட்டுப்போன தலைப்பாகையும் அங்கவஸ்திரமும் கிடப்பதைச் சிவகாமி பார்த்துப் பெருந்திகிலடைந்தாள். நாகநந்தி அவற்றைக் கவனியாமல் திரும்பிச் சிவகாமியின் அருகில் வந்து, "பெண்ணே! நான் சொல்வதைக் கேள். உன்னுடைய நன்மைக்காகவே சொல்லுகிறேன்!" என்று சொல்லிய வண்ணம் சிவகாமியின் ஒரு






கரத்தைத் தன் இரும்பையொத்த கரத்தினால் பற்றினார்.

அப்போது சிவகாமியின் உடம்பு மறுபடியும் நடுங்கிற்று. கொடிய கண்களையுடைய நாக சர்ப்பம் படமெடுத்துத் தன்னைக் கடிக்க வருவது போன்ற பிரமை ஒரு கணம் ஏற்பட்டது. சட்டென்று சமாளித்துக் கையை வெடுக்கென்று எடுத்துக் கொண்டாள்.

"ஆ! சிவகாமி! ஏன் இப்படி என்னைக் கண்டு நடுங்குகிறாய்? உனக்கு நான் என்ன தீங்கு செய்தேன்! உன்னிடம் உண்மையான அபிமானம் கொண்டதல்லாமல் உனக்கு நான் ஒரு தீங்கும் செய்யவில்லையே! உன் தந்தையின் உயிரைக் காப்பாற்றியதன்றி வேறொரு அபசாரமும் உனக்குச் செய்யவில்லையே? ஏன் என்னை வெறுக்கிறாய்?" என்று பிக்ஷு கனிவு ததும்பும் குரலில் கேட்டார்.


"சுவாமி! தங்களைக் கண்டு நான் பயப்படவும் இல்லை. தங்களிடம் எனக்கு வெறுப்பும் இல்லை. தாங்கள் எனக்கு என்ன தீங்கு செய்தீர்கள், தங்களை நான் வெறுப்பதற்கு? எவ்வளவோ நன்மைதான் செய்திருக்கிறீர்கள்!" என்றாள் சிவகாமி.

"சந்தோஷம், சிவகாமி! இந்த மட்டும் நீ சொன்னதே போதும். உன் தேகம் அடிக்கடி நடுங்குகிறதே, அது ஏன்? உடம்பு ஏதேனும் அசௌக்கியமா?" என்று வினவினார்.

"ஆம், அடிகளே! உடம்பு சுகமில்லை!" என்றாள் சிவகாமி.

"அடடா! அப்படியா? நாளைக் காலையில் நல்ல வைத்தியனை அனுப்புகிறேன், ஆனால், இப்படி உடம்பு







அசௌக்கியமாயிருக்கும் போது உன்னை விட்டு விட்டு உன் தாதிப்பெண் எங்கே போனாள்? எங்கேயாவது மூலையில் படுத்துத் தூங்குகிறாளா, என்ன?" என்று அங்குமிங்கும் சுற்றிப் பார்த்தார் பிக்ஷு.

சற்றுத் தூரத்தில் தூணுக்குப் பின்னால் கிடந்த தலைப்பாகையும் அங்கவஸ்திரமும் இப்போது அவருடைய கண்களைக் கவர்ந்தன. "ஆ! இது என்ன இங்கே யாரோ வந்திருக்கிறார்கள் போலிருக்கிறதே?" என்று அருகில் சென்று உற்றுப் பார்த்தார்.




திரும்பிச் சிவகாமியை நோக்கி, "சபாஷ்! சிவகாமி! அதற்குள்ளே இங்கே உனக்குக் காதலர்கள் ஏற்பட்டு விட்டார்களா? உள்ளூர் மனிதர்கள்தானா! அல்லது வெளியூர்க்காரர்களா?" என்று பரிகாசச் சிரிப்புடன் கேட்டார்.

சிவகாமி மௌனமாய் நின்றதைப் பார்த்துவிட்டு, "நல்லது; நீ மறுமொழி சொல்ல மாட்டாய், நானே போய்க் கண்டு பிடிக்கிறேன்!" என்று சொல்லிவிட்டு வாசலை நோக்கிச் சென்றார்.

அப்போது சிவகாமிக்கு, "இவள் புத்த பிக்ஷுவிடம் நம்மைக் காட்டிக் கொடுக்கப் பார்க்கிறாள்!" என்று மாமல்லர் சொன்னது நினைவு வந்தது. பளிச்சென்று பிக்ஷு அவர்களைக் கண்டுபிடிப்பதால் நடக்கக் கூடிய விபரீதங்கள் எல்லாம் நினைவுக்கு வந்தன. சிவகாமி துடிதுடித்து அங்குமிங்கும் பார்த்தாள். இளவரசரின் அங்கவஸ்திரத்துக்கு அடியில் ஏதோ பளபளவென்று ஒரு பொருள் தெரிந்தது. சிவகாமியின் கண்களில் விசித்திரமான ஒளி தோன்றியது. பாய்ந்து சென்று அந்தப் பொருளை எடுத்தாள். அவள் எதிர் பார்த்தது போல் அது ஒரு கத்திதான்.

சிவகாமி அடுத்த கணம் அந்தக் கத்தியைப் புத்த பிக்ஷுவின் முதுகை நோக்கி எறிந்தாள். பிக்ஷு 'வீல்' என்று சத்தமிட்டுக் கொண்டு விழுந்தார். முதுகில் கத்தி பாய்ந்த இடத்திலிருந்து இரத்தம் கசிந்தது.

சிவகாமியைப் பிக்ஷு திரும்பிப் பார்த்து, இரக்கம் ததும்பிய குரலில், "பெண்ணே! என்ன காரியம் செய்தாய்? உன்னை உன் காதலன் மாமல்லனிடம் சேர்ப்பித்து விடலாமென்று எண்ணியல்லவா அவசரமாகக் கிளம்பினேன்?" என்றார்.

(சபதம் தொடரும்)

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™

சுற்றுச்சூழல்

# ரத்தத்தின்

### ஜப்பான் விஞ்ஞானிகள் உருவாக்கி வரும் செயற்கை ரத்தம்!


மனிதர்களிடமிருந்து தானமாகப் பெறும் ரத்த வகைகளைப் போல அல்லாமல், அனைத்து வகை ரத்தத்துக்கும் பொருந்தக்கூடிய, மிக அவசர காலத்தில் உயிர் காக்கும் சேவைக்காக ஜப்பான் விஞ்ஞானிகள் செயற்கை ரத்தத்தை உருவாக்கி வருகிறார்கள். எவ்வாறு உணவும், தண்ணீரும் உயிரைக் காப்பாற்றி வருகிறதோ, அதுபோலவே, கோடிக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றக் கூடிய ஒரு விஷயமாக ரத்தமும் உள்ளது. அதனால்தான் ரத்த தானம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால், அவற்றுக்கு மாறாக, எல்லா பிரிவு ரத்தத்துக்கும் பொருந்தக் கூடிய புதிய வகை செயற்கை ரத்தத்தை ஜப்பான் விஞ் ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

இது தற்போது ஆய்வுக்கூட சோதனையில் உள்ளது, இது பயன்பாட்டுக்கு வந்துவிட்டால் கோடிக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.ஆனால், இந்த செயற்கை ரத்தம், மனிதர்களிடமிருந்து பெறப்படும் ரத்த தானத்துக்கு முடிவு கட்டாது என்றும், அதன் ஒரு பகுதியாகவே இது தொடரும் என்றும் கூறப்படுகிறது. துல்லியமாகச் சொல்லப்போனால், காலாவதியான இயற்கை ரத்தத்தின் மறுசுழற்சி என்பதால், மனித ரத்தம் வீணாவதையே இது தடுக்கும், உயிரிழப்புகளைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரத்தம் என்பது அறுவைச் சிகிச்சைகள், விபத்து, பிரசவம், புற்றுநோய் உள்ளிட்ட சில சிகிச்சைகளின்போது நோயாளியின் உயிரைக் காப்பாற்ற மிகவும் அத்தியாவசியமானதாக மாறிவிடுகிறது.




உலகம் முழுவதும் ரத்த வங்கிகளில் எப்போதும் ரத்த இருப்பு குறைவாகவே இருக்கும். வேறு ரத்த வகையைப் பெற்றுக்கொண்டு, கேட்கும் ரத்த வகையைக் கொடுக்கும் நிலைதான் இப்போதுவரை இருக்கிறது.அதிலும் குறிப்பாக, தேவைப்படுகிற ரத்த வகையானது அரிய வகையாக இருந்துவிட்டால் உடனே கிடைக்காது. தானமளிப்பவர்கள் கிடைப்பதும் அரிதாக இருக்கும். ரத்தம் கிடைக்க தாமதமாவது பல நேரங்களில் உயிருக்கே ஆபத்தாகும் நிலையும் ஏற்பட்டிருக்கும். இதனை ரத்தம் பெற அலைந்து



# ரத்தமே!


மா.கல்யாணி

திரிந்தவர்கள் நிச்சயம் உணர்ந்திருப்பர். ஆய்வகத்தில் வளர்த்தெடுக்கப்படும் ரத்தம், உலகின் முதலாவது மருத்துவ பரிசோதனையில் மக்களுக்கு கொடுக்கப்பட்டதாக பிரிட்டன் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.ஒரு சில ஸ்பூன்கள் கொண்ட மிகவும் சிறிய அளவு ரத்தம் மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்டு, அது எவ்வாறு மனித உடலில் செயல்படுகிறது என்று பரிசோதிக்கப்பட்டது.

மொத்தமாக ரத்தப் பரிமாற்றங்கள் எப்போதுமே மக்களை சார்ந்தே இருக்கின்றன. அவர்கள் தொடர்ந்து ரத்த தானம் வழங்கி வருகின்றனர். ஆனால், மிகவும் அரிதான ரத்த வகைகளை தானமாக பெறுவது கடினமாக இருப்பதால் ரத்தம் தயாரிப்பதற்கான இறுதியான இலக்கு என்பது, முக்கியமானது.சிக்கில் செல் அனீமியா **(sickle cell anaemia)**எனப்படும் உடல்நலக்கோளாறுக்கு தொடர்ந்து ரத்தம் தேவையை சார்ந்திருக்கும் மக்களுக்கு இதுபோன்ற முறை தேவைப்படுகிறது.


ரத்தம் துல்லியமாக பொருத்தமாக இல்லாதபட்சத்தில் உடலானது அதனை புறக்கணிக்கும். சிகிச்சையானது தோல்வியடையும். இந்த




மட்டத்திலான திசு பொருத்தம் என்பது, மிகவும் நன்றாக அறிந்த ஏ, பி, ஏபி மற்றும் ஓ ரத்த வகைகளுக்கு அப்பாலும் செல்ல வேண்டும்.

பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஆஷ்லே டாய், சில ரத்த வகைகள் மிக,மிக அரிதாக இருக்கின்றன. நாட்டில் 10 நபர்கள் மட்டுமே இதனை தானமாக தரக்கூடிய நிலையில் இருக்கமுடியும் என்று சொல்கிறார். இந்த தருணத்தில், இந்தியாவில் முதலில் கண்டறியப்பட்ட பாம்பே ரத்த வகையானது ஒட்டு மொத்த பிரிட்டனிலும் 3 யூனிட்




மட்டுமே இருப்பு இருக்கிறது. இது பிரிஸ்டல், கேம்பிரிட்ஜ், லண்டன் ஆகிய குழுக்கள் மற்றும் என்ஹெச்எஸ் ரத்தம் மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை ஆகியவை இணைந்த ஆய்வு திட்டமாகும்.நுரையீரலில் இருந்து ஆக்சிஜனை உடலின் பிற பகுதிகளுக்கு எடுத்துச் செல்லும் இரத்த சிவப்பணுக்களில் இந்த ஆய்வு கவனம் செலுத்துகிறது.

இது எவ்வாறு பணியாற்றுகிறது?

ஒரு பைண்ட் ரத்தம்(சராசரியாக 470 மிலி) என்ற அளவில் வழக்கமான தானத்தில் அவர்கள் தொடங்குகின்றனர். ஒரு ரத்த சிவப்பணுவாக மாறக்கூடிய திறன் கொண்ட நெகிழ்வான ஸ்டெம் செல்களை பிரித்தெடுக்க காந்த மணிகள் உபயோகிக்க ப்படுகின்றன. இந்த ஸ்டெம் செல்கள் ஆய்வகங்களில் பெரும் எண்ணிக்கையில் வளர்த்தெடுக்கப் படுவதற்கு ஊக்குவிக்கப்படுகிறது. அதன் பின்னர் அவை, ரத்த சிவப்பணுக்களாக மாற வழிகாட்டப்படுகின்றன.




இந்த செயல்முறைக்கு மூன்று வார காலம் ஆகும். 5 லட்சம் ஸ்டெம் செல்கள் எனும் தொடக்க தொகுப்பு, 50 பில்லியன் சிவப்பணுக்களாக கிடைக்கும். இது 15 பில்லியன் ரத்த சிவப்பணுக்களாக வடிகட்டி குறைக்கப்படும். இந்த முறைதான் இடமாற்றத்துக்கான சரியான வளர்ச்சி நிலையாகும். “எதிர்காலத்தில் எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு ரத்தத்தை நாங்கள் உருவாக்க விரும்புகின்றோம். என் தலைமையிலான நோக்கம், அறைமுழுவதும் இருக்கும் இயந்திரங்கள் தொடர்ந்து ரத்தம் தயாரித்துக் கொண்டே இருக்க வேண்டும்,” என பேராசிரியர் ஆஷ்லே டாய் என்னிடம் தெரிவித்தார்.

முதலில் இரண்டு பேர் இந்த பரிசோதனையில் பங்கெடுக்கின்றனர். 10 ஆரோக்கியமான தன்னார்வலர்களிடமாவது ரத்தம் செலுத்தி பரிசோதிக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். அவர்கள் நான்கு மாத இடைவெளியில் 5—10 மில்லி ரத்தம் இரண்டு முறை தானமாக பெறுவார்கள்.

ஒருமுறையில் வழக்கமான ரத்தமும், இன்னொரு முறையில் ஆய்வகத்தில் வளர்த்தெடுக்கப்பட்ட ரத்தமும் அளிக்கப்படும். பெரும்பாலும் மருத்துவ நடைமுறைகளில் பயன்படுத்தப்படுவது போல இந்த ரத்தம் கதிரியக்கப் பொருள்களால் குறியிடப்பட்டிருக்கும். அப்போதுதான் விஞ்ஞானிகள் உடலில் எவ்வளவு காலத்துக்கு ரத்தம் நீடித்திருக்கிறது என்பதை கவனிக்க முடியும்.

வழக்கமான ரத்தத்தை விடவும், ஆய்வகத்தில் வளர்த்தெடுக்கப்பட்ட ரத்தம் மிகவும் ஆற்றல்வாய்ந்ததாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. ரத்த சிவப்பணுக்கள் பொதுவாக, அவை மாற்றப்படும் தேவைக்கு முன்பு 120 நாட்கள் நீடித்திருக்கும். வழக்கமாக தானமாக பெறப்பட்ட ரத்தம் இளம் மற்றும் பழைய ரத்த சிவப்பணுக்களைக்கொண்ட கலவையாகஇருக்கும். ஆனால், ஆய்வகத்தில் வளர்த்தெடுக்கப்படும் ரத்த




# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

VARSHA™

சிவப்பணுக்களானது முழுவதும் புத்தம் புதிதாக இருக்கும். எனவே அவை 120 நாட்கள் முழுவதும் நீடித்திருக்கும். இது எதிர்காலத்தில் அடிக்கடி சிறிய மற்றும் குறைவான அளவில் தானம் பெறுவதை அனுமதிக்கும் என ஆய்வாளர்கள் சந்தேகிக்கின்றனர். எனினும், கணிசமான நிதி மற்றும் தொழில்நுட்ப சவால்கள் இருக்கின்றன.



என்ஹெச்எஸ் நிறுவனத்தின் சராசரியான ரத்த தான செலவு 130 பவுண்ட் ஆகும். வளர்த்தெடுக்கப்படும் ரத்தம் அதிக செலவு பிடித்ததாக இருக்கும். எனினும் எவ்வளவு ஆகும் என்பதை ஆய்வு குழு தெரிவிக்கவில்லை. சேகரிக்கப்பட்ட ஸ்டெம் செல்கள் அவைகளாகவே காலாவதியாகி விடும் என்பது இன்னொரு சவாலாகும். இது வளர்த்தெடுக்கப்படும் ரத்தத்தின் அளவை கட்டுப்படுத்துகிறது. அது மருத்துவ ரீதியாக தேவைப்படும் அளவுகளில் உற்பத்தி செய்வதற்கு மேலும் ஆராய்ச்சி மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

என்ஹெச்எஸ் ரத்தம் மற்றும் ரத்த மாற்றுத்துறை மருத்துவ இயக்குனர், டாக்டர் ஃபரூக் ஷா கூறுகையில், சிக்கில் செல் போன்ற குறைபாடுகள் கொண்ட மக்களுக்கு பாதுகாப்பாக செலுத்த கூடிய ரத்த சிவப்பணுக்களை உற்பத்தி செய்வதற்கான அடித்தளத்தை இந்த உலகின் முன்னணி ஆராய்ச்சி கொண்டிருக்கிறது," என்றார்.






இந்த நிலையில்தான், ஜப்பானின் நாரா மருத்துவ பல்கலைக்கழகத்தின் ஆய்வகத்தில், பேராசிரியர் ஹிரோமி சகாய் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு செயற்கை ரத்தத்தை உருவாக்கிப் பரிசோதித்து வருகிறது. இது நீல நிறத்தில் இருக்கும் என்றும், இது தயாரிக்கப்பட்டுவிட்டால் கிட்டத்தட்ட 2 ஆண்டுகள் வரைகூட பாதுகாத்து வைக்க முடியும் என்பதே இதன் சிறப்பாக உள்ளது.

உலகின் எந்த மூலையில் இருந்தும் எந்த மூலைக்கும் இதனைக் கொண்டு செல்லலாம். இது அனைத்து ரத்த வகைகளுக்கும் பொருந்தும். தானமாக பெறப்படும் ரத்தத்தின் ஆயுள்காலம் என்பது 42 நாள்கள்தான். ஆனால் செயற்கை ரத்தத்தின் ஆயுள் 2 ஆண்டுகள். அதுவும் அறை வெப்பநிலையிலேயே இதனை 2 ஆண்டுகள் பாதுகாக்கலாம் என்றும், குளிர்சாதனப் பெட்டியில் உரிய குளிர்நிலையில் வைத்து 5 ஆண்டுகள் வரை பயன்படுத்தலாம் என்றும் கூறப்படுகிறது.

ஒருவகையில், இதுவும் ஒரு தானமாகப் பெறப்பட்ட ரத்தம்தான். அதாவது, காலாவதியான ரத்தத்திலிருந்து ஹீமோகுளோபினை சேகரித்து அதன் மூலம் இந்த செயற்கை ரத்தம் உருவாக்கப்படுகிறது. ஹீமோகுளோபின் ஆக்சிஜனை எடுத்துச் செல்லும் ரத்த சிவப்பணுக்களின் ஒரு பகுதி. எனவே, இயற்கை ரத்தத்தின் மறுசுழற்சி செய்யப்பட்டதுதான் இந்த செயற்கை ரத்தம்.

செயற்கை ரத்த ஆராய்ச்சிக் குழு, நன்கு ஆரோக்கியமாக இருக்கும் 16 தன்னார்வலர்கள் உடலில் 100 மி.லி. முதல் 400 மி.லி. செயற்கை ரத்தம் செலுத்தி அது எவ்வாறு செயல்படுகிறது, உள்ளுறுப்புகளை இயக்குகிறது என்று சோதனைகளை நடத்தி வருகிறது.

ஒருவேளை, இந்த சோதனை வெற்றியடைந்தால், வரும் 2030—ஆம் ஆண்டிலிருந்து ஜப்பான் மருத்துவமனைகளில் செயற்கை ரத்தத்தின் பயன்பாடு உறுதி செய்யப்படும். உலகளவில் செயற்கை ரத்தத்தை உருவாக்கிய நாடு என்ற பெருமையை ஜப்பான் அடையும். உலகம் முழுவதும் இந்த தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் நிலையில், மருந்துக் கடைகளில் கூட இது விற்பனை செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™



# மருத்துவத்

## நீரிழிவு என்றால் என்ன?

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நோய்களில் ஒன்று நீரிழிவு எனும் சர்க்கரை நோய். ஒவ்வொரு 10 விநாடிக்கும் சர்க்கரை நோய் தொடர்பாக ஒருவர் உயிரிழக்கிறார். புகைப்பதற்கு அடுத்தபடியாக மாரடைப்புக்கு முக்கியக் காரணமாக இருப்பது சர்க்கரை நோய்தான்.

சிறுநீரக நோய்களுக்கு முக்கிய காரணமாக சர்க்கரை நோய் உள்ளது. இப்படி மனித வாழ்வின் தரத்தை வெகுவாகக் குறைக்கக் கூடிய சர்க்கரை நோய் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் ஐ.நா. சபை அறிவித்ததுதான் உலக சர்க்கரை நோய் தினம் (நவ.14). சர்க்கரை என்பது நமது உடலுக்கு எரிபொருளாகப் பயன்படுவது. நாம் உண்ணும் அனைத்து உணவிலும் உள்ள சர்க்கரையை உடல் எரித்து உங்களுக்கு ஆற்றலாக வழங்குகிறது. இதுதான் இயற்கை. உடலுக்கு எரிபொருளாக இருக்கக்கூடிய சர்க்கரை எவ்வாறு நோயாக மாறுகிறது?

பசிக்காமல் சாப்பிடுவது; பசித்துச் சாப்பிடாமல் இருப்பது; அவசர அவசரமாக சாப்பிடுவது; வயிறு புடைக்க சாப்பிடுவது; சாப்பிட்ட பிறகு குளிப்பது; சாப்பிட்ட பிறகு வயிறு வீங்கும் அளவுக்கு தண்ணீர் பருகுவது; உணவை சுவைக்காமல் சாப்பிடுவது; உணவை பற்களால் நன்கு அரைக்காமல் சாப்பிடுவது; பால், தேநீர், குளிர்பானம் மற்றும் செயற்கை உணவுகளை சாப்பிடுவது; மலம் மற்றும் சிறுநீரை அடக்குவது; இரவு நேரங்களில் உறங்காமல் விழித்திருப்பது; வாயால் மூச்சு விடுவது; குடிப்பழக்கம்; உழைக்காமல் வாழ்வது; அதிக நேரம் குளிர்சாதன அறையில் நேரத்தைச் செலவிடுவது.




மேற்கண்ட விஷயங்களை நாம் செய்யும் போது நாம் உண்ணக்கூடிய உணவானது முழுமையாக ஜீரணம் ஆகாது. அந்த உணவில் இருந்து பெறக்கூடிய சர்க்கரை நம்முடைய உடலில் உள்ள உறுப்புகள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவுக்கு தரமான சர்க்கரையாக இருக்காது. நமது ஜீரண மண்டலத்திலிருந்து ஜீரணமான சர்க்கரை ரத்தத்தில் கலக்கிறது. இவ்வாறு ரத்தத்தில் கலக்கக்கூடிய சர்க்கரையை உடல் உறுப்புகள் ஏற்றுக் கொள்கின்றன.

சர்க்கரை தரமானதா, தரமற்றதா என்பதை உடல் உறுப்புகள் அறிந்து கொள்வதற்கு ஓர் அமைப்பு அவசியம் தேவை. அதற்குப் பெயர்தான் இன்சுலின்; அது உடலில் உள்ள எந்தெந்த சர்க்கரையை குறித்துக் காட்டுகிறதோ, அதை மட்டும் தான் உறுப்புகள் ஏற்றுக்கொள்ளும். இதுதான் சர்க்கரையின் தரம் பிரித்தறிந்து உட்கொள்வதற்கு உடல் கையாளும் உத்தி.நாம் உண்ணும் உணவு முழுமையாக ஜீரணமாகாமல் ரத்தத்தில் கலந்தால், அதைக் குறைப்பதற்கு இன்சுலின் சுரக்காது. இன்சுலின் குறைக்கப்படாத சர்க்கரை உங்கள் ரத்த ஓட்டத்தில் சுற்றிக் கொண்டே இருக்கும். இதை சிறுநீரகங்கள் அதிகமாக நீர் வடிவில் வெளியேற்றம் செய்யும். இப்படி வெளியேறும் நீர் ஓரளவுக்கு அதிகமாக இருந்தால் அதுவே நீரிழிவு என்ற சர்க்கரை நோய். வாழ்க்கை முறையை மாற்றிக்கொண்டு தெளிவான சரியான ஜீரணத்தை உடலுக்கு வழங்கினால் சர்க்கரை நோய் அறவே வராது.

ரத்த ஓட்டத்தில் உள்ள அனைத்து சர்க்கரையையும் (குளுக்கோஸ்) உடலால் செயல்படுத்த முடியாதபோது இது ஏற்படுகிறது; அதன் சிக்கல்கள் மாரடைப்பு, பக்கவாதம், பார்வை இழப்பு, சிறுநீரக செயலிழப்பு மற்றும் காலைத் துண்டிக்கும் அளவுக்கான பிரச்சனைகள் ஆகியவற்றுக்கு கொண்டு செல்லும்.மேலும் இது ஒரு வளர்ந்து வரும் சர்வதேச பிரச்னை ஆகி வருகிறது — உலகளவில் 422 மில்லியன் மக்கள் நீரிழிவு நோயுடன் வாழ்கின்றனர் — உலக சுகாதார அமைப்பு **(WHO)** தரவின்படி, இது 40 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையை விட தற்போது நான்கு மடங்கு அதிகமாகியுள்ளது.

நீரிழிவு தாக்கம் பற்றிய ஆபத்துகள் இருந்தபோதிலும், இதனால் பாதிக்கப்படுவோரில் பாதி பேர் அதைப் பற்றி அறியாதவர்களாக உள்ளனர்.ஆனால் வாழ்க்கைமுறையில் சில





**மா.அருந்ததி**

மாற்றங்கள் செய்து கொண்டால் இந்த நோய் பாதிப்பை தவிர்க்கலாம். அது எப்படி என்பதை இங்கே தொகுத்தளிக்கிறோம்.

நீரிழிவுக்கு என்ன காரணம்?

நாம் சாப்பிடும்போது, நமது உடல் கார்போஹைட்ரேட்டுகளை சர்க்கரையாக (குளுக்கோஸ்) உடைக்கிறது. கணையத்தில் உற்பத்தி செய்யப்படும் இன்சுலின் என்ற ஹார்மோன், பின்னர் ஆற்றலுக்காக அந்த சர்க்கரைகளை உறிஞ்சுவதற்கு நமது உடல் செல்களை அறிவுறுத்துகிறது.







இன்சுலின் உற்பத்தி செய்யப்படாமல் அல்லது சரியாக வேலை செய்யாதபோது நீரிழிவு நோய் ஏற்படுகிறது, இதனால் நமது இரத்தத்தில் சர்க்கரை சேருகிறது.

நீரிழிவு நோயில் பல வகைகள் உள்ளன.

'டைப் 1' நீரிழிவு நோயில், கணையம் இன்சுலின் உற்பத்தி செய்வதை நிறுத்துகிறது, எனவே குளுக்கோஸ் இரத்த ஓட்டத்தில் குவிகிறது.இது ஏன் நிகழ்கிறது என்று விஞ்ஞானிகளுக்கு சரியாகத் தெரியவில்லை, ஆனால் இது மரபணு ரீதியிலான தாக்கத்தை கொண்டிருக்கலாம் அல்லது கணையத்தில் உள்ள இன்சுலின் உற்பத்தி செய்யும் செல்களை சேதப்படுத்தும் வைரஸ் தொற்றுகளின் விளைவாக இருக்கலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 10 சதவீதம் பேருக்கு டைப் 1 பாதிப்பு உள்ளது.

டைப் 2 நீரிழிவு நோயில், கணையம் போதுமான இன்சுலின் உற்பத்தி செய்யாது, அல்லது ஹார்மோன் திறம்பட செயல்படாது. இது பொதுவாக நடுத்தர வயது மற்றும் முதியவர்கள், அதிக எடை மற்றும் உட்கார்ந்த நிலையில் இருக்கும் இளைஞர்கள் மற்றும் சில குறிப்பிட்ட இனங்களைச் சேர்ந்த தனிநபர்கள், குறிப்பாக தெற்காசியர்கள், ஆகியோருக்கு நிகழ்கிறது.

சில கர்ப்பிணிப் பெண்களுக்கு கர்ப்பகால நீரிழிவு நோய் இருப்பது கண்டறியப்படலாம், ஏனெனில் அவர்களின் உடலால் அவர்களுக்கும் குழந்தைக்கும் போதுமான இன்சுலின் உற்பத்தி



செய்ய முடியாது. வெவ்வேறு அளவுகோல்களைப் பயன்படுத்தி பல்வேறு ஆய்வுகள் 6 முதல் 16 சதவிகித கர்ப்பிணிப் பெண்களுக்கு கர்ப்பகால நீரிழிவு நோய் உருவாகும் என்று மதிப்பிடுகின்றன. கர்ப்பிணிகள் தங்களுடைய சர்க்கரை அளவை உணவு, உடல் செயல்பாடு மற்றும்/அல்லது இன்சுலின் பயன்பாடுகள் மூலம் கட்டுப்படுத்த வேண்டும், இது டைப் 2 ஆக மேம்படுவதை தடுக்கிறது. ரத்தத்தில் குளுக்கோஸின் அதிகரித்த அளவு மற்றும் நீரிழிவு நோய்க்கு வழிவகுக்கும் நிலையை நீரிழிவுக்கு முந்தைய பரிசோதனை மூலம் மக்கள் கண்டறியலாம்

நீரிழிவு நோயின் அறிகுறிகள் என்ன?

மிகவும் பொதுவான அறிகுறிகள் பின்வருமாறு:• மிகவும் தாகமாக உணர்வது. • வழக்கத்தை விட அதிகமாக சிறுநீர் கழித்தல், குறிப்பாக இரவு நேரங்களில்.• மிகவும் சோர்வாக உணர்வது. • முயற்சி செய்யாமல் உடல் எடையை குறைதல்.• வாய்ப்புண் அடிக்கடி ஏற்படுதல்• மங்கலான பார்வை.• குணமடையாத வெட்டு காயங்கள் மற்றும் ரத்த காயங்கள்

பிரிட்டிஷ் தேசிய சுகாதார சேவையின் கூற்றுப்படி, டைப் 1 நீரிழிவு நோயின் அறிகுறிகள் குழந்தைப் பருவத்திலோ இளமைப் பருவத்திலோ தோன்றும்; மிகவும் கடுமையானதாக இருக்கும்.டைப் 2 ஆபத்தில் உள்ளவர்கள் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் (அல்லது தெற்காசிய மக்களுக்கு 25 வயதுக்கு மேல்); நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட பெற்றோர் அல்லது உடன்பிறந்தவர்கள்; அதிக எடை அல்லது பருமனானவர்கள்; மற்றும் தெற்காசிய, சீன, ஆப்ரோ—கரீபியன் அல்லது கருப்பின ஆப்பிரிக்க வம்சாவளியைச் சேர்ந்தவர்களுக்கு இந்த பாதிப்பு அதிகமாக உள்ளது.




நீரிழிவு நோயைத் தடுக்க முடியுமா?

நீரிழிவு மரபணு மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளைப் பொறுத்தது, ஆனால் ஆரோக்கியமான உணவு மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறை மூலம் உங்கள் ரத்தத்தில் சர்க்கரை அளவைக் கட்டுக்குள் வைத்திருக்க உதவலாம். பதப்படுத்தப்பட்ட சர்க்கரை உணவுகள் மற்றும் பானங்களைத் தவிர்ப்பது மற்றும் முழு உணவுக்காக வெள்ளை ரொட்டி மற்றும் பாஸ்தாவை மாற்றுவது ஒரு நல்ல முதல் படியாகும். சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரை மற்றும் சுத்திகரிக்கப்பட்ட தானியங்கள் ஊட்டச்சத்துக்கு உதவாது. ஏனெனில் அவற்றின் நார்ச்சத்து, வைட்டமின் நிறைந்த பாகங்கள் ஏற்கெனவே அகற்றப்பட்டிருக்கும்.உதாரணமாக வெள்ளை மாவு, வெள்ளை ரொட்டி, வெள்ளை அரிசி, வெள்ளை பாஸ்தா, பேஸ்ட்ரிகள், ஃபிஸி/ சர்க்கரை பானங்கள், இனிப்புகள் மற்றும் சர்க்கரை சேர்க்கப்பட்ட காலை உணவு தானியங்களை கூறலாம்.

ஆரோக்கியமான உணவு வகைகளில் காய்கறிகள், பழங்கள், பீன்ஸ் மற்றும் முழு தானியங்கள் அடங்கும். மத்தி, சால்மன் மற்றும் கானாங்கெளுத்தி போன்ற மீன்கள், ஆரோக்கியமான எண்ணெய்கள், கொட்டைகள் மற்றும் ஒமேகா—3 மீன் எண்ணெய் போன்றவை அடங்கும்.சீரான இடைவெளியில் சாப்பிடுவதும், பசியாறியதும் சாப்பிடும் அளவை நிறுத்துவதும் மிக முக்கியம்.உடற்பயிற்சி செய்வதன் மூலம் உங்களுடைய ரத்த சர்க்கரை அளவு குறையலாம்.

பிரிட்டனின் தேசிய சுகாதார அமைப்பு **(NHS)** ஒரு வாரத்திற்கு 2.5 மணிநேர ஏரோபிக் செயல்பாட்டில் ஈடுபட பரிந்துரைக்கிறது, இதில் வேகமாக நடப்பது மற்றும் படிக்கட்டுகளில் ஏறுவது போன்ற செயல்பாடுகள் அடங்கும்.ஆரோக்கியமாக உடல் எடை இருந்தால் உங்கள் ரத்தத்தில் சர்க்கரை அளவு குறைவதை எளிதாக்கும். நீங்கள் எடை இழக்க வேண்டும் என்றால், மெதுவாக அதை செய்ய முயற்சி செய்யுங்கள், வாரத்திற்கு 0.5 கிலோ முதல் 1 கிலோ வரை என தொடங்குங்கள்.

காணொளிக் குறிப்பு, கொரோனாவில் இருந்து மீண்டவர்கள் கணிசமாக நீரிழிவு நோயால் பாதிக்கப்படுகிறார்கள்இதய நோய் அபாயத்தைக்

குறைக்க புகைப்பிடிக்காமல் இருப்பதும், கொலஸ்ட்ரால் அளவைக் கண்காணிப்பதும் முக்கியம்.



ரத்த ஓட்டத்தில் அதிக அளவு சர்க்கரை இரத்த நாளங்களை கடுமையாக சேதப்படுத்தும்.உங்கள் உடலில் ரத்தம் சரியாக ஓடவில்லை என்றால், அது உடலின் தேவையான பாகங்களை அடையாது, நரம்பு சேதம் (உணர்வு மற்றும் வலி இழப்பு), பார்வை இழப்பு மற்றும் கால் தொற்று ஆகியவற்றின் அபாயத்தை அதிகரிக்கும். குருட்டுத்தன்மை, சிறுநீரக செயலிழப்பு, மாரடைப்பு, பக்கவாதம் மற்றும் கீழ் மூட்டுகள் துண்டிக்கப்படுவதற்கு நீரிழிவு ஒரு முக்கிய காரணம் என்று உலக சுகாதார அமைப்பு கூறுகிறது. சர்க்கரை நோய் வராமல் தடுக்க அல்லது வந்தால் அதைக் கட்டுப்பாட்டில் வைக்க, எப்போது சாப்பிட்டாலும் முதலில் நார்ச்சத்து நிறைந்த காய்கறிகள் சாலட்டில் ஆரம்பித்து, அதற்கு அடுத்தபடியாக புரதம் நிறைந்த உணவுகளையும், இறுதியாக கார்போஹைட்ரேட் நிறைந்த உணவுகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். சாலடுகள், அனைத்துக் காய்கறிகளின் ஊட்டச் சத்தையும் உள்ளடக்கிய சிறந்த உணவாகும். அவை குறைந்த கலோரிகள் மற்றும் அதிக ஊட்டச்சத்துகள் கொண்டவை.

இந்த முறையில் நீங்கள் சாப்பிட ஆரம்பித்தால் 46% ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிப்பதைத் தடுக்க முடியும். இதே உணவு முறை டைப்— 2 சர்க்கரை நோயாளிகளின் ரத்த சர்க்கரை அளவை 53% குறைக்கும் என்கிறார்கள். நியூயார்க் வெஸ்ட் கார்னெல் மெடிசன் அமைப்பு ஆராய்ச்சியாளர்கள், சாப்பிட்டவுடன் நமது ரத்தத்தில் சர்க்கரையை அதிகரிப்பது ஜிஎல்பி—1 என்ற ஹார்மோன்தான்; மேற்கண்ட வகையில் சாப்பிடும்போது ஜிஎல்பி—1 தீவிரம் தவிர்க்கப்படுகிறது என்கிறார்கள்.

சர்க்கரை அளவை எப்போதும் கட்டுப்பாட்டில் வைக்க உங்கள் உணவில் 55% கார்போஹைட்ரேட் உணவுகளும், 35% புரதம் நிறைந்த உணவுகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்கள் கனடா ஆன்டரியோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள். காலை உணவைத் தவிர்ப்பவர்களுக்கு இன்சுலின் செயல்பாட்டில் முடக்கம் ஏற்படுகிறது. வளர்சிதை மாற்றம் சரியான முறையில் நடைபெறுவது இல்லை. இதனால் ரத்த சர்க்கரை அளவு அதிகரிக்கும்.

உடற்பயிற்சி, யோகா, நடைபயிற்சி, ஓடுதல் அல்லது இதுபோன்ற எந்த வேலை செய்தாலும் அது ரத்த சர்க்கரை அளவு அதிகரிப்பதைத் தடுக்கும். இதன் காரணமாக, சர்க்கரையின் அளவில் உடனடி அதிகரிப்போ குறைவோ இல்லாமல் கட்டுப்பாட்டில் இருக்கும். சர்க்கரை நோய் உள்ளவர்கள் சாப்பிட்ட பிறகு 60 நிமிஷங்கள் கழித்து 5 முதல் 10 நிமிஷங்கள் நடந்தாலே சர்க்கரை அளவு கட்டுப்பாட்டில் இருக்கும் என்கிறது ஓர் ஆய்வு. தேவையற்ற மன அழுத்தம் உடலில் தேவையற்ற ஹார்மோன்களை வெளியிடுவதால் ரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகரிக்கும் அபாயம் உள்ளது. நல்ல தூக்கம் தேவை. ஓர் ஆரோக்கியமான நபர் 7 முதல் 8 மணி நேரம் தூங்க வேண்டும். தூக்கமின்மையால் கிளைசமிக் அளவு அதிகரிக்கிறது. சர்க்கரை கட்டுப்பாட்டுக்கு கிளைசமிக் அளவைக் கட்டுப்படுத்துவது மிகவும் முக்கியம். எனவே, இரவு ஆரோக்கியமான தூக்கம் அவசியம் என்கிறார்கள்.




பொதுவாக ரத்த சர்க்கரை அளவை சரியாக வைத்துக் கொள்வதில் தண்ணீர் முக்கியப் பங்கு வகிக்கிறது. உடலில் நீர்ச்சத்து குறைவாக இருக்கும்போது ரத்த சர்க்கரையின் அளவு அதிகரிக்க காரணமாகிறது. தினமும் 2 முதல் 3 லிட்டர் தண்ணீர் குடிப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

பொறுப்பு துறப்பு: இங்கே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் வீட்டு வைத்தியம் மற்றும் பொதுவான தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றை பின்பற்றுவதற்கு முன் கண்டிப்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும். அய்தமிழ் இந்த தகவல்களுக்கு பொறுப்பேற்காது.)

# அஞ்சாமை

### தயக்கம் வேண்டாம்!

உலக மக்களில் அதிகப்படியானோருக்கு பயம் என்பது எது என்றால் பலருக்கு முன்பாகப் பேசுவதுதான். இத்தகைய பயம் மாணவ, மாணவிகளிடையே மட்டுமின்றி பல்வேறு பணிகளில் இருப்பவர்களிடமும் இருக்கிறது.


பலருக்கு முன்பு பேசத் தயங்கும் மாணவ, மாணவிகள்தான் வாய்மொழித் தேர்வு, தனியார் அல்லது அரசுப் பணிக்கான நேர்முகத் தேர்வு போன்றவற்றிலும் பேசத் தயங்குகின்றனர்.

வார்த்தைகள் வராதது, நன்றாகத் தெரிந்த நிகழ்வுகள் மறந்து போதல், தொடர்ச்சியாகப் பேச முடியாதது போன்றவையெல்லாம் பதற்றத்தின் வெளிப்பாடுகள்தான். அத்தகைய சூழ்நிலையிலிருந்து வெளியே வந்ததும் அனைத்து நிகழ்வுகளும் தெளிவாகத் தெரியும், பேச்சு கோர்வையாக வரும்.

அனைத்து தரப்பினரிடமும் இதுபோன்ற பிரச்னை இருந்து வருகிறது. இணைபிரியா தம்பதியர், நண்பர்கள், தோழிகள் என்று கூறுபவர்களை தனித்தனியே சந்தித்துப் பேசினால் தங்கள் மனக்குமுறல்களை வெளிப்படுத்துவர். சமூகத்தில் இவ்வகையானோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

சிக்கலான சூழல்கள், பிரச்னைகள் என்பது பெரும்பாலானோருக்கு வரக்கூடியவைதான். ஆனால், இன்றைய சூழலில் மட்டும் பிரச்னைக்கு உரியவர்கள் இப்படி ஏங்குவது ஏன்? சிறிய பிரச்னைகள்கூட ஏன் சிக்கலாக்கப்படுகின்றன என்றெல்லாம் கேள்விகள் எழலாம். இதற்கு மனம்விட்டுப் பேசாதது உள்ளிட்ட பல காரணங்கள் இருந்தாலும், குடும்ப அமைப்பு சிதறுண்டு போனதுதான் முக்கியக் காரணமாகும்.

முன்பெல்லாம் நம் குடும்ப அமைப்பில் அப்பா, அம்மாவைக் கடந்து சித்தப்பாக்களும், சித்திகளும், மாமாக்களும், அத்தைகளும் ஒரே வீட்டில் இல்லையென்றாலும் அருகருகே இருந்தனர். அதனால், ஆலோசனைகள் தேவைப்படும் அளவுக்கு பிரச்னைகள் எழவில்லை. ஆலோசனைகள், அறிவுரைகள் வாயிலாக








# மேதைமை!

பிரச்னைக்குத் தீர்வு காணப்பட்டது.

கடந்த காலங்களில் தம்பதியிடையே பிரச்னை என்றாலும் பேசித் தீர்வு காணப்பட்டது. அதனால்தான், அப்போது மணமுறிவு என்பது அரிதாக இருந்தது. இன்று கணவன்—மனைவி, குழந்தைகள் என நான்கு பேர் மட்டுமே வாழும் வீட்டில்கூட மனம்விட்டுப் பேசாததால்தான் மணமுறிவு என்பது ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது.

மனதில் தோன்றும் எண்ணங்களை, கருத்துகளை ஏதாவதொரு உறவிடம் கூறித் தீர்வு காணும் நிலை அன்று இருந்தது. ஆனால், இன்று இவ்வகையான உறவுகள் திசைக்கு ஒன்றாக சிதறிப் போனதுடன் குடும்பம் என்பது இரண்டும், மூன்றுமாகச் சுருங்கிப் போய்விட்டன. பிரச்னையே அவர்களுக்குள் எனும்போது யாரிடம் சென்று பேசுவார்கள்?.

வேலை, கல்வி, வாழ்க்கைத்தரம் போன்றவற்றால் உறவுகள் பல திசைகளிலும் இருக்கின்றனர். இவ்வகையான உறவுகள் அவ்வப்போதோ அல்லது

பெ.சுப்ரமணியன்


பண்டிகைகள், திருவிழாக்கள் காலத்தின்போதோ ஒன்று கூடினால் ஒருவரையொருவர் அறிந்து கொள்வர். ஆனால், திருமணம் போன்ற நிகழ்வுகளின்போது மட்டுமே சந்தித்துக் கொள்கின்றனர்.

இதனால், உறவுகள் வட்டம் மட்டுமின்றி நட்புகளும் குறைந்து வருகின்றன என்பதுதான் உண்மை. ஆனால், சிக்கல்கள் அதிகரித்தவண்ணம் உள்ளன. அதனால், நமக்குத் தேவையில்லாத, நன்மை தராத, கசப்பான உணர்வுகள் என அனைத்தையும் எதிர்கொள்ள நேரிடுகிறது. இவற்றை யாராவது ஒருவரிடம் மனம் விட்டுப் பேசினால் அந்த எண்ணங்கள் மறைந்து போவதுடன் தீர்வும் கிடைக்கும். அவ்வாறில்லாமல் இவற்றையெல்லாம் மனதுக்குள்ளேயே தேக்கி வைப்பதால் அது நம்மை காலங்காலமாக ஆட்டிப்படைக்கும் சிக்கலாக உருமாறி விடுகிறது.




அவமானம், துக்கம், பொறாமை, துரோகம், வஞ்சம், ஏமாற்றம், ஆற்றாமை, கோபம், குற்ற உணர்வு என ஏதோ ஒன்றை எவரிடமும்






சொல்லாமல் மனதுக்குள்ளேயே வைப்பதால் அது நம் செயல்பாடுகளை, நடத்தையை மாற்றுவதுடன் உடல் உறுதியையும் கெடுத்து விடுகிறது.

இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் இணையவழியில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இதில் பங்கேற்கும் சிறப்பு விருந்தினர்களுடன் எளியோரும் பங்கேற்றுப் பேசுகின்றனர். இத்தகைய வாய்ப்புகள் இன்றைய தலைமுறையினருக்கு ஏராளமாக உள்ளன. அதற்கேற்ப நாம்தான் மாற்றம் காண வேண்டும். பள்ளி, கல்லூரிகளிலும், மாவட்ட, மாநில அளவிலும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.இதில் பங்கேற்பாளர்களாகவோ, பார்வையாளர்களாகவோ கலந்து கொள்ளும்போது கூச்ச சுபாவமின்றி பேசும் மனப்பாங்கு அதிகரிக்கும்.

தற்போதைய சூழலில் பணிச்சூழல் முற்றிலும் மாறிவிட்டது. புதிய இயந்திரங்களின் வரவால் புதிய புதிய பிரச்னைகளும் வேர்விட்டு வருகின்றன. அந்தப் பிரச்னைகளுக்கு எளிய, சிறந்த தீர்வை வழங்குபவர்களையே நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன. எனவே, எந்தவித துறைசார்ந்த பிரச்னைகளுக்கும் தீர்வு காணும் திறன் நம்மிடம் காணப்படுவது கூடுதல் பலமாக அமையும்.

எந்தவொரு வேலை செய்வதற்கும், தொழிலை நடத்துவதற்கும் பல்வேறு திறன்கள் இருந்தால்தான் வெற்றிக்கான வாய்ப்புகள் வெகு எளிதில் வாய்க்கக்கூடும் என மனித வள திறன்கள் குறித்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பள்ளி மற்றும் கல்லூரிக் காலத்தில் கற்றுக் கொள்வதைத் தவிர தலைமைப் பண்பு, பொறுப்பெற்கும் பண்பு, மொழி ஆளுமை போன்றவற்றோடு பேச்சுத் திறனும் முக்கியம் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

தகுதியானவை தப்பிப் பிழைக்கும் என்பது சார்லஸ் டார்வினின் பரிணாமக் கோட்பாட்டில் உள்ள இயற்கைத் தேர்வு என்ற கருத்தின் ஒரு பகுதியாகும். இது பரிணாமக் கோட்பாட்டுக்கு மட்டுமின்றி இன்றைய பட்டதாரி இளைய தலைமுறைக்கும் பொருந்தும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பயத்தில் சில வகை, நம் பிறவியிலிருந்தே உள்ளுணர்வாக இருக்கலாம். சிலருக்கு நாயைக் கண்டாலே பயம்;






சில பெண்களுக்கு பல்லி. மிகப் பலருக்கும் பாம்பு. சிலருக்கு மின்னல், இடி. இப்படிப் பலவும் உண்டு.

என் நண்பர் ஒருவருக்கு விமானப் பயணம் என்றாலே பயம்! ஆனால் சொந்தக் காரை ஹைவேயில் வேகமாய் ஓட்டியவாறே பயணம் செய்வதில் எந்த பயமும் இல்லை. அதில் ரொம்பவே குஷி! நான் அவரிடம், “பார்க்கப் போனால், உங்களுக்கு கார் ஓட்டிச் செல்லும்போது விபத்து நிகழும் வாய்ப்பு, நீங்கள் விமானத்தில் பயணிப்பதைவிட மிக மிகக் கூடுதல்!” என்று சொல்வதுண்டு. ஆனாலும் அதை ‘லாஜிக்கல்’ ஆக சிந்தித்துப் பார்த்து அவரால் விமானப் பயணபயத்தை நீக்கிக் கொள்ள இயலாது. காரணம் அந்தப் பயம் உள் உணர்வில் தங்கியிருக்கிறது. அத்தனை எளிதில் அதை நீக்கிவிட முடியாது. ஒரு வேளை அவர் முன் ஜன்மத்தில் ஒரு விமான விபத்தில் உயிரிழந்திருக்கலாம்!




பல்லியைக் கண்டு பயத்தில் உடம்பு சிலிர்க்கும் பெண்ணிடம் நீங்கள், ‘பல்லி ஒரு அப்பிராணி; விஷம் கிடையாது; கடிக்காது’ என்று எத்தனை சொன்னாலும் மண்டையில் ஏறாது. ஒரு வேளை அவர் ஏதோ ஒரு முற்பிறவியில் ஒரு பூச்சியாய் இருந்து பல்லியால் விழுங்கப்பட்ட நினைவு ஜீவனில் தங்கியிருக்கலாம்!

பயமென்பது ஒரு மனோ நிலையாகவும் சில சமயத்தில் இருக்கலாம். எத்தனையோ திறமை இருந்தும், சிலர் சொந்தத் தொழிலில் இறங்க மாட்டார்கள். மாச சம்பளத்திற்கு மட்டும் தான் வேலை பார்ப்பார்கள். ‘ஒரு வேளை சொந்தமாய் ஆரம்பித்து நான் தோற்றுவிட்டால்?’ என்கிற பயம் இருக்கும். சில மோசமான அனுபவங்கள் இதுவரை இல்லாத பயத்தை உண்டாக்கலாம். தெரு நாய்களிடம் கொஞ்சி விளையாடும் ஒருவரை திடீரென்று ஒரு நாய் கடித்துவிட்டால்? பின்னர் அந்தப் பயம் அவரைப் பிடித்துக்கொள்ளும். மீண்டும் நாய்களோடு விளையாடுவதில் கண்டிப்பாய் பயம் வரும்.

பாம்புகளிடம் பயமின்றி விளையாடுபவர்கள் ஒரு நாள் பாம்புக் கடி பட்டு சாவதும் நிகழ்கிறது.




தண்ணீரில் நீஞ்சுவதை ஆனந்தமாகச் செய்பவர் ஒருவர் ஒரு நாள் நீரில் மூழ்கி சாவதும் எப்போதாவது நிகழ்கிறது. ஏதோ ஒரு நாட்டில் ஒரு சொல்வழக்கு உண்டாம். ‘நீரில் மூழ்கி சாகிறவர்களில் நீந்தத் தெரியாயதவர்களை விட தெரிந்தவர்களே கூடுதல்’ என்று! தெளிவில்லாத எண்ணங்களை குறைக்க , நல்ல எண்ணங்களை நாம்தான் உருவாக்கவேண்டும் . நமக்கு நாமே தைரியம் சொல்லிக்கொண்டு, உற்சாகமான மனநிலையை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

பயம் சிலரது முன்னேற்றத்தைத் தடுக்கக் கூடும். அது உண்மையே. அதே சமயம், திருவள்ளுவர் சொல்லியதையும் மனதில் வைத்துக்கொள்வது நல்லது.

‘அஞ்சுவது அஞ்சாமை பேதைமை’.

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

2025

JANUARY




FEBRUARY





MARCH




APRIL




MAY




JUNE




JULY




AUGUST




SEPTEMBER





OCTOBER




NOVEMBER




DECEMBER



அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com








Email:
editor@ithamil.com

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™